Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU


விஷானி நகை மாளிகை
மங்கையர் மனம் கவரும் தங்க நகைகளுக்கு
இல. 187, கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.
0212219510 (C/1675)

முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2043 ஐப்பசி 06 திங்கட்கிழமை (22.10.2012) பக்கங்கள் 20 ஓசை – 022


முடங்கும் விற்பனை? 06


நாட்டுக்குப் பெருமை சேர்க்க வேண்டும்! 09


அது என்னாலும் முடியும்! 10


ஒப்படைப்பு 14


சாதனை! 17

# 13 ஆம் திருத்தத்தை அகற்றக் கூடாது

## வலியுறுத்துகிறார் டியூ



(கொழும்பு)

13 ஆம் திருத்தச் சட்டத்தை அரசு அகற்றக் கூடாது என ஆளும் கட்சியின் சிரேஷ்ட அமைச்சர் டியூ.குணசேகர தெரிவித்துள்ளார். 13 ஆம் திருத்தச் சட்ட அமுலாக்கமே, விடுதலைப் புலிகளைத் தவிர்ந்த ஏனைய தமிழ் ஆயுதக்குழுக்கள், ஆயுதங்களைக் களைய வழிகோலியது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் ஊடாக அதிகாரங்களைப் பகிர்வதற்கு ஜனாதிபதி விரும்புவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். எனினும், 13 ஆம் திருத்தச் சட்ட மூலத்தை இரத்துச் செய்வதன் மூலம் மீண்டும் தமிழ்ப் பிரிவினைவாதம் தலைதூக்கக் கூடிய அபாயம் நிலவுகின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அண்மையில் 13 ஆம் திருத்தச் சட்டம் தொடர்பில் பாதுகாப்புச் செயலாளர் வெளியிட்ட கருத்து ஏற்புடையதல்ல என டியூ.குணசேகர குறிப்பிட்டுள்ளார். 19 ஆம் பக்கம் பார்க்க

### ஜனாதிபதி பயணம்

(கொழும்பு)

மூன்று நாள் உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஐக்கிய அரபு எமிரேட்ஸிற்கு நேற்று மாலை பயணமாகியுள்ளார்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸில் இன்று முதல் 24 ஆம் திகதி புதன்கிழமை வரை நடைபெறவுள்ள உலக சக்தி மாநாட்டில் கலந்துகொள்வதற்காகவே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அங்கு விஜயம் செய்துள்ளார்.

நியூயோர்க்கிலுள்ள ஐக்கிய நாடுகள் தலைமைக் காரியாலயத்திற்கு வெளியில் முதற் தடவையாக நடைபெறும் இந்த மாநாட்டில், 15 நாடுகளின் அரச தலைவர்களும் 40 சக்தி தொடர்பான அமைச்சர்களும் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கே.பி.யை ஒப்படைக்க இந்தியா கோரலாம்

(கொழும்பு)

குமரன் பத்மநாதன் குறித்து இந்திய மத்திய அரசு தீவிரமாக ஆராய்ந்து வருகிறது என்றும் அவரைத் தம்மிடம் ஒப்படைக்கும்படி இந்தியா கோரக்கூடும் என்றும் திவயின என்ற பத்திரிகை தகவல் வெளியிட்டிருக்கிறது.

முன்னாள் இந்தியப் பிரதமர் அமரர் ராஜீவ் காந்தி படுகொலை வழக்கின் சந்தேக நபர்களில் 19 ஆம் பக்கம் பார்க்க

## கருத்துக் கணிப்பு நடத்தி திருத்தத்தை அகற்றலாம்



(கொழும்பு)

அரசியல் அமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நீக்க வேண்டுமாயின் அது தொடர்பாக மக்களின் அபிப்பிராயத்தை அறிய வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று தேசிய விடுதலை முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் எழுத்து மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

13ஆவது அரசியலமைப்பு சீர்திருத்தத்தினை அடிப்படையாக வைத்து நாடு அரசியல் அழிவை நோக்கிச் செல்வதாகவும் எனவே அத்திருத்தத்தை முற்றாக அகற்றுவது குறித்து முடிவு செய்ய முன்னர் மக்களின் கருத்தை அறிய 19 ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.திவிநெகும பேரணி அரசியல் நோக்கமற்றது

### விழிப்புணர்வு ஏற்படுத்துவதே இலக்கு என்கிறார் இணைப்பாளர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் இடம்பெற்ற திவிநெகும ஆதரவுப் பேரணி எந்தவிதமான அரசியல் இலக்குகளுமற்றது என்றும், சமுர்த்திப் பயனாளிகளுக்கும், சமூகத்திற்கும் திவிநெகும தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகவே மேற்கொள்ளப்பட்டது என்றும், இது போன்ற விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களுக்கு சமுர்த்தி கொடி தினம் மூலமாகப் பெறப்பட்ட நிதியின் ஒரு பகுதியைப் பயன்படுத்துவதில் எந்தவிதமான தவறும் இல்லை என்றும் யாழ்.மாவட்ட சமுர்த்தி இணைப்பாளர் ஆ.இரகுநாதன் தெரி 19 ஆம் பக்கம் பார்க்க

## வன்னியிலிருந்து தென்பகுதிக்கு கைத்துப்பாக்கிகள் கடத்தல்

### ஓமந்தை சோதனையில் சிக்கியது

யாழ்ப்பாணத்திலிருந்து கண்டி நோக்கி பயணித்துக் கொண்டிருந்த பஸ்ஸிலிருந்து கை துப்பாக்கிகள் மற்றும் வெடி பொருட்கள் என பெருமளவினில் கடத்திச் செல்ல தயாராக இருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.இதையடுத்து சந்தேகத்தின் அடிப்படையில் வன்னியிலிருந்து பயணித்துக் கொண்டிருந்த நான்கு இளைஞர்கள் ஓமந்தை பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.அத்துடன் குறித்த பஸ் மற்றும் அதன் சாரதி, நடத்துனர்களும் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். எனினும் குறித்த பஸ்ஸில் பயணித்துக் கொண்ருந்த 19 ஆம் பக்கம் பார்க்க

## குடத்தனையில் துப்பாக்கிச் சூடு

குடத்தனையில் நேற்றிரவு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றிருக்கிறது.

இந்தச் சம்பவத்தில் எவருக்கும் சேதம் ஏற்படவில்லை.

இர்வு 8.30 மணியளவில் இப்பகுதியில் திருட்டுத் தனமாக சிலர் மண் அகழ்வில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அங்கு படையினரின் ரோந்து அணி சென்றது. படையினரைக் கண்டதும் மணல் அகழ்வில் ஈடுபட்டவர்கள் ஓட்டம் பிடித்தனர். அப்போது படையினர் வானத்தை நோக்கித் துப்பாக்கிப் 19 ஆம் பக்கம் பார்க்க

## இந்திய விஜயத்தில் ஏன் இந்தப் புறக்கணிப்பு

### கூட்டமைப்புக்குள் குழப்பம்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இறுதியாக மேற்கொண்ட இந்திய விஜயம் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளுக் கிடையில் முரண்பாடுகளை உருவாக்கியுள்ளது.

ஆனந்தசங்கரி, சித்தார்த்தன் ஆகியோர் தம்மை இந்திய விஜயத்தின் போது புறக்கணித்துவிட்டதாக கடும் கண்டனங்களை வெளியிட்டிருக்கின்றனர்.

இவ்வாறான முரண்பாடுகளைத் தீர்த்து வைக்கும் நோக 19 ஆம் பக்கம் பார்க்க



கிழக்கு ஒலுவில் கடற்கரை நோக்கி படையெடுக்கும் மீன்கள்...

இணையத்தில் தினமுரசு
www.thinamurasu.net

# தொழிற் பயிற்சி அதிகார சபையின் முன்னேற்றத்திற்கான பயிற்சிகள்

இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபையானது புதிய தொழிற் பயிற்சிக்கான விண்ணப்பங்களை உங்கள் முன்னேற்றத்திற்கானதொழிற் பயிற்சிகள் என்ற தலைப்பில் கையேடாக வெளியிட்டுள்ளது. தொழிற் பயிறசிகள் 6 மாதங்களை கொண்டதாக அமையும் எனவும் இப் பயிற்சி நெறியினை பூர்த்தி செய்பவர்களுக்கு என்.வி.கியு. சான்றிதழ் வழங்கப்படும் எனவும் இவ் தொழிற்பயிற்சி நெறியின் அடுத்த பிரிவு வகுப்புகள் தை மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபையின் யாழ்ப்பாண அலுவலகம் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபம் 1ஆம் மாடியில் அமைந்துள்ளது. கைதடி, சுன்னாகம், காரைநகர் கரவெட்டி, ஊர்காவற்துறை ஆகிய இடங்களில் இலங்கை தொழில் பயிற்சி அதிகாரசபையின் தொழில் பயிற்சி நிலையங்கள் அமைந்துள்ளன.

தொழிற் பயிற்சிகள் நடைபெறும் இடங்களும் தரப்பட்டுள்ளன. அவ் அடிப்படையில் கணினி வன்பொருள் திருத்தல் யாழ்ப்பாணத்திலும், கட்டட நிர்மாண தொழில்நுட்பம்- காரைநகர், கைதடி ஆகியஇடங்களிலும், முச்சக்கர மோட்டார் சைக்கிள் திருத்துதல் - காரைநகர் நல்லூர் ஆகிய இடங்களிலும், வீட்டு மின்னிணைப்பு - காரைநகர், சண்டிலிப்பாய் ஆகிய இடங்களிலும் தொழில்களை மின்னிணைப்பினர் - சுன்னாகத்திலும் அலுமினியம் பொருத்துனர் - கரவெட்டியிலும், காய்ச்சி இணைத்தல் - கைதடியிலும் ஆடை வடிவமைப்பு - காரைநகர்,கைதடியிலும், அழகுக்கலை வல்லுனர் - சண்டிலிப்பாயிலும் வெளி இணைப்பு இயந்திரம் திருத்துனர் - ஊர்காவற்துறையிலும், குளிர்சாதன உபகரணம் திருத்துனர் -பருத்தித்துறையிலும் டீசல் இயந்திரம் திருத்துனர் - கைதடியிலும் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம் யாழ்ப்பாணம், கைதடி காரைநகர், சுன்னாகம் ஆகிய இடங்களிலும்,

தகவல் தொடர்பாடல் தொழில நுட்ப தேசிய டிப்ளோமா யாழ்ப்பாணத்திலும் நடாத்தப்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ள தொழில பயிற்சி அதிகார சபை புதிய பிரிவில் பயிற்சி பெறவிரும்பும் மாணவர்களை தங்கள் சுய விபரக்கோவையினை நேரத்துடன் அருகிலுள்ள தொழிற் பயிற்சி நிலையத்துக்கு அனுப்பி வைக்குமாறும்,

மேலதிக தொடர்பிற்கு 0212227949, 021 2241851, 0212057047 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன்தொடர்பு கொள்ளலாம். எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அனைத்து என்.வி.கியு. சான்றிதழ்களுக்கான பயிற்சிகளுக்கான பயிற்சிக்காலம் 3 மாதம் எனவும் விசேட கற்கை நெறிகள் 1வருடத்தை கொண்டவை பயிற்சியின் பின் வேலைப் பயிற்சிக்காக அலுவலகங்கள், தொழிற்சாலைகளில் இணைத்து விடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (42)

## பரீட்சைக் கலந்துரையாடல்

துணுக்காய் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் மத்திய கல்வி அமைச்சினால் நடாத்தப்படும் தேசிய மட்ட க.பொ.த. (சா/த) முன்னோடி பரீட்சைகளை உரிய திகதிகளில் தங்களது பாடசாலைகளில் நடாத்தி விடைத்தாள்களை திருத்தி விடைத்தாள்களுடன் தங்களது மாணவர்களை கீழ்க் குறிப்பிடும் திகதிகளில் க.பொ.த. (சா/த) வகுப்புகள் நடைபெறும் நிலையத்திற்கு மீட்டலுக்காக அனுப்பி வைக்குமாறு துணுக்காய் கல்வி வலயப் பணிப்பாளர் திருமதி எல்.எம். வெனிற்றன் கேட்டுக் கொண்டுள்ளார்.

25.10.2012 அன்று தமிழ் பாடம் அதே பாடசாலையிலும் மீட்டலினை மேற்கொள்ளுமாறு தெரிவித்துள்ளதுடன் 26ஆம் திகதி காலை 8.00 மணிக்கு விஞ்ஞான பாடமும், 12.30 மணிக்கு ஆங்கில பாடமும், 27ஆம் திகதி காலை 8.00 மணிக்கு கணித பாடமும் 12.30 மணிக்கு வரலாறு பாடமும் மீட்டல் இடம் பெறும் என அறிவித்துள்ளார். (42)

# அடிக்கல் நாட்டு விழா



அரியாலை நாவலடியில் வீட்டுத்திட்டத்திற்கான அடிக்கல்லை ஈ.பி.டி.பியின் நல்லூர் பிரதேச அமைப்பாளரும், நல்லூர் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவருமான அம்பலம் இரவீந்திரதாசன் நாட்டி வைத்தார்.

கடந்த 17ஆம் திகதி நாவலடிப் பகுதியில் வறுமைக்கோட்டில் வாழும் மூன்று குடும்பங்களுக்கு C.H.F நிறுவன பங்களிப்புடன் எட்டு இலட்சம் ரூபா பெறுமதியான வீட்டுத்திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

இதன்போது கிராமஅலுவலர் விஜிதன், நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் வ.சிறிகணேசா, C.H.F நிறுவன அதிகாரி எஸ்.ரஞ்சித் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மானம்பூ திருவிழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி விளைவேலி அருள்மிகு ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ தான மானம்பூ விழா புதன்கிழமை மாலை நடைபெறவுள்ளது.

அம்பாளின் அருளால் நவராத்திரி விழா இனிதே நடைபெற்று வருகின்ற இவ்வேளையில் இறுதி நாளான புதன்கிழமை மாலை மானம்பூ திருவிழா சிறப்பாக நடைபெறவுள்ளது.

மாலை 3 மணிக்கு அம்பாள் புறப்பட்டு கன்னிவாழை வெட்டு நடைபெறும். தொடர்ந்து பிராயச்சித்த அபிசேகம் நடைபெறும் என்றும் ஆலய தர்மகர்த்தா தெரிவித்தார்.

மானம்பூ திருவிழா நிறைவுபெற்றதும் கேதார கௌரிவிரதம் ஆரம்பமாகவுள்ளது. விரதம் அனுஷ்டிப்போர் தமது பெயர்களை ஆலய அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# முன்னோடிப் பரீட்சை

மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்தும் நோக்கில் இலங்கை கல்வி அமைச்சினால் தேசிய மட்டத்தில் க.பொ.த. (சா/த) முன்னோடிப்பரீட்சைகள் இன்று முதல் கட்டாய பாடங்களுக்கு சமயம் தவிர்த்து நடத்தப்பட உள்ளன. 22.10.2002 காலை 9.00 மணிக்கு விஞ்ஞான பாடமும், பிற்பகல் 1.00 மணிக்கு ஆங்கில பாடமும், 23.10.2012 காலை 9.00 மணிக்கு கணித பாடமும், பிற்பகல் 1.00 மணிக்கு வரலாறு பாடமும், 25.10.2012 9.00 மணிக்கு தமிழ் பாடமும் நடைபெறவுள்ளது. (42)

# மானிய உரவினியோகம்

வேலணை கமநல கேந்திர நிலையத்தில் பெரும் போக நெல் வேளாண்மையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கான மானிய உர விநியோகம் இடம் பெற்றுவருகிறது. கடந்த வெள்ளிக்கிழமை காலை வேலணை கமநல சேவைகள் நிலையத்தில் வைத்து வேலணைப்பகுதிக்கான விவசாய சம்மேளனத்தலைவர் பா.தவபாலனினால் இந்த விநியோகம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (05)

# பட்டமளிப்பு விழா

(வேலணை)

யாழ்ப்பாணத்தில் இயங்கி வருகின்ற ஈசிற்றி ஆங்கில கல்வி நிறுவனத்தில் ஆங்கிலக் கல்வியினைக் கற்று வெளியேறியுள்ள மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழாவும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் கடந்த 19ஆம் திகதி வெள்ளிக் கிழமை மாலை 3.00 மணியளவில் மூர்த்தி விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது.

ஈசிற்றி ஆங்கிலக்கல்வி நிறுவனத்தின் அதிபர் லயன் ஜெ.ரஜீவன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், பிரதம விருந்தினராக பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் கலந்து கொண்டு சிறப்பித்ததுடன் மாணவர்களுக்கான பட்டங்களையும் சான்றிதழ்களையும் வழங்கி வைத்துள்ளார்.

# கால் நடைகளை கட்டுமாறு அறிவுறுத்தல்

(காரைநகர்)

காரைநகரில் இம்முறை மிகப்பெரிய அளவில் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனால் கால் நடைகளை வளர்ப்போர் அவற்றைக் கட்டி வைத்து வளர்க்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.வயல் நிலங்களில் அத்துமீறிப் பிரவேசித்து நெற்பயிர்களை அழிவுக்குள்ளாக்கும் கால் நடைகள் விவசாய சம்மேளனத்தினால் பிடித்துக் கட்டப்படுமென்றும் உரிய நட்டஈடு செலுத்திய பின்னரே அக் கால்நடைகள் உரிமையாளரிடம் ஒப்படைக்கப்படும் என்றும் நட்டஈடு செலுத்தப்படாத உரிமை கோரப்படாத கால்நடைகள் ஏலத்தில் விற்கப்படுமென்றும் விவசாய சம்மேளனத்தைச் சேர்ந்த பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடங்களில் காரைநகரில் கால் நடைகளால் பெருமளவு பயிர்ச்சேதம் ஏற்பட்டதால் விவசாயிகள்பலர் நெற்செய்கையைக் கைவிட்டமையும் குறிப்பிடத்தக்கது. (10)

# தரம் 1 இல் மாணவர்களை சேர்த்துக்கொள்ளும் நடைமுறை

2013ஆம் ஆண்டிற்கு புதிய மாணவர்களை சேர்த்துக் கொள்ளும் பொழுது தரம் 1 இற்கு புதிய மாணவர்களை சேர்த்துக் கொள்ளல் தொடர்பாக 2012ஆம் ஆண்டு வெளியான சுற்று நிருபத்திற்கு அமைவாக செயற்படும்படி சகல பாடசாலைகளுக்கும் கல்வி அமைச்சு புத்தக வடிவில் சுற்று நிருபம் ஒன்றினை அனுப்பிவைத்துள்ளது.

இதில் கண்டிப்பாக பாடசாலை அமைந்துள்ள கிராமத்தை அல்லது நகரத்தை சேர்ந்த பிள்ளைகள் அதேகிராம, நகரப் பாடசாலைகளில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் எனவும் சகல பாடசாலைகளின் மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு பாடசாலை அமைந்துள்ள கிராமப் பிள்ளைகளை வேறு பாடசாலை அதிபர்கள் சேர்த்துக் கொள்ள வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (42)



யாழ். போதனாவைத்தியசாலை நீரிழிவு சிகிச்சை நிலையத்தினால் நடாத்தப்பட்ட 'நல்லதோர் உணவுசெய்வோம்' என்ற உணவுக் கண்காட்சியில் வெற்றி பெற்றோருக்கான பரிசளிப்பு நிகழ்வும், 'நல்லதோர் உணவு செய்வோம்' நூற்றாண்டு கடந்து நீடுழி வாழ' என்ற நூல்களின் வெளியீட்டு விழாவும் நேற்றுக் காலை யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மருத்துவ பீடாதிபதி கே. பாலகுமார், போதனாவைத்தியசாலை பணிப்பாளர் எஸ். ஸ்ரீபவானந்தராஜா மற்றும் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும், விருந்தினருக்கு சிறப்பு பிரதி வழங்கப்படுவதையும் நிகழ்வில் வெற்றியீட்டியவர்களையும் காணலாம். (ஆர்.ராஜகுமார்)

# கல்குவாரி அமைப்பதை எதிர்த்து கற்குளம் மக்கள் ஆர்ப்பாட்டம்

(வவுனியா )

வவுனியா கற்குளம் பகுதியில் உள்ள சிறிய குன்றில் புதிதாக கல்குவாரி அமைக்கப்பட்டு கல் உடைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதால் கற்குளம் பகுதியில் உள்ள குடிமனைகளுக்கும் சூழலுக்கும் பெரும் பாதிப்பு ஏற்படும் எனத் தெரிவித்து கற்குளம் படிவம் 2 மக்கள் நேற்று தமது கிராமத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



பெரியவர்கள் முதல் சிறுவர்கள் பெண்கள் என பலரும் கலந்து கொண்டிருந்த இவ் ஆர்ப்பாட்டத்தில் வெடி பொருட்களால் எமது சூழலை மாசு படுத்தாதே, கல்குவாரி அமைதது எமது கல்விக்கு இடையூறு செய்யாதே, கல்குவாரி என்ற பெயரில் எமது குடிகளை நாசம் செய்யாதே, குவாரி என்ற பெயரில் எமது அரிய நீர் வளத்தை அழிக்காதே என்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை தாங்கியிருந்தனர்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த இக்கிராமத்தின் அபிவிருத்திச் சங்கத் தலைவர், எமது பகுதியில் உள்ள இயற்கை வளத்தை அழிப்பதில் சிலர் ஈடுபட்டு வருகின்றனர். இதன் காரணமாக எமது கிராமத்திற்கு நீர் வளம் அற்றுப் போவதுடன் எமது பகுதியில் உள்ள வீடுகள் உட்பட பாடசாலைகள் சூழல் என்பனவும் பெரும் பாதிப்பை எதிர்நோக்கி வரு கின்றது. இதற்கு முன்னர் இப்பகுதியில் கல் உடைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டமையினால் எமக்கு வழங்கப்பட்ட தற்காலிக வீடுகள் பெரும் பாதிப்புக்குள்ளாகியிருந்தது. அதற்கான எவ்வித இழப்பீடும் வழங்கப்படாது தற்போது மேலும் ஒரு கல் குவாரிக்கு அனுமதி பிரதேச செயலாளரினால் வழங்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக மண் வீதியாக உள்ள எமது கிராமத்திற்கான வீதிகள் சேதமடைகின்றன. அத்துடன் முன்பள்ளியில் பிள்ளைகள் கற்கமுடியாதுள்ளது. அச்சமான சூழலில் நாம் வாழவேண்டியேற்படுகின்றது எனத் தெரிவித்தார். (160)

# இந்தியா, இலங்கை, மாலைதீவு கடல் பாதுகாப்பு மாநாடு

(யாழ்ப்பாணம்)

இந்தியா, இலங்கை மற்றும் மாலைதீவு நாடுகளுக்கு இடையிலான கடல் பாதுகாப்பு தொடர்பான மாநாடு காலியில் இடம்பெற்று வருகின்றது.

இந்த மாநாட்டில் கப்பல் நடமாட்டங்கள், சுனாமி எச்சரிக்கை, கடற்கொள்ளையர்களுக்கு எதிரான நடவடிக்கைகள், கூட்டு கடற்படைப் பயிற்சிகள் போன்றவை தொடர்பில் ஆராயப்படுகின்றன.

இந்த நிலையில் கூட்டத்தின் இறுதியில், கடலில் சட்ட விரோத அத்துமீறல்களுக்கான முத்தரப்பு பொறிமுறை ஒன்றும் ஏற்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய கடல் பாதுகாப்பு பணிப்பாளர் கே ஆர்.நூட்டியால், இலங்கையின் சார்பில் கடற்படை பணிப்பாளர் ஜயந்த பெரேரா, மற்றும் மாலைதீவு பாதுகாப்பு அமைச்சர் லியாஸ் ஹுசைன் ஆகியோர் இதில் பங்கேற்கின்றனர்.

# கலைத்தேர்வுப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் கலை முதற்தேர்விற்கான (வெளிவாரி 2010) பரீட்சை எதிர்வரும் ஆறாம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் 24 ஆம் திகதி சனிக்கிழமை வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் திலும், பல்கலைக்கழக வவுனியா வளாகத்திலும் நடைபெறவுள்ளது.

மேற்படி பரீட்சார்த்திகள் நேர அட்டவணை, பரீட்சை அனுமதி அட்டை என்பவற்றை எதிர்வரும் முதலாம் திகதி வியாழக்கிழமை முதல் வவுனியா வளாகத்திலும், யாழ். பல்கலைக்கழக வெளிவாரி பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகிலும் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (54)

# பிறவுண் வீதியில் குழிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிறவுண் வீதி, குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது. இதனால் இவ்வீதி ஊடாக போக்குவரத்துச் செய்வதில் பெரிதும் சிரமங்களை எதிர்நோக்குவதாகப் பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

நீண்ட காலமாக சிறியளவாகக் காணப்பட்ட கிடங்குகள் அண்மைய மழையினால் போக்குவரத்து செய்யமுடியாதளவுக்குப் பெரிதாகியுள்ளன.

இப்பகுதியில் வெள்ளநீர் தேங்கி நிற்பதால் கிடங்குகள் தெரியாத நிலையில் விபத்துக்கள் ஏற்படுகின்றன. இதனால் இந்திய விசா அலுவலகம், பல்கலைக்கழகம், தொழில் நுட்பவியல் கல்லூரி போன்றவற்றிற்குச் செல்பவர் மற்றும் யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவிகள் எனப் பலரும் இந்த வீதியினூடாக அச்சத்துடனேயே சென்று வருகின்றனர்.

எனவே இந்த வீதியைச் சீரமைத்து சீரான போக்குவரத்துக்கு உதவிட சம்பந்தப்பட்டவர்கள் முன்வர வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளனர். (54)

# புகைத்தல் ஒழிப்பு தினப்போட்டியில் வெற்றியீட்டியோர்களுக்கு பரிசில்கள்

(யாழ்ப்பாணம்)

உலக புகைத்தல் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினால் நடாத்தப்பட்ட சித்திரம், கட்டுரைப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வும் சித்திரக் கண்காட்சியும் இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் உள்ள சொர்ணாம்பிகை மண்டபத்தில் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தலைமையில் பிற்பகல் 2 மணிக்கு இந்நிகழ்வு இடம் பெறவுள்ளது.

பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சுகாதார சுதேச வைத்திய அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரனும், கௌரவ விருந்தினர்களாக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் உதவிச் செயலாளர் ப.விக்கினேஸ்வரன், வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் வை.செல்வராஜா, வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி எஸ்.யூட் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் விருந்தினர்கள் உரை மற்றும் "இளையோர்களே போதைப்பொருள் அரக்கனை அணுக விடாதீர்'', மதுப் பாவனையை விலக்கும் இளைய தலைமுறை'', "புகைபொருள் பாவனையை மாணவர் சமுதாயத்தில் வேரோடு அழிப்போம்" ஆகிய தலைப்புக்களிலான மாணவர்களின் உரைகளும் இடம்பெறும்.

இந்நிகழ்வில் புகையிலைப் பொருட்களை விற்பனை செய்யாத வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (54)

# கல்வித் திணைக்களத்தில் வெள்ளம்

(நல்லூர்)

செம்மணி வீதியில் அமைந்துள்ள வடக்கு மாகாண சபையின் கல்வி பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் வெள்ளநீர் தேங்கி நிற்கின்றது. இதனால் இவ் அலுவலகங்களில் பணியாற்றுவோர் மற்றும் இங்கு சேவை பெறுவதற்காகச் செல்பவர்கள் இவ் வெள்ள நீரின் ஊடாகவே சென்று வரவேண்டியுள்ளதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

மழை காலத்தில் இங்கு தேங்கும் நீர் வெளியேறுவதற்கு கட்டடங்கள் தடையாக உள்ளதாகவும், இதனாலேயே நீர் வழிந்தோட முடியாது தேங்கி அவ்விடம் சேறும் சகதியுமாகக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெள்ளநீர் ஊடாகச் செல்பவர்கள் வழுக்கி விழக்கூடிய நிலையுள்ளது. குறிப்பாக சேலையுடன் செல்லும் பெண்கள் கடும் பிரயத்தனத்துடனேயே சென்று வருவதைக் காணமுடிகிறது.

இப்பகுதியில் இரு சக்கர வண்டிகளுக்கான தரிப்பிடம் அமைக்கப்பட்டு வருகிறது. இதற்கு எவ்வாறு வெள்ளநீர் ஊடாக செல்வது என பணியாளர்கள் ' கேள்வியெழுப்புகின்றனர்.

மேற்படி அலுவலகங்களுக்குச் செல்வதற்கு தார் வீதி அமைப்பதுவே இதற்குச் சிறந்த தீர்வாகும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (54)



யாழ். போதனா வைத்தியசாலையில் 1987 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 21 ஆம், 22 ஆம் திகதிகளில் கொல்லப்பட்ட 21 ஊழியர்களின்நினைவு தினம் நேற்றுக் காலை யாழ். போதனா வைத்தியசாலையில் இடம்பெற்றபோது வைத்தியசாலைப் பணிப்பாளர் பவானந்தராஜா ஈகைச்சுடர் ஏற்றுவதையும், அஞ்சலி நிகழ்வில் கலந்து அஞ்சலி செலுத்தும் தாதிய உத்தியோகத்தர்களையும் படங்களுக்கு மலரஞ்சலி செய்யப்பட்டிருப்பதையும், காணலாம். (படம்: ராஜ்குமார்)

மனிதனை மனிதனாக்குபவை உதவிகளும் வசதிகளுமல்ல. இடையூறுகளும் துன்பங்களுமே.

- மாத்யூஸ்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## ஆயுளை நீடித்துக்கொள்ளும் வழி!

மதுப்பிரியர்களும் புகைப்பிரியர்களும் குளிர், மழைக்காலத்தில்தான் உடலை வெதுவெதுப்பாக வைத்திருக்க அதிகளவில் சிகரெட்டையும் மதுவகைகளையும் பாவிக்கிறார்கள் என்று தெரியவருகிறது. வருடத்தில் இந்த மூன்று மாதங்களும் கடைகளில் மது, சிகரெட் மிக அதிகளவில் விற்பனையாவதாகக் கூறப்படுகிறது.

மழைக்காலத்தில் அதிகம் வெளியில் திரிய முடியாமல் வீட்டிற்குள் முடங்கியிருப்பதாலும் இந்தப் பாவனைகள் அதிகரிக்கின்றன. அளவுக்கு மிஞ்சினால் எதுவுமே நஞ்சாகிவிடுகிறது. உயிருக்கு விரைவாகவே உலைவைக்கிறது. இந்தப் பழக்கங்களால் ஏற்படக் கூடிய பாதிப்புகள் பற்றி ஸ்வீடன் ஆராய்ச்சியாளர்கள் சமீபத்தில் சில புதிய முடிவுகளை வெளியிட்டுள்ளனர்.

மது, புகை உள்ளிட்ட பழக்கங்களை நிறுத்திவிட்டு ஆரோக்கியமான உணவு, உடற்பயிற்சி, சமூகத்துடன் அதிக ஈடுபாடு என்று இருந்தால் ஒவ்வொருவரும் ஆயுளை மேலும் 6 ஆண்டுகள் நீடிக்கலாம் என்பது இவர்களது ஆய்வில் மீண்டும் நிரூபணமாகியுள்ளது.

நடுத்தர வயதினர் பலர் மாரடைப்பு, இரத்தக் கொதிப்பு போன்றவற்றால் பாதிககப்பட்டு திடீர் மரணம் அடைகின்றனர். மது, புகை போன்ற பழக்கங்கள் இதற்கு முக்கிய காரணம் என்று கூறப்படுகிறது. 75 வயதை கடந்தவர்களையும் இது போன்ற பழக்கங்கள் பாதிக்கிறதா என்பது குறித்து ஸ்வீடனை சேர்ந்த மருத்துவர்கள் மற்றும் மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் இணைந்து ஆய்வு நடத்தினர்.

75 வயதை கடந்த 1800 பேரின் 18 ஆண்டு கால (1987–2005) செயல்கள் குறித்து தீவிரமாக அலசி ஆராய்ந்தனர். அவர்களது வயது, பாலினம், படிப்பு, பார்த்த வேலை, அன்றாட வாழ்க்கை முறை, பழக்க வழக்கங்கள், சமூகப் பணிகளில் அவர்களது ஆர்வம் ஆகிய அம்சங்கள் கருத்தில் கொள்ளப்பட்டன. ஆய்வு முடிவுகளிலிருந்து பல விஷயங்கள் தெரிய வந்துள்ளன.

ஆய்வு நடந்த 18 ஆண்டு காலத்துக்குள், ஆய்வுக்கு எடுக்கப்பட்டவர்களில் பாதிப் பேர் 90 வயது கடந்தவர்கள். அதில் பலர் பெண்கள். நன்கு படித்தவர்கள். ஆரோக்கியமான வாழ்க்கை முறையை பின்பற்றியவர்கள். சமூகப் பணிகளில் அதிக ஆர்வம் காட்டி, சமூகத்துடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தவர்கள். ஓய்வு காலத்தை சிறப்பாக கழித்தவர்கள். அதாவது, நல்ல பழக்கங்கள் உள்ளவர்கள் நீண்டகாலம் வாழ்கின்றனர் என்பது ஊர்ஜிதமாகிறது.

புகைப் பிடிப்பவர்களைவிட பிடிக்காதவர்கள் 1 ஆண்டு அதிகம் வாழ்கின்றனர். புகை பிடித்துவிட்டு பிறகு நிறுத்தியவர்களின் வாழ்நாளும் ஏறக்குறைய 1 ஆண்டு அதிகரித்துள்ளது. நடுத்தர வயதில் புகைப் பழக்கத்தை விடுவது மிகமிக நல்லது. உடற்பயிற்சி, நீச்சல் போன்றவற்றை வழக்கமாகச் செய்து வருபவர்களின் வாழ்நாள் சராசரியாக 2 ஆண்டு அதிகரிக்கிறது.

புகை, மது போன்ற பழக்கங்களைக் கைவிட்டு ஆரோக்கியமான உணவு, தேவையான உடற்பயிற்சி, போதிய ஓய்வு, சமூகப் பணிகளில் நாட்டம் என்று சிறப்பான வாழ்க்கை வாழ்ந்தால் பெண்களின் ஆயுள் 5 ஆண்டுகளும், ஆண்களின் ஆயுள் 6 ஆண்டுகளும் அதிகரிக்கிறது.

சொர்க்கம் மதுவிலே என்பவர்கள் அங்கு விரைவாகவே போய்ச் சேர்ந்துவிடுவார்கள் என்றுதான் எல்லாவித ஆய்வுகளும் சொல்கின்றன.

- ஆசிரியர்

# அரசாங்கத்தை ஆதரிப்பது அபிவிருத்திக்கு வழிவகுக்கும்

### — நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் —

(கொழும்பு)

அரசாங்கத்தை ஆதரித்து நின்று இன்று பல தமிழ் பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு முடிந்துள்ளது. எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருந்து இதனைச் செய்திருக்க முடியாது என கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான பிரபா கணேசன் தெரிவித்துள்ளார்.

முகத்துவாரம் இந்துக்கல்லூரியில் இடம்பெற்ற விழாவில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று கொழும்பு மாவட்டத்தில் பல தமிழ்ப் பாடலைகளின் கட்டடங்கள் என் மூலம் கட்டப்பட்டு தளபாட பற்றாக்குறை நீக்கப்பட்டு ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டு அபிவிருத்தி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இவை அனைத்தையும் செய்யக் கூடியதற்கான காரணம் நான் அரசாங்கத்திற்கு ஆதரவு தெரிவிப்பதேயாகும்.

அரசாங்கத்திற்கு ஆதரவு தெரிவிப்பதும் அரசாங்கத்துடன் இணைந்திருப்பது என்பதும் இரண்டு விடயமாகும் என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

அரசாங்கத்திற்கு ஆதரவளித்து எமது மக்களின் கல்வியை வளர்ப்பதற்கான வரப்பிரசாதங்களைப் பெற்றுக் கொள்கின்றேன்.

இது பிழை என்றால் எது சரி என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். அரசாங்கத்தின் இன்றைய தமிழ் மக்களிற்கு எதிரான போக்கிற்கு எதிர்க்கட்சியிலிருந்து குரல் கொடுப்பவர்களை நான் மதிக்கின்றேன்.

அரசாங்கத்திற்கு ஆதரவளிப்பதன் மூலம் எமது மக்களுக்கான பணிகளைச் செவ்வனே செய்யக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிட்டியுள்ளது. குறிப்பாக தமிழ் கல்வி சமூகத்திற்கு சேவையாற்றக் கூடிய வசதிகள் அரசாங்கத்திடமிருந்து எனக்கு பெறக்கூடியதாக உள்ளது என்றார்.

# கரையொதுங்கும் மீன்களில் நச்சுப் பதார்த்தம் இல்லை

### தேசிய நீரியல்வள ஆராய்ச்சி நிறுவனம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக கடற்கரைகளில் கரையொதுங்கிய மீன்களில் இரசாயன நச்சுப் பதார்த்தம் இல்லை.

இவ்வாறு கரையொதுங்கும் மீன்களை சாப்பிட முடியும் என ஆரம்பகட்ட ஆய்வுகளில் இருந்து தெரியவந்துள்ளதாக 'நாரா' எனப்படும் தேசிய நீரியல் வள ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமைத்துவ நிறுவனம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக நாரா நிறுவனத்தின் ஆராய்ச்சிக்கும் அபிவிருத்திக்குமான இயக்குனர் கலாநிதி கே.அருளானந்தம் கருத்துத் தெரிவிக்கையில்,

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக கரையொதுங்கிய இறந்த மற்றும் உயிருடனான மீன்களின் மாதிரிகள் மற்றும் மீன்கள் நாராவினால் எடுத்துச் செல்லப்பட்டு இராசயன பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டது.

இந்தப் பகுப்பாய்வின் போது இம் மீன்களில் இரசாயன நச்சுப் பதார்த்தம் இல்லை என்பது ஆரம்பகட்ட ஆய்வுகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

எனினும் தொடர்ந்து இந்த மீன்கள் பரிசோதனை செய்யப்பட்டு வருகின்றன. கடலில் ஏற்பட்டுள்ள கால நிலை மாற்றமும் கடலின் அடியில் ஏற்பட்டுள்ள குளிர் நிலையினாலும் இந்த மீன்கள் கரையொதுங்குகின்றன.

கடலில் இந்த மீன்கள் உண்ணும் நுண்ணுயிர் தாவரங்கள் அழுகியுள்ளதால் இந்த சிறிய மீன்களுக்கு உட்கொள்ள உணவு இல்லாததாலும் ஒட்சிசன் குறைபாட்டினாலும் இந்த மீன்கள் கரையொதுங்கி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

# அனர்த்த முகாமைத்துவ மாநாடு

(கொழும்பு)

இயற்கை இடர்களினால் ஏற்படும் பாதிப்புக்களை மட்டுப்படுத்துவது தொடர்பான ஆசிய நாடுகளின் அமைச்சர்கள் கலந்து கொள்ளும் மாநாடு இன்று இந்தோனேஷியாவின் யோக்யகார நகரில் ஆரம்பமாகியுள்ளது.

இந்த மாநாட்டில் ஆசிய நாடுகளைச் சேர்ந்த 49 அமைச்சர்கள் உட்பட ஆயிரத்து 200இற்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டுள்ளனர்.

முதன் முறையாக இலங்கை உட்பட ஆசிய நாடுகளின் பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் கலந்து கொள்கின்றனர்.

இந்த மாநாட்டில் இலங்கை சார்பாக அமைச்சர் மகிந்த அமரவீரவின் தலைமையிலான 10 பிரதிநிதிகள் இந்தோனேஷியா சென்றுள்ளனர்.

அதேவேளை, கடந்த 2004 ஆம் ஆண்டு இடம்பெற்ற சுனாமி கடல்சீற்றத்தை அடுத்து, ஐக்கிய நாடுகளின் இயற்கை அனர்த்தம் காரணமாக ஏற்படும் இடர்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளுக்காக விசேட பிரிவு ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது.

எதிர்வரும் 25ஆம் திகதி நிறைவடையும் இந்த மாநாட்டில், அனர்த்த பாதிப்புக்களைக் கட்டுப்படுத்துவது குறித்து விரிவாக உள்நாட்டு மட்டத்தில் எடுக்க வேண்டிய மாற்று நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆராயப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# சி.டி.எம்.ஏ.க்கு மாற்றீடாக மெகா லைன் இணைப்புக்கள்

(சாவகச்சேரி)

தென்மராட்சி பகுதிகளில் உள்ள சி.டி.எம்.ஏ இணைப்புகளுக்கு மாற்றீடாக மெகா லைன் இணைப்புக்கள் வழங்கப்பட்டு வருகிறது.

தற்போது கல்வயல், நுணாவில் மேற்கு, மட்டுவில் மத்தி, சந்திரபுரம் மட்டுவில் கிழக்கு, மட்டுவில் வடக்கு, பெருங்குளம் போன்ற பகுதிகளுக்கான தொலைபேசி இணைப்புக்களை ரெலிக்கொம் வழங்கி வருகின்றது.

முன்னர் சி.டி.எம்.ஏ இணைப்புக் கொண்டவர்களிடம் அவற்றை மீளவும் பெற்று மெகா லைன் இணைப்புக்களையும், இணையத்தள வசதிகளையும் வழங்கி வருகிறது. குறைந்தளவு சேவைக் கட்டணத்தைச் செலுத்தி சி.டி.எம்.ஏ இணைப்புகளுக்கு பதிலீடாக மெகா லைன் இணைப்புக்களைப் பெற மக்கள் தற்போது விண்ணப்பித்துள்ளனர். விண்ணப்பித்தவர்களுக்கான இணைப்புக்கள் மிகத் துரித கதியில் வழங்கப்பட்டு வருவதுடன் இணையத்தள இணைப்புக்களும் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த வாரத்தில் அதிகளவான வாடிக்கையாளர்கள் இம்மாற்றுச் சேவையினைப் பெற்றுக்கொண்டுள்ளனர் என்று ரெலிக்கொம் வட்டாரங்கள் தெரிவித்தன. இவ்விணைப்பு வேலைகளில் செயரா நிறுவன ஊழியர்கள் மும்முரமாக ஈடுபட்டுள்ளதைக் காணமுடிகின்றது. (இ)

## 8 இலட்சம் நிலக்கண்ணிகள் வடபகுதியில் அகற்றல்

யுத்தம் நிறைவடைந்த காலப் பகுதியில் இருந்து இதுவரையில் வடக்குப் பகுதியில் 8 இலடசத்து 60 ஆயிரம் நிலக்கண்ணி வெடிகள் அகற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. வடக்கில் நிலக்கண்ணி வெடிகளை அகற்றும் பணிகளை மேற்கொண்டு வரும் இராணுவக் குழு அமெரிக்காவில் கௌரவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் அமெரிக்க தூதரகம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. புலிகளினால் அதிக நிலக் கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டிருந்த 5 ஆயிரம் சதுர கிலோ மீற்றர் பரப்பில் தற்போது நிலக் கண்ணி வெடிகள் அகற்றப்பட்டுள்ளதாக நிலக்கண்ணி வெடி அகற்றும் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.


# எரிக் சொல்கைமும் ஈழத் தமிழர்களின் புரிதல்களும்!

## ■ யோகா-ராஜன் கட்டுரையிலிருந்து

“பிரபாகரன் விட்ட வரலாற்றுத் தவறுதான் ஆயிரக் கணக்கில் புலிகளும், பொதுமக்களும் பலியாவதற்குக் காரணமாக அமைந்தது” என்று எரிக் சொல்கைம் பி.பி.சி.யில் கொட்டிய வார்த்தைகள் ஈழத் தமிழர் மத்தியில் பேர் அதிர்வுகளைத் தோற்றுவித்திருக்கிறது! அதிர்ச்சியில் விழித்தவர்கள்போல் கருத்துக்களை வெளிப்படுத்த முனைகின்றனர் பலர்! உருத்திரகுமாரன், தீபம் ரிவியில் சேனன், நாவலன் போன்றோரின் விவாதங்கள், தேசம் நெற்றில் வரும் பின்னூட்டங்களும், இன்னும் பல வழிகளிலும் புத்திஜீவிகள் என்று சொல்லிக்கொள்ளும் பலரிடமும் இருந்துவரும் அதிர்வலைகள்... இவை எல்லாமே எம்மவரின் பன்முகப் பார்வையின்மையின் எதிரொலிகளாக! நவீன உலகம் பற்றிய புரிதல் இல்லாத வெட்டிப்பேச்சுக்களாக, சொல்கைம் மீதான தனிப்பட்ட தாக்குதல்களாக! தூற்றுதல்களாக! அவதூறல்களாவே வந்து குவிகின்றன!

மேற்குலகை (ஏகாதிபத்தியங்களை)ப் பொறுத்தவரை, அவர்களது செயற்பாடுகளில் பொதுவாக அவர்களுக்கான நலன்களும் புதைந்திருப்பது இயல்பு. குறிப்பாக சமாதானத் தூதுவர் பாத்திரத்தைக் கையில் எடுக்கின்ற போது “கரணம்... தப்பினால் மரணம்” என்பது அவர்களின் அடிப்படை விதி. அதாவது “நாம் விரும்பிய வண்ணம் நீ கரணம் போடத் தவறுவாயானால் நீ மரணத்தைத் தழுவுவாய்...” என்பதே இதன் பொருள். கொலம்பிய விடுதலை இராணுவம் முதல் பல்வேறு இயக்கங்கள் இதற்குப் பலியானதை உதாரணமாகக் கொள்ளலாம். அதேவேளை இவர்களால் “நன்மை?” அடைந்த நாடு களாக எரித்திரியா, கொசோவா, சூடான் போன்ற நாடுகளை புலிசார் நண்பர்கள் குறிப்பிடத் தவறுவதில்லை.

**இத்தகைய நடைமுறைகளின் மூலம்தான் உங்களைச் சுற்றியுள்ள அனைத்துத் தரப்பினரையும் வகைதொகையின்றி எதிரிகள் ஆக்கினீர்கள். இன்றும் எதிரிகளைப் பெருக்கிக் கொள்வதிலேயே குறியாக இருக்கிறீர்கள். இதன் மூலம்... உங்கள் தவறுகளுக்கு முலாமிட முனைவதன் மூலம்... மேலும் மேலும் மக்களை, அவர்களின் புலன்களை மழுங்கடிக்க முனையாதீர்கள்... அவர்களை “தமிழ் ஈழம்” பற்றிய கொதிநிலையில் வைத்திருப்பதற்காக!**



சொல்கைம்மைப் பொறுத்தவரை, அவர் மேற்குலகின் இவ் விதிமுறைகளுக்குட்பட்ட ஒரு பொறுப்பு வாய்ந்த பிரதிநிதி! அவ்வளவுதான்! இலங்கை அரசினதும் புலிகளினதும் மனம் நிறைந்த விருப்பின் அடிப்படையில்தான் இவர் சமாதானத் தூதுவராக நியமிக்கப்பட்டார் என்பதை நிராகரித்துவிட முடியாது. இன்னும் அவருக்குரிய மேலதிக சான்றாக, அன்ரன் பாலசிங்கத்துக்கும் சொல்கைம்முக்கும் இடையிலான தொடர்புகள் பற்றியும் பல்வேறு வழிகளில் அன்று பெருமையுடன் சிலாகிக்கப்பட்டவை பல. 1985களில் ஈ.பி.ஆர்.எல்.எவ். போன்ற அமைப்புக்கள் சோவியத் சார்பு நிலைக்கு ஆட்பட்டபோது, பிரபாகரன் மேற்குலகின் சார்பு நிலைக்குட்பட்டிருந்திருந்தார் என்பதும் இங்கு கவனிக்கப்பட வேண்டிய விடயம்.

எம்மைப் பொறுத்தவரை, இன்றைய உலக சூழலில் புலிகள் மேற்குலகு சார்ந்த ஒருவரை தூதுவராக நியமித்தமையை தவிர்க்க முடியாத ஒரு செயற்பாட்டின் வெளிப்பாடாகவே நோக்குகிறோம். பிரச்சினை என்னவெனில் மேற்குலகின் நிகழ்ச்சித்திட்டம் பற்றிய புரிந்துணர்வை பிரபாகரன் கொண்டிருக்கவில்லை என்பதுதான். மேற்குலகின் நிகழ்ச்சித் திட்டத்தில் முதன்மையாகக் காணப்பட்ட விடயம் “புலிகள் ஜனநாயக வழிக்குத் திரும்ப வேண்டும் என்பதும், அதன் அடிப்படையாக, முதலில் பயங்கரவாத நடவடிக்கைகளையும், தற்கொலைத் தாக்குதல்களையும் கைவிட வேண்டும்” என்பதே!

ஆனால் மேற்குலகின் நோக்கில், புலிகள் விடயத்தில் எல்லாமே தலைகீழாக மாறியது. குறைந்தபட்சம் புலிகள் சார்பில் பேச்சுவார்த்தை மேசைக்கு வந்தவர்கள் (அன்ரன் பாலசிங்கம் உட்பட) எவருக்கும் சுதந்திரமாக உரையாடும் அதிகாரம் இருந்திருக்கவில்லை. சிறிய சிறிய வினாக்களுக்கு கூட பிரபாகரனின் தொலைபேசிக்காக காத்திருக்கவேண்டி இருந்தது. அதே சமயம் அரசு சார்பில் வந்தவர்கள் மிகவும் சுதந்திரமாக உரையாடவும், உரையாடிய விசயங்களை மிகவும் துணிச்சலுடன் ஜனாதிபதியுடன் பகிர்ந்துகொள்வதற்கான அதிகாரத்தையும் பெற்றிருந்தனர். இந் நடைமுறை, அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான ஜனநாயக ரீதியான வேறுபாட்டைக் கோடிட்டது. இந் நிலைமையில் பிரபாகரனைக் கையாள்வதில் பல சிக்கல்களுக்கும் சிரமங்களுக்கும் ஆட்பட்டது, எரிக் சொல்கைம் மட்டுமல்ல மேற்குலகமும்தான்! இதன் காரணமாகத்தான் சொல்கைம் முன்கூட்டியே பல எச்சரிக்கை மணிகளை ஒலிக்கத் தலைப்பட்டார்.

மாவிலாறில் ஆரம்பித்த புலிகளின் சமர் தோல்வியில் முடிந்ததைத் தொடர்ந்து கிழக்கின் வீழ்ச்சியும், புலிகளைத் தொடர்ச்சியான தற்காப்பு யுத்தமுறைக்குத் தள்ளியது. அப்போதிருந்தே போர்நிறுத்தத்துக்கான பேச்சுக்கள் ஆரம்பமான போதும், புலிகள் இராணுவ சமபலத்தை இழந்த நிலையில், அரசமட்டத்தில் அவை புலிகளின் சரணடைவுக்கான சந்தர்ப்பத்தை நோக்கியதாகவே அமைந்தன அல்லது நகர்ந்தன. இந்நிலையில் இந்தியாவும், மேற்குலக நாடுகளும் கூட அதே திசைவழியை (புலிகளின் சரணடைவுக்காக) நோக்கியே காத்திருந்தன!

எரிக் சொல்கைமின் பேச்சுவார்த்தை முயற்சியில் பலத்த தொய்வு ஏற்பட்டது. தமிழர்களுக்கான ஓர் இடைக் காலத் தீர்வைப் பெறுவதற்கான சந்தர்ப்பங்கள்கூடிவந்த போதும், பிரபாகரன், பொட்டம்மான் ஆகியோரை சட்டத்தின் பிடியில் இருந்து காப்பாற்றுவது தொடர்பில் மிகுந்த சிரமத்துக்கும், சிக்கலுக்கும் ஆட்பட்டிருப்பார் சொல்கைம். அதாவது இவ் இருவர் மீதான சட்ட நடவடிக்கைகள் சார்ந்து எவ்வித விட்டுக்கொடுப்புக்களையும் செய்வதற்கு இலங்கை, இந்திய அரசுகள் உடன்பட்டிருக்கவில்லை என்பதே இதன் உள்ளார்ந்த அர்த்தமாகும். இந் நிலைமையில் சொல்கைம் அவர்கள் புலிகளின் தலைமையின் மீது மிகுந்த கரிசனை கொண்டிருந்தார் என்பதையே ஊகிக்க முடிகிறது.

இத்தகைய ஓர் இக்கட்டான நிலைமைகளைத்தான் இறுதிக்கட்ட போர் முடிவிலும் எரிக் சொல்கைம் சந்திக்க நேர்ந்தது. ஆயிரம் அளவில் போராளிகளை மன்னிக்கத் தயாராக இருந்த இலங்கை, இந்திய அரசுகள், பிரபாகரனையோ பொட்டம்மானையோ மன்னிக்கத் தயாராக இருக்கவில்லை. அவர்கள் இருவரையும் கிரிமினல் குற்றவாளிகளாகவே நோக்கின. இந்நிலையில் பிரபாகரனும், பொட்டம்மானும் பொது மக்கள் சார்ந்தும், போராளிகள் மீதான கரிசனையின் அடிப்படையிலும் ஒரு விட்டுக்கொடுப்பைச் செய்யவேண்டிய கட்டாயத்துக்கு ஆளாகினர். “இவர்கள் ஏதாவது ஒரு முறையில் தம்மைத் தியாகித்துக் கொள்வார்கள்” என்ற பலரது எதிர்பார்ப்பு தோல்வியில் முடிந்திருக்கிறது. இந் நிகழ்வைத்தான் எரிக் சொல்கைம் “பிரபாகரன் விட்ட வரலாற்றுத் தவறுதான் ஆயிரக் கணக்கில் புலிகளும், பொதுமக்களும் பலியாவதற்குக் காரணமாக அமைந்தது” என்ற வகையில் இறுதிக்கட்ட நிலைமைகளின் சில உண்மைகளை வெளிப்படுத்தினார்.

இதன்பொருட்டு அவரை தனிப்பட்ட முறையில், அப்பட்டமான அவதூறுகள் மூலம் தாக்க முனைகின்றனர் உருத்திரகுமார், சேனன் போன்றோரும் இன்னும் பலரும். இவை இவர்களது இயலாமையின் வெளிப்பாடுதான் என்பதை பொது மக்களாகிய நாம் புரிந்துகொள்ள வேண்டும்!. அவரைப் பற்றி முன்கூட்டியே அறிந்ததன் பின்புதான் அவரை உங்கள் தூதராகவும் ஏற்றுக்கொண்டீர்கள். இன்று அவர் மொழியும் உண்மைகள் உங்களுக்குச் சாதகமாக இல்லையென்றவுடன் அவருக்கு துரோகிப் பட்டம் கொடுக்க முனைகிறீர்கள். இத்தகைய நடைமுறைகளின் மூலம்தான் உங்களைச் சுற்றியுள்ள அனைத்துத் தரப்பினரையும் வகைதொகையின்றி எதிரிகள் ஆக்கினீர்கள். இன்றும் எதிரிகளைப் பெருக்கிக் கொள்வதிலேயே குறியாக இருக்கிறீர்கள். இதன் மூலம்... உங்கள் தவறுகளுக்கு முலாமிட முனைவதன் மூலம்... மேலும் மேலும் மக்களை, அவர்களின் புலன்களை மழுங்கடிக்க முனையாதீர்கள்... அவர்களை “தமிழ் ஈழம்...” பற்றிய கொதிநிலையில் வைத்திருப்பதற்காக!

இன்றைய உலக முறைமை மாறியிருக்கிறது. ஏகாதிபத்தியங்கள் பௌதிகரீதியாக மட்டுமன்றி பண்புரீதியாகவும் மாற்றங்களுக்குட்பட்டிருக்கின்றன. அன்றைய ஏகாதிபத்தியங்கள் தமது மூல தனக் குவியல்களையும், அறிவியல்களையும், வன்முறைசார் இராணுவ அதிகாரங்களையும் திரட்சி வடிவில் ஒருங்கே குவித்து தனது ஆதிக்கத்தை அந்நிய நாடுகளில் நிலைநிறுத்தியது. ஆனால் இன்று இவை அனைத்துமே பரவலாக்கப்பட்டிருக்கிறது. அதாவது இந்தியா, சீனா மற்றும் அரபுநாடுகளின் சேமிப்புப் பயிற்சி அந்தந்த நாடுகளில் மூலதனத் திரட்சியாக குவிந்திருக்கிறது. (17ஆம் பக்கம் பார்க்க)

# அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்ட தீர்மானங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

## விரிவுரையாளர் சம்மேளனம் அதிருப்தி



(கொழும்பு)

தமது தொழிற்சங்க போராட்டத்தின் பின்னர் அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்ட தீர்மானம் நிறைவேற்றப்படுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக பல்கலைகழக விரிவுரையாளர் சங்க சம்மேளனம் தெரிவித்துள்ளது.

சம்மேளனத்தின் உப தலைவர் தம்பர அமில தேரர் இது தொடாபாக மேலும் தெரிவிக்கையில்,

தொழிற்சங்க போராட்டத்தை நிறுத்துவதற்கு அரசாங்கம் காட்டிய முனைப்பை தற்சமயம் காண முடியாதுள்ளது.

தொழிற்சங்க போராட்டத்தை நிறுத்துவதற்கு அரசாங்கம் பல்வேறுப்பட்ட முனைப்புக்களை மேற்கொண்டது.

எனினும், தற்சமயம் அது உதாசீனப்படுத்தப்பட்டுள்ளது. இதனிடையே, நியமிக்கப்பட வேண்டிய குழுக்களும் இதுவரை நியமிக்கப்படவில்லை.

இதற்கு காலம் தாமதம் ஏற்படுவதை ஒரு போதும் ஏற்றுகொள்ள முடியாது எனறார்.

இது தொடர்பாக சூரியன் செய்தி சேவையில் உயர்கல்வி அமைச்சர் எஸ் பீ திசாநாயக கருத்துத் தெரிவிக்கையில்,

அதற்கு பதிலளித்த அவர், எதிர்வரும் இரண்டு நாட்களில் கலந்துரையாடல் ஒன்றை நடத்துவதற்கான சகல ஏற்பாடுகளையும் மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்தார்.

## இறக்குமதித் தீர்வை அதிகரிக்கலாம்! வாகன விற்பனை முடங்கும் அபாயம்

(கொழும்பு)



இலங்கையில் வாகனங்கள் மீது விதிக்கப்படும் வரிவீதங்கள் எதிர்காலத்தில் மேலும் அதிகரிக்கப்படவுள்ளன. இதனால் இலங்கையில் வாகன விற்பனை முடங்கிப்போகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

வெளிநாட்டு ஒதுக்கத்தை அடிப்படை யாகக்கொண்டு எதிர்வரும் வரவுசெலவுத் திட்டத்திலும் வாகனங்கள் மீதான வரிகள் அதிகரிக்கப்படவுள்ளதாக நிதியமைச்சின் செயலாளர் பி.பி.ஜெயசுந்தர தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே வாகனங்கள் மீது விதிக்கப்படும் இறக்குமதி தீர்வைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. விற்பனை இல்லாமல் சுமார் 5000 வாகனங்களை இறக்குமதியாளர்கள் மீண்டும் அதனை ஏற்றுமதி செய்த நாடுகளுக்கே அனுப்பவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த நிலையிலேயே மீண்டும் வாகனங்கள் மீது இறக்குமதி தீர்வை அதிகரிப்பு தகவல் வெளியிடப்பட்டுள்ளது. எனவே இலங்கையில் வாகன விற்பனை முடங்கிப்போகும் அபாயம் ஏற்படும் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

## புதுப்பொலிவு பெற்ற குதிரைப்பந்தயத் திடல்


(கொழும்பு)

கொழும்பு, கறுவாத்தோட்டத்தில் அமையப்பெற்ற 120 வருடங்கள் பழமைவாய்ந்த குதிரைப் பந்தயத்திடல் பார்வையாளர்கூடம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு நேற்றுமுன்தினம் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக் கப்பட்டது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ, கொழும்பு மாநகரசபை மேயர் எம்.ஜே.எம். முஸம்மில் ஆகியோரினால் இக்கட்டடம் திறந்து வைக்கப்பட்டது.

குதிரைப் பந்தயத்தில் ஈடுபடுகின்ற வீரர்களின் ஓய்வறைகளாகவும், விசாரணை அறைகளாகவும் இருந்த பகுதிகள் தற்சமயம் மக்டொனல், லக்சல போன்ற பிரபல நிறுவனங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றமை சிறப்பானதாகும்.

இலங்கை புற்றரை பராமரிப்பு கழகத்தின் கீழிருந்த கறுவாத்தோட்ட குதிரைப்பந்தய தடாகம் தற்பொழுது பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சினால் பராமரிக்கப்பட்டு வருகிறது.



கொழும்பு நகரை அழகு படுத்தும் வேலைத் திட்டத்தின் கீழ் இராணுவ பொறியியல் துறையினரால் இப் பழைய கட்டடம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது.

125 மில்லியன் ரூபாய் செலவில் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட இக்கட்டட நிர்மாணத்தில் சுமார் 300 இராணுவத்தினர் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

இச்சிறிய பார்வையாளர்கூட கட்டடமானது 450 மில்லியன் ரூபா வேலைத் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டதாகும். ஏனைய வேலைத்திட்டமான ரக்பி மைதானம், பேரரங்கு போன்றவற்றின் நிர்மாண வேலைகள் 2013 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்திற்குள் நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கல்விக்கும் சுகாதாரத்திற்கும் கியூபா மிகவும் முன்னுரிமை

(கொழும்பு)

கியூபா தமது வரவு செலவு திட்டத்தில் சுதந்திர கல்விக்கும் சுதந்திர சுகாதாரத்துறைக்கும் அளிக்கின்ற முன்னுரிமையை ஏனைய இராஜ்ஜியங்கள் உதாரணமாக எடுக்க வேண்டும் என சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இரண்டு நாடுகளுக்கும் இடையே ஒரே அளவிலான செயற்பாடுகளே முன் எடுக்கப் படுகின்றன. கியூபா சுகாதாரத்திற்கும் கல்விக்கும் முன்னுரிமை அளித்துள்ளது. எனவே ஏனைய நாடுகள் கியூபாவை முன்னுதாரமாக கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். •

## பாலியல் வன்முறையால் நாளொன்றுக்கு 5 பேர் சீரழிவு



(கொழும்பு)


இலங்கையில் நாளொன்றுக்கு ஐந்து பெண்கள் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்படுவதாக புதிய ஆய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உலக பெண் சனத்தொகையில் ஒரு பில்லியன் பெண்கள் நாளாந்தம் துன்புறுத்தப்படுவதாக் குறிப்பிடப்படுகின்றது.

சர்வதேச மகளிர் அமைப்பும் மற்றும் இலங்கை மகளிர் விவகார அமைச்சு கூட்டாக இணைந்து இந்த ஆய்வை நடத்தியுள்ளன. பெண்கள் படுகொலை செய்யப்படுதல், பாலியல வன்முறை, வீட்டு வன்முறை உள்ளிட்ட பல்வேறு வழிகளில் பெணகள் துன்புறுத்தப்படுகின்றனர்.

பெண்களுக்கு எதிராக ஆண்களே அதிகளவு அழுத்தங்களை பிரயோகிக்கின்றன. வன்முறைகளுக்கு எதிராக ஆண்களை அணிதிரட்டும் நோக்கில் அமைப்பொன்று உருவாக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## பாசிக்குடாவில் விருந்தகம்




(கொழும்பு)

பாசிக்குடாவில் நிர்மாணிக்கப்பட்ட ஐந்து நட்சத்திர விருந்தகம் ஒன்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது.கிழக்கு கடற்பரப்பின் சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் முகமாக இந்த ஐந்து நட்சத்திர விருந்தகம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கிழக்கு கடற்பரப்பின் 150 ஏக்கர் நிலப்பரப்பை கொண்ட பாசிக்குடா சுற்றுலா வலயத்தில் சகல வசதிகளையும் கொண்ட 14 விருந்தகங்கள் ஸ்தாபிக்கப்பட்வுள்ளன.

பாசிக்குடா சுற்றுலா வலயத்தின் இயற்கை வளம் பாதுகாக்கப்படும வகையில் இந்த விருந்தக நிர்மாண பணிகளை முன்னெடுக்குமாறு அரசாங்கத்தினால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஆர்ப்பாட்டங்களால் அரசு ஆட்டங்காணாது



(கொழும்பு)

பேரணிகள், ஆர்ப்பாட்டங்களால் தற்போதைய அரசாங்கத்தைத் தோற்கடிக்க முடியாது என எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் மாவட்ட செயற்பாட்டாளர்களின் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பேரணி செல்வதன் மூலம் எதனையும் செய்து விட முடியாது. எமது இலக்கு 2014 ஆம் ஆண்டுதான் மாகாண சபை தேர்தல்களை நடத்தி எதிர்க் கட்சியினரைக் களைப்படையச் செய்து பொதுத்தேர்தலை நடத்த தீர்மானித்துள்ளனர்.

2014 ஆம் ஆண்டை இலக்காக கொண்டே நாங்கள் மாகாண சபை தேர்தல்களுக்கு முகங் கொடுக்கின்றோம் எனத் தெரிவித்துள்ளார்.

# வீதி அனுமதிப்பத்திரமற்ற 185 பேருந்துகள் சேவையில்

(கொழும்பு)

வீதி அனுமதிப்பத்திரமற்ற 185 பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உயர் பொலிஸ் அதிகாரிகள், உயர் இராணுவ அதிகாரிகள், அரசில்வாதிகள் மற்றும் செல்வாக்கு மிக்கோருக்கு சொந்தமான பேருந்துகளே இவ்வாறு சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

தூரப் பகுதிகளுக்கான போக்குவரத்து சேவையில் இந்தப் பேருந்துகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அனைதது மாகாண தனியார் பேருந்து சங்கத்தின் செயலாளர் நிஹால் தேவப்பிரிய தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து பாதுகாப்பு அமைச்சிற்கும் அரசாங்கத்திற்கும் ஏற்கனவே மூனறு தடவைகள் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளன.

வவுனியா, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, பொத்துவில், மூதூர் மற்றும் மன்னார் போன்ற நகரங்களுக்கான போக்குவரத்து சேவையில் இந்த பேருந்துகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிததுள்ளார்.

## பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் 400 பேர் வெளிநாடுகளுக்கு ஓட்டம்

(கொழும்பு)

இலங்கையின் சுமார் 400 பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் வெளிநாடுகளில் குடியமர்ந்துள்ளதாக உயர்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

உள்நாட்டில் செய்து கொண்ட கல்வியியல் தொடர்பான உடன்படிக்கைகளையும் அதற்கான அரச செலவுகளையும் உதாசீனம் செய்து அவர்கள் வெளிநாடுகளில் குடியமர்ந்துள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்த நிலையில் வெளிநாடு சென்றுள்ள பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாக உயர் கல்வி அமைச்சு எச்சரித்துள்ளது.



இவர்கள் மேலதிக கற்கைகளுக்காக வெளிநாடு சென்ற நிலையிலேயே அங்கு குடியமர்நதுள்ளார்கள். இதன் காரணமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு 2 பில்லியன் ரூபாய் நட்டம் ஏற்பட்டுளளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

# மக்கள் சிந்தித்துச் செயற்பட்டால் அபிவிருத்தி நலன்கள் கிட்டும்

## ஈ.பி.டி.பி. யாழ்.மாவட்ட அமைப்பாளர் கமல்

(கொழும்பு)

அரசு தமிழ் மக்களுக்கான நலத்திட்டங்கள் முன்னெடுத்துவரும் நிலையில் அது தொடர்பில் ஆக்கபூர்வமான விமர்சனங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடமிருந்து ஒருபோதும் எதிர்பார்க்க முடியாது என ஈ.பி.டி.பியின் யாழ்மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) தெரிவித்துள்ளார்.

வடக்கே தமிழ் மக்களுக்காக அரசு மேற்கொண்டுவரும் பல்வேறு அபிவிருத்திப் பணிகளை முற்றாக மறுதலிக்கும் கூட்டமைப்பினரின் நடவடிக்கைகளைக் கண்டித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

யுத்தம் மூலமான அவலங்களுக்கும் இழப்புக்களுக்கும் தவிர்க்கமுடியாது இரு தரப்புமே காரணமாக இருந்த நிலையில் அனைத்தையும் அரசு மீது சுமத்தியதன் மூலம் தமிழ் மக்களை நாட்டுக்கு வெளியே தமக்கான அரசியலையும் பாதுகாப்பையும் தேடும் நிர்ப்பந்தத்துக்குள் தள்ளிவிட்ட பெருமை கூட்டமைப்பினரையே சாரும்.

இதன்மூலம் உள்நாட்டில் அரசுக்கும் தமிழ் தரப்புக்குமிடையே அவசியமான அபிவிருத்தியை தொடர்புபடுத்தி நிலவக் கூடிய இணக்கமான சூழல் மறுதலிக்கப்பட்டிருப்பதுடன் தமிழ் மக்களுக்கான எதிர்கால அபிவிருத்திக்கான அரசின் ஆர்வங்களிலும் கூட்டமைப்பினர் பாதிப்பை ஏற்படுத்தி இருக்கிறார்கள்.


உண்மையில் யுத்தத்திற்குப் பிந்திய தமிழ் மக்களுக்கான அரசியல் சூழல் என்பது பாதிப்புக்குள்ளான மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான அரசுத்தரப்புடன் இணைந்த ஒரு புரிதலான சூழலே இன்றைய அவசிய தேவையாகும்.

இத்தனை அழிவுகளுக்குப் பிறகும் அரசை ஆட்சியிலிருந்து அகற்ற வேண்டும் என்ற மனவிருப்பை கூட்டமைப்பினர் ஒருதலைப்பட்சமாக தமிழ் மக்கள் மனதில் திணித்ததன் மூலம் தீர்வுக்கான முயற்சியில் உள்நாட்டில் சக இனத்தவருடனான உறவில் விரிசலுக்கு இப்போது வழியேற்படுத்தப்பட்டு வருகின்றது.

இதன் விளைவு பல அழுத்தங்களுக்கும் நெருக்கடிகளுக்கும் மத்தியில் வடக்கே அரசு மேற்கொண்டுவரும் அபிவிருத்திகள் குறித்து ஆக்கபூர்வமான ஆலோசனைகளை முன்வைப்பதற்கு பதிலாக அனைத்தையும் நிராகரிக்கும் ஒரு மனப்பாங்கு தமிழ் மக்கள் மனதில் வளர்க்கப்படும் செயலானது எமது மக்களின் வளமான வாழ்வுக்கு நிச்சயம் பாதகமாகவே அமையும்.


முதலில் இந்த நிலை மாற வேண்டும். அவலங்களையே அரசியலாக்கி பிழைப்பு நடாத்தும் கூட்டமைப்பினரின் கீழ்த்தரமான இந்த அரசியல் செயன்முறைக்கு முடிவு காணப்பட வேண்டும்.

இவ்வாறானதொரு சூழலில் உண்மை நிலமைகளைச் சரியாகப் புரிந்து கொண்டு தமது எதிர்காலத்துக்கான நீண்டகால நலன்களை முறையாக உத்தரவாதம் செய்து கொள்ளும் வகையில் தமிழ் மக்கள் விவேகத்துடன் செயற்பட முன்வர வேண்டுமெனவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.



கைதடி - கயிற்றசிட்டி முருகன் ஆலய பக்தி மாலை இறுவட்டு அண்மையில் வெளியிட்டுவைக்கப்பட்டது. இதில் இறுவட்டுக்கு இசையமைப்பு வழங்கிய இசையமைப்பாளர் ஸ்ரீகுகன் அவர்களுக்கு ஆலய பரிபாலன சபையினர் பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதைக் காணலாம். (எஸ்.பி)

## பரமர் சங்கமம்



'நான் புடிச்ச முயலுக்கு மூன்று கால' என்றால் ஏன் மூன்று காலில் முயல் இல்லையோ எண்டு திருப்பிக்கேக்கிற காலமிது.

என்ரை பேரப்பிள்ளைகளுக்கே கதை சொல்லி மாளாதெண்டால்: நாட்டில நடக்கிற நல்லதுகளை விடுவம். கெட்டதுகளை என்னண்டு நிறுத்திறேண்டு சொல்லுங்க பாப்பம்.

காலம் கலியுகமெண்டாப் போல கேள்விப்பட்டிராத சங்கதியள் எல்லாம் என்னெண்டு நடக்குது? சமீபத்தில் ஆடொன்று ரெண்டு குடடிகளைப் போட்டது. அதில் ஒண்டு மனித முகத்தோட இருந்தேண்டு செய்திகள் வந்தன.

நாங்க செய்வது புழையான காரியமெண்டு வடிவாத் தெரிஞ்சு கொண்டே அதைத்துணிச்சலோடை செய்து முடிக்கிற அளவுக்கு மூளை குட்டிச் சுவராகி உள்ளதொண்டுதான் சொல்ல வேணும்.

நல்லாத் தூங்கிய முயல் கடைசியா முளிச்சுப் பாத்திட்டு ஆமையை வெல்ல ஓடிய மாதிரித்தான் எங்கட சிற்றூர்திக் காரங்கடை போக்குகள்.

அதில் எத்தனை பேர்களுடைய பொறுப்புகளை ஏற்றுக்கொண்டிருக்கிறம் எண்ட சிந்தனை கொஞ்சமும் வராது. அரச பேருந்து முந்தி விட்டுதெண்டால் அதைக் கலைச்சுப் பிடிச்சு முந்திவிட வேணும் எண்ட செயல் கடந்த 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை இருபாலை பிள்ளையார் கோவிலடியில் மட்டுமா நிகழ்ந்தது?

இயக்கச்சிச் சந்தியில் அடிக்கடி நிகழுது இதுகளெல்லாம் பத்திரிகைகளுக்கும், ஒலியொளி ஊடகங்களுக்கும் ஏன் நுகர்வோருக்கும் புதினந்தான். அந்தப் புதினத்தில் புத்தி சொல்லப்படுவதை எந்தப் புத்திசாலி உணர்ந்து நடக்கிறான்.

அண்டைக்குப் பேருந்தை முந்தி விடவேண்டுமெண்ட நோக்கமுடைய சிற்றூர்திச் சராதிக்கு முன்னால் போன பேருந்து வாகனமொன்று வருகிறதெண்டதைக் காட்டும் சமிஞையை அவதானிக்க முடியாமல் போனதாலே அத்தனை அனர்த்தங்களையும் அடைய நேர்ந்தது.

ஒருவருடைய பிழையால் அவர் மட்டும் பாதிக்கப்படுவதும் வேதனைக்கு உரிய விடயந்தான். அவரால் சம்பந்தப்படாதவர்களும் சிக்கிக்கொள்வதை நான் பிடிச்ச முயலுக்கு மூண்டு காலெண்டுதானே சொல்ல வேண்டும்.

இப்படித்தான் வீதிப் போக்குவரவு முறைகளைச் சொல்லிக் கொடுக்கக் கேட்டுக்கொள்ளும் மாணவ சமுதாயம் பாடசாலை விட்டு வீதிக்கு வந்தால் நெல்லிக்காய் மூட்டை அவிண்டது போல் சிதறுண்டு வீதி முழுதிலும் நிக்கும்.

அது போக்கு வரவுக்கான பாதை எண்ட எண்ணம் வருவதே இல்லை. பெரியவர்களும் வீதியில் போகேக்க தங்கட அலுவலுக்காக மறுபக்கம் போவதெண்டால் நிதானித்து நிண்டு பாத்துப்போவதைக் காண முடியாது.

நல்ல மடடுக்கு ஒரு சூடு எண்டதைப் போல அந்த வகைச் சம்பவங்களை நேரில் அனுபவித்து நடப்பது மட்டுமல்ல பத்திரிகை மற்றும் ஊடகங்களின் வாயிலாக அறிகையில் கூட சிறந்த கற்பித்தலாக எடுத்துக் கொண்டால் எவ்வளவு நல்லது சொல்லுங்க பாப்பம்...

## குருபூசைத்தினம்

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடம் சிவகுருநாத பீடம் வேதாந்த மடத்தில் ஸ்ரீமத் மகாதேவ சுவாமிகளின் 70 ஆவது குருபூசை நிகழ்வு எதிர்வரும் 24 ஆம் திகதி புதன் கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது. வேதாந்த மடத்தின் எட்டாவது குருபீடாதிபதி ஸ்ரீமத் வேதவித்யா சாரா சுவாமிகள் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் தாவடியூர் கே.எஸ்.ஆர்.திருஞானசம்பந்தனின் ப்ண்ணிசை கச்சேரியும், அதனைத்தொடர்ந்து சுவாமிகளின் சமாதிக்கு அபிஷேக ஆரதனைகளும் இடம்பெற உள்ளன.

தொடர்ந்து சின்மயா மிஷனின் யாழ்.மாவட்ட கிளைப் பிரதிநிதி சுவாமி ஜாக்கிரத சைதன்யரின் ஆன்மீக உரை என்பன இடம்பெறவுள்ளது. (54)

## நவராத்திரி விழா

(கல்முனை)

கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலையின் இந்துமாமன்றம் நடத்தும் நவராத்திரிவிழா நாளை 2012 செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு எஸ்.சிவானந்தராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆன்மிக அதிதியாக மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் சுவாமிகள் ஸ்ரீமத் கபாலீஸானந்த மகாராஜ் கலந்து கொள்கிறார். யாழ். சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் சைவப்புலவர் செ.கந்தசத்திய தாசன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்கிறார். மாணவகளின் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (10)

## முரசின் இன்றைய பலன்

(22.10.2012 - திங்கட்கிழமை)

நந்தன வருஷம் ஐப்பசி மாதம் 06 ஆம் திகதி.
நட்சத்திரம்: உத்தராடம் மரணயோகம் முனிரவு 10.51 வரை திதி: அட்டமி.
பின்னிரவு 1.20 வரை பின்னர் நவமி. இராகுகாலம் 7.32 - 9.02 வரை.
சுபநேரம் 12.02 - 1.32 வரை எமகண்டம் 10.32 - 12.02 வரை,
குளிகன் காலம் 1.32 - 3.02 வரை.கரிநாள்.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | புதியவர்களின் நட்பு. தொழில், புதிய சாதனை. பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். விரும்பிய பொருள் வாங்கல். குடும்ப மகிழ்வு. பாராட்டு, வெகுமதி. |
| ரிஷபம் | போட்டி, பந்தயம், எதிர்ப் பேச்சு தவிர்க்கவும். பணவரவில் சுணக்கநிலை மாறும். புதிய செலவுகள் வரும். வாகன பயணத்தில் கவனம். வெளியூர் நற்செய்தி. |
| மிதுனம் | செயல்திறம். நண்பர், உறவினர் பாராட்டு. கூடுதல் மூலதனம். வளர்ச்சியும், பணவரவும் கூடும். மங்கல நிகழ்ச்சி. அரச உதவி கிடைக்கும். |
| கடகம் | புதிய நம்பிக்கை. வேலையில் உற்சாகம். தொழில், இலக்கு பூர்த்தி. தாராள பணவரவு. வீட்டுப் பொருள் வாங்குவீர்கள். விருந்து. ஆடை, ஆபரண சேர்க்கை. |
| சிம்மம் | கட்டாய சூழ்நிலைகள் உருவாகும். பதற்றம், பயம் ஏற்படலாம். பொறுமை அவசியம். தொழில் மாறுபாடு. கடின உழைப்பு. உணவுக்கட்டுப்பாடு நல்லது. |
| கன்னி | தொடர்பில்லாத வேலை வரும். சொந்த அலுவல் தாமதம். நஷ்டத்தைத் தவிர்க்க கூடுதல் உழைப்பு. மாறுபாடுகள் வேண்டாம். உறவினர் வகை. |
| துலாம் | நற்செயல்கள். உறவினர், நண்பர் பாராட்டுவர். நம்பிக்கை, உற்சாகம் அதிகரிக்கும். பணவரவு முன்னேற்றம். உடல் பலம்பெறும். குடும்ப சுபநிகழ்வு. தேடிய பொருள் வந்து சேரும். |
| விருச்சிகம் | குளறுபடிகள் ஏற்படலாம். நண்பரின் ஆலோசனை உதவும். தொழில் மந்தம். அளவான வரவு. வாகனச் செலவு. குடும்பத்தில் பிணக்கு வந்து தீரும். |
| தனுசு | இல்லத்தில் சுபநிகழ்ச்சி. சாமர்த்தியம் பயன் தரும். தம்பதியர் அன்யோன்யம். காரியம் சாதிப்பீர்கள். நண்பர்களால் உதவி. அறப்பணி செய்வீர்கள். |
| மகரம் | மறக்க முடியாத நிகழ்ச்சிகள் ஏற்படும். எதிர்பாராத ஆதாயம். நண்பர் மனஸ்தாபம் தீரும். வராத உறவினர் தேடி வருவார். அலைச்சல் குறைந்து ஓய்வு. |
| கும்பம் | முன்னேற்பாட்டு சிந்தனைகள். தொழில் போட்டி அதிகரிக்கும். விவேகத்தால் வெற்றி. வரவிலும் செலவு கூடும். அறிமுகம் இல்லாதவர் உதவி. |
| மீனம் | தேங்கியிருந்த வேலை நிறைவேறும். தொழில் அபரிமித வளர்ச்சி. உபரி வருமானம். குடும்பத்தேவை பூர்த்தி. புதிய நட்பு. மகிழ்ச்சியும், பெருமிதமும். |

## கிரிக்கெட் வீரர்களை குறிவைக்கும் புற்றுநோய்




லண்டன்)

இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவரும் தற்போதைய தொலைக்காட்சி வர்ணனையாளருமான ரொனி கிரேக்கிற்கு புற்றுநோய் ஏற்பட்டுள்ளது. இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் ரொனி கிரேக். 1972 முதல் 1977ஆம் ஆண்டு வரை விளையாடிய டேனி கிரேக் 58 டெஸ்ட் போட்டியில் விளையாடி 3,599 ஓட்டங்களும், 141 விக்கெட்டும் எடுத்துள்ளார். 22 ஒருநாள் போட்டியில் ஆடி 269 ஓட்டங்கள் எடுத்ததுடன், 19 விக்கெட்டுகள் கைப்பற்றி இருக்கிறார்.

66 வயதான டேனி கிரேக் தற்போது சனல்–9 தொலைக் காட்சி வர்ணனையாளராகப் பணியாற்றி வருகிறார். கடந்த மே மாதம் மார்பு சளி நோயால் பாதிக்கப்பட்ட ரொனி கிரேக்குக்கு சிகிச்சை அளித்தும் முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை. இதனை அடுத்து நடத்தப்பட்ட மருத்துவ பரிசோதனையில் வலது நுரையீரலில் புண் ஏற்பட்டு இருப்பது தெரியவந்தது. இதைத்தொடர்ந்து நடத்தப்பட்ட பரிசோதனைகள் முடிவில் ரொனி கிரேக்குக்கு நுரையீரலில் புற்று நோய் பாதித்து இருப்பது கண்டுபிடிக்கப்புட்டது. நோயின் தாக்கத்தின் அளவு எந்த மாதிரி இருக்கிறது என்பது தெரியவில்லை. அது தொடர்பான மருத்துவ சோதனைக்கு பின்னரே எந்த மாதிரி சிகிச்சை அளிப்பது என்பது முடிவு செய்யப்படும்.

புற்றுநோய் பாதிப்பு குறித்து ரொனி கிரேக் கூறுகையில், எனது வாழ்க்கையில் சில கஷ்டங்கள் ஏற்பட்டு இருக்கின்றன. இது இன்னொரு கஷ்டம். இதனை எதிர்த்து நானும், எனது மனைவியும் போராடுவோம். இதுபோன்ற போராட்டத்தை இதற்கு முன்பு நாங்கள் சந்தித்தது இல்லை. இந்தச் சூழ்நிலையில் வர்ணனையாளர் பணியில் தொடருவது எனது கையில் இல்லை. எனது குடும்பத்துக்கு தான் முழு முக்கியத்துவம் அளிப்பேன் என்றார். இதேவேளை, கிரிக்கெட் வீரர்களான யுவராஜ்சிங், மார்ட்டின் குவ்ரே ஆகியோரைத் தொடர்ந்து ரொனி கிரேக்கிற்கு புற்றுநோய் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அரையிறுதியில் லயன்ஸ்

### வெளியேறியது மும்பை, சென்னை அணிகள்




(ஜோகன்ஸ்பர்க்)

சம்பியன்ஸ் லீக் ருவென்ரி–20 பி பிரிவு லீக் ஆட்டத்தில் யார்க்ஷயர் அணியை 5 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்திய ஹைவெல்ட் லயன்ஸ் அணி அரையிறுதிக்கு முன்னேறியது. நடப்பு சம்பியன் மும்பை இந்தியன்ஸ், சென்னை சூப்பர் கிங்ஸ், யார்க்ஷயர் அணிகள் பரிதாபமாக வெளியேறின.

ஜோகன்ஸ்பர்க், நியூ வாண்டரர்ஸ் மைதானத்தில் நேற்று முன்தினம் மாலை நடந்த இப்போட்டியில், முதலில் ஆடிய யார்க்ஷயர் அணி 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 131 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஆண்ரு கோல் 21, ஜேக்கஸ் 31 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் தன்வீர், பாங்கிசோ தலா 2 இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். பதிலுக்கு 132 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய லயன்ஸ் அணி 19.2ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் சைமஸ் 27 ஓட்டங்களைப் பெற்றார். இந்த வெற்றியுடன் 12 புள்ளிகள் பெற்ற லயன்ஸ் அணி அரையிறுதிக்கு முன்னேறியது. 'பி' பிரிவில் சிட்னி சிக்சர்ஸ் ஏற்கனவே ஹட்ரிக் வெற்றியுடன் (12 புள்ளி) அரையிறுதி வாய்ப்பை உறுதி செய்திருந்ததால் மும்பை, சென்னை, யார்க்ஷயர் அணிகள் பரிதாபமாக வெளியேற்றப்பட்டன.

## இறுதிப் போட்டியில் சாய்னா

(ஒடென்ஸ்)

டென்மார்க் ஓப்பன் பட்மின்ரன் போட்டியில், இந்தியாவின் சாய்னா நேவால் அரையிறுதியில் முதல்நிலை வீராங்கனை யுஹான் வாங்கை வென்று இறுதிப்போட்டிக்கு முன்னேறினார். டென்மார்க் ஓபன் சூப்பர் சீரிஸ் பட்மின்ரன் போட்டி அங்குள்ள ஒடென்ஸ் நகரில் நடந்து வருகிறது. இதில் உலக தரவரிசையில் 4ஆவது இடத்தில் இருக்கும் இந்திய நட்சத்திர வீராங்கனை நேவால் களம் இறங்கி வெற்றிகளைக் குவித்து வருகிறார்.

கால்இறுதியில் டென்மார்க்கின் டினேபானை நேர் செட்டில் வெளியேற்றிய சாய்னா, நேற்று முன்தினம் அரையிறுதியில் உலகின் முதல் நிலை வீராங்கனையும், தனது பரம எதிரியுமான சீனாவின் யுஹான் வாங்குடன் மல்லுக்கட்டினார்.

விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் தொடக்கம் முதலே அசத்திய சாய்னா நேவால் முதல் செட்டை 21–12 என்று எளிதில் தனதாக்கியதுடன், 2ஆவது செட்டிலும் ஆதிக்கம் செலுத்தினார். இதில் 12–7 என்று சாய்னா முன்னிலை வகித்தபோது, யுஹான் காயமடைந்தார். கால் முட்டியில் வலிஅதிகமாக இருந்ததால் போட்டியில் இருந்து விலகினார்.இதனால் சாய்னா வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. இந்த ஆட்டம் 30 நிமிடங்கள் மட்டுமே நடந்தது. யுஹான் வாங்கை, சாய்னா வீழ்த்தியிருப்பது இதுவே முதல் முறையாகும். இதற்கு முன்பு அவருக்கு எதிராக ஆடிய 6 ஆட்டங்களிலும் தோல்வியையே தழுவியிருந்தார். இதில் லண்டன் ஒலிம்பிக் அரையிறுதியில் தோல்வி கண்டதும் அடங்கும்.

## விமர்சிக்க தகுதியுண்டா? சல்மானுக்கு



(லாகூர்)

என்னைப் பற்றி விமர்சிக்க சல்மான் பட்டுக்கு என்ன தகுதி இருக்கின்றது என அதிரடி வீரர் அப்ரிடி ஆவேசமடைந்துள்ளார்.

இலங்கையில் நடந்த ருவென்ரி-20 உலக கோப்பை போட்டியில் சகலதுறை வீரர் ஷாகித் அப்ரிடி சரியாக விளையாடவில்லை என்று ஸ்பொட் பிக்சிங் சூதாட்ட புகாரில் சிக்கி தடைவிதிக்கப்பட்ட முன்னாள் கப்டன் சல்மான் பட் கடுமையாக விமர்சித்திருந்தார்.

இது பற்றி அப்ரிடி கூறுகையில், சூதாட்டத்தில் ஈடுபட்டு நாட்டுக்கே அவப்பெயர் உண்டாக்கியதுடன், முகமது ஆமிர் போன்ற மிகத் திறமையான இளம் வீரரின் கிரிக்கெட் வாழ்க்கையைக் கெடுத்து நாசமாக்கிய சல்மான் பட்டுக்கு என்னை விமர்சிக்க கொஞ்சம் கூட தகுதியில்லை. விமர்சகர்களை பணியமர்த்தும்போது தொலைக்காட்சி நிறுவனங்கள் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும் என்று பதிலடி கொடுத்துள்ளார்.

## ரெறியின் செயலால் நற்பெயருக்குப் பாதிப்பு

### இங்கிலாந்து கால்பந்து சம்மேளனம் கவலை

இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவ்ரும், செல்ஷி அணியின் வீரருமான ஜோன் ரெறியின் இனத்துவேச வார்த்தைப் பிரயோகம் இங்கிலாந்தின் நற்பெயருக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக இங்கிலாந்து கால்பந்தாட்டச் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

ஜோன் ரெறிக்கு 4 போட்டித் தடையும், அபராதமும் விதிக்க இங்கிலாந்து கால்பந்தாட்டச் சம்மேளனம் எடுத்த முடிவை எதிர்த்து மேன்முறையீடு செய்யப்போவதில்லை என ஜோன் ரெறி எடுத்த முடிவை அடுத்தே இங்கிலாந்து கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் தலைவர் டேவிட் பேர்ண்ஸ்ரெய்ன் தெரிவித்துள்ளார்.

செல்ஷி அணியின் தலைவராகக் காணப்பட்ட தருணத்தில் கடந்த ஆண்டு ஒக்டோபரில் குயீன்ஸ் பார்க் ரேஞ்சர்ஸ் அணியின் வீரரான அன்டன் பேர்டினன்ட் மீது இனத்துவேச ரீதியிலான வார்த்தைக்களைப் பயன்படுத்தியிருந்தார் என்ற குற்றச்சாட்டு எழுப்பப்பட்டிருந்தது. இந்நிலையில் அவர் மீதான குற்றவியல் விசாரணைகளில் அவர் மீதான குற்றங்கள் உறுதிப்படுத்த பட்டிருக்காத நிலையில், இங்கிலாந்து கால்பந்தாட்டச் சம்மேளனம் நடாத்திய விசாரணைகளின் முடிவில் ஜோன் ரேறிக்கு 4 போட்டித்தடையும், 220,000 ஸ்ரேர்லிங் பௌண்ட்ஸ் அபராதமும் விதிக்கப்பட்டது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த டேவிட் பேர்ண்ஸ்ரெய்ன், ஒரு விடயம் ஏராளமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளமை குறித்து கவலையடைவதாகத் தெரிவித்தார். எனினும் ஒரு சிறிய விடயம் கடந்த காலங்களில் வீரர்கள் இனத்துவேசத்தை நீக்குவதற்காக எடுத்த முயற்சிகளை மறைததுவிடக் கூடாது எனவும் அவர் தெரிவித்தார்.

வீரர்களும், கழக முகாமையாளர்களும், கழகங்களும், போட்டித் தொடர்களும், தேசியப் போட்டிகளில் சம்பந்தப்பட்டவர்கள் பலரும் சமத்துவத்திற்காக அதிகமாகப் போராடி வருவதாக அவர் தெரிவித்தார்.

அத்தோடு ஜோன் ரெறியின் விவகாரத்தால் ஏற்பட்ட பாதிப்பு நிவர்த்தி செய்யப்பட முடியாதது எனவும் அவர் தெரிவித்தார்.

## சென்னைக்கு ஆறுதல் வெற்றி

(ஜோகன்னஸ்பர்க்)

மும்பை இந்தியன்ஸ் அணிக்கெதிரான லீக் போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி ஆறுதல் வெற்றியடைந்தது.

சம்பியன்ஸ் லீக் ருவென்ரி-20 ஓவர் கிரிக்கெட் போட்டி தென்னாபிரிக்காவில் நடைபெற்று வருகிறது. நேற்று முன்தினம் சென்னை சூப்பர் கிங்ஸ்-மும்பை இந்தியன்ஸ் அணிகள் மோதின.

சென்னை சூப்பர் கிங்ஸ் அணி 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 173 ஓட்டங்களைப் பெற்றது. இதில் டுபிளிசிஸ் 52, முரளி விஜய் 39, டோனி 35 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் லசித் மலிங்க ஐந்து விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு 174 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய மும்பை இந்தியன்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 167 ஓட்டங்களைப் பெற்று ஆறு ஓட்டங்களால் தோல்வி அடைந்தது. இதில் தினேஷ் கார்த்திக் 74, போலாட் 31 ஓட்டங்களைப் பெற்றனர். ஆட்டநாயகனாக டுபிளிசிஸ் தெரிவானார்.

## மீண்டு வருகிறார் நடால்

முழங்கால் மூட்டு காயம் காரணமாக ஓய்வெடுத்து வரும் நட்சத்திர ரென்னிஸ் வீரர் ரபேல் நடால், அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் நடைபெற உள்ள மெக்சிகன் ஓப்பன் ரென்னிஸ் போட்டியில் (பெப். 25, மார்ச் 2) களமிறங்குவதை நேற்று உறுதி செய்துள்ளார்.

அதற்கு முன்பாக, ஜனவரி 14இல் தொடங்கும் ஆண்டின் முதல் கிராண்ட் ஸ்லாம் போட்டியான அவுஸ்ரேலிய ஓப்பனிலும் அவர் விளையாடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

மீள் வருகை குறித்து நடால் குறிப்பிடுகையில், காயத்திலிருந்து பூரண குணமடைந்து விட்டேன். இந்தக் காலப் பகுதி மிகுந்த மன உளைச்சலை ஏற்படுத்தும் ஒன்றாக இருந்தது. என்னைப் பொறுத்த வரை இது மீள் வருகை அல்ல. சிறு இடைவெளியே.

தரப்படுத்தலில் நான்காவது இடத்தில் இருப்பது குறித்து நான் அலட்டிக் கொள்ளவில்லை. போட்டியில் எமது திறமைகள் வெளிப்படும் போது எல்லாவற்றிலும் முன்னேற்றம் வரும். தொடர்ந்து எனது சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துவேன் என்ற நம்பிக்கை இருக்கின்றது. முர்ரே தற்போது சிறப்பான முறையில் ஆடி வருகின்றார். அவர் ஆட்டத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்றார்.

## வோஸ்னியாக்கி – சமந்தா இறுதியில் மோதல்



(மொஸ்கோ)

கிரெம்ளின் கோப்பை ரென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில், அவுஸ்ரேலியாவின் சமந்தா ஸ்டோசருடன் டென்மார்க் வீராங்கனை கரோலின் வோஸ்னியாக்கி மோதவுள்ளார்.

அரையிறுதியில் ஸ்வீடனின் சோபியா அர்விட்சனுடன் நேற்று முன்தினம் மோதிய வோஸ்னியாக்கி 6-3 என்ற கணக்கில் முதல் செட்டை கைப்பற்றி முன்னிலை பெற்றார். அடுத்த செட்டில் கடும் நெருக்கடி கொடுத்த சோபியா 7-6 (7-4) என்ற கணக்கில் வென்று பதிலடி கொடுக்க 1-1 என சமநிலை ஏற்பட்டது. இதையடுத்து, 3ஆவது செட் ஆட்டத்தில் அனல் பறந்தது.

இதில் அபாரமாக விளையாடி சோபியாவின் சர்வீஸ்களை முறியடித்த வோஸ்னியாக்கி 6-3, 6-7 (4-7), 6-4 என்ற செட் கணக்கில் வென்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

மற்றொரு அரையிறுதியில் முன்னாள் சேர்பியாவின் அனா இவானோவிச்சுடன் மோதிய சமந்தா ஸ்டோசர் (ஆஸி.) 2-6, 6-3, 6-2 என்ற செட் கணக்கில் வென்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றார்.

இறுதிப் போட்டியில் சமந்தா, வோஸ்னியாக்கி மோதுகின்றனர்.



# சர்வதேச போட்டிகளில் பங்கேற்று நாட்டிற்கு பெருமை சேர்க்கவேண்டும்

## தேசியத்தில் சாதனையுடன் தங்கம் வென்ற தனுஜா

(அளவெட்டி)

எனது கல்லூரி வாழ்க்கையின் இறுதி ஆண்டில் பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்டப் போட்டியில் தங்கம் வென்றது மகிழ்ச்சியளிக்கின்றது. கல்லூரிக்கும், ஊருக்கும், மாவட்டத்திற்கும், மாகாணத்திற்கும் பெருமை சேர்த்தது போன்று நான் பிறந்த நாட்டிற்கும் சர்வதேசப் போட்டிகளில் பங்குபற்றி பெருமை சேர்க்க வேண்டும் என்பதே இலட்சியம் என அளவெட்டி அருணோயதக் கல்லூரி வீராங்கனை சண்முகராசா தனுஜா தெரிவித்தார்.

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட தடகளப் போட்டியில் கோலூன்றி, உயரம் பாய்தலில் தங்கம் வென்று அளவெட்டி அருணோயதயக் கல்லூரிக்கும், வடமாகாணத்திற்கும் சண்முகராசா தனுஜா பெருமை சேர்த்தார்.

சாதனை நிலைநாட்டியமை குறித்து எமது செய்தியாளர் தயாளபாலன், தனுஜாவிடம் கருத்துக் கேட்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், நான் அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் கடந்த 11 வருடங்களாக மெய்வல்லுநர் போட்டிகளில் பங்குபற்றி வருகின்றேன். இந்த வருடம் எனது கல்லூரி வாழ்க்கையின் இறுதிவருடமாகும். இந்த ஆண்டும் கல்லூரிக்குப் பெருமை சேர்க்கும் வகையில் சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கு இருந்தது. எனது பயிற்றுநரான சி. சுபாஸ்கரன் அவர்களும் இந்த ஆண்டு சாதனையுடன் தங்கம் வெல்ல வேண்டும் என்று எனக்கு அடிக்கடி கூறிவந்தார். அதற்கான தகுதியும், 'திறமையும் உனக்கு உண்டு என்றும், அதற்கான வழிகளை நான் பயிற்சியின் மூலம் ஏற்படுத்தித் தருவேன் என்றும் அவர் தெரிவித்தார். அத்துடன் சிறப்பான பயிற்சிகளையும் வழங்கி வந்தார். கடந்த 2008ஆம் ஆண்டிலிருந்து தேசிய மட்ட கோலூன்றிப் பாய்தலில் தங்கப்பதக்கத்தை வென்று வந்த எனக்கு, பயிற்சியாளரின் கருத்து என்னை மேலும் சாதிக்கத் தூண்டியது. அத்துடன் இலங்கை கனிஷ்ட பிரிவினருக்கான விளையாட்டுப் போட்டி, மெய்வல்லுநர் சம்மேளன மகளிர் வெற்றிக் கிண்ணப் போட்டி, சேர். ஜோன் டாப்பெற் போட்டி, சிரேஷ்ட மெய்வல்லுநர் போட்டி போன்ற போட்டிகளிலும் பங்குபற்றி தங்கம் உட்பட பதக்கங்களை வென்றுள்ளேன்.

அந்த வகையில் இந்த ஆண்டும் கோலூன்றிப் பாய்தலில் 3.11 மீற்றர் பாய்ந்து சாதனையுடன் தங்கம் வென்றது மகிழ்ச்சி அளிக்கின்றது. நான் கோலூன்றிப் பாய்தல் போட்டிகளை பிரதான விளையாட்டாகக் கொண்டுள்ளேன். உயரம் பாய்தல் நிகழ்வை அதற்கு அடுத்த போட்டியாகவே வைத்துப் பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றேன். எனது பிரதான விளையாட்டு கோலூன்றிப் பாய்தல் விளையாட்டே. இரு போட்டி நிகழ்வுகளிலும் நான் அதிகளவான பதக்கங்களை வென்றுள்ளேன்.

இவ்வாறு நான் விளையாட்டில் கவனம் செலுத்துவதற்கு எனது குடும்பம் தரும் ஒத்துழைப்பும் முக்கிய காரணம். விவசாயக் குடும்பமான எனக்கு ஒரு சகோதரர் இருக்கின்றார். எனது விளையாட்டுத்துறை வளர்ச்சிக்கு எனது குடும்பத்தினர் சிறந்த முறையில் பங்களிப்புச் செய்து வருகின்றனர். எனது ஆர்வத்தைப் புரிந்து கொண்டு அதில் நான் பயணம் செய்ய எந்தத் தடையுமின்றி எனக்கான ஒத்துழைப்பை வழங்குவது எல்லோராலும் முடியாது. ஏனெனில், இன்றைய நிலையில் யாழ்ப்பாணத்தில் பெற்றோர்கள் படிப்பதற்கே அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகின்றனர். விளையாட்டு என்று கதைத்தாலே அது உனக்கு சாப்பாடு போடுமா என்று கேட்கின்றனர். அந்த வகையில் எனது குடும்பம் என் உணர்வுகளைப் புரிந்துகொண்டு எனக்கு ஒத்துழைப்பு வழங்கி வருவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

எனது பாடசாலைச் சமூகம், எனது பயிற்றுநர் சின்னையா சுபாஸ்கரன் மற்றும் எனது கல்லூரி ஆசிரியர், மாணவர்கள், பழைய மாணவர் சங்கம், ஜனசக்தி காப்புறுதி நிறுவனம் என அனைவரும்



வெற்றிக்குப் பக்கபலமாக இருந்துள்ளனர். அவர்கள் அனைவருக்கும் இவ்விடத்தில் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

எனது கல்லூரிக்கும், எனது ஊர், மாகாணத்திற்கும் பெருமை சேர்த்தது போல எதிர்காலத்தில் இலங்கை சார்பாக சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி தாய் நாட்டுக்கும் பெருமை சேர்க்க வேண்டும் என்பது தான் எனது இலட்சியமாக உள்ளது.

இந்த இலட்சியத்தை நோக்கிய பயணத்தில் நான் வெற்றிகரமாகப் பயணிப்பதாகவே உணர்கின்றேன். எனக்கான நவீன வசதி, வாய்ப்பு சிறப்புறக் கிடைக்குமேயானால் அந்த இலக்கை வெகு விரைவில் பெற்றுவிடுவேன் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (93)

# ரஜீவ்குமார் அதிரடிச் சதம் அரையிறுதியில் சென்றல்



(யாழ்ப்பாணம்)

ரஜீவ்குமாரின் சிறப்பான அதிரடிச் சதத்துணையுடன் யாழ். சென்றல் அணி அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது.

நியூஸ்ரார் விளையாட்டுக்கழகத்தினால் யாழ். மாவட்ட முன்னணி கிரிக்கெட் அணிகளுக்கிடையில் நடத்தப்பட்டுவரும் நியூஸ்ரார் பிறீமியர் லீக் ருவெண்ரி-20 கிரிக்கெட் தொடரின் முதலாவது காலிறுதிப் போட்டி அண்மையில் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் யாழ். சென்றல் அணியும், கிராஸ் ஹொப்பர்ஸ் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய யாழ். சென்றல் அணி ரஜீவ்குமாரின் அதிரடிச் சதத்துணையுடன் சிறப்பான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் யாழ். சென்றல் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 189 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரஜீவ்குமார் நான்கு சிக்ஸர்கள், 13 பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 103 ஓட்டங்களைப் பெற்றார். அத்துடன் யாழ். மாவட்டத்தில் வெள்ளைப் பந்து மற்றும் வர்ண ஆடை அறிமுகமாகிய பின்னர் முதல் சதமடித்த வீரர் என்ற சிறப்பையும் ரஜீவ்குமார் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. மற்றும் கலிஸ்ரன் 22, பாலேந்திரா 14, சலிஸ்ரன் 16 என்று ஆட்டமிழக்காது 13 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கஜதீபன் இரண்டு, கபில்தேவ், பார்த்தீபன் தலா. ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு 190 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கிராஸ் ஹொப்பர்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 152 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது.

இதில் கஜதீபன் சிறப்பான முறையில் ஆடி 55 ஓட்டங்களைப் பெற்றதுடன் அணி கௌரவமான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றுக்கொள்ள வழிசமைத்தார். மற்றும் காந்தசீலன் 29, பார்த்தீபன் 22, அஜித் 12 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் றொசான் மூன்று, நிமலகாந் ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இவ்வெற்றியின் மூலம் யாழ். சென்றல் அணி அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. இப்போட்டியின் ஆட்ட நாயகனாக ரஜீவ்குமார் தெரிவானார்.

இதேவேளை, யாழ். சென்றல் அரையிறுதிப் போட்டியில் கொக்குவில் கே.சி.சி.சி. அணியை எதிர்கொள்ளவுள்ளது. அத்துடன் முதலாவது அரையிறுதிப் போட்டியில் மானிப்பாய் பரிஸ் அணி, சென்றலைட்ஸ் அணியை வீழ்த்தி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)

## கிரிக்கெட் உபகரணம் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கிரிக்கெட் அணிகளுக்கான உபகரணம் வழங்கும் நிகழ்வு நாளைய தினம் யாழ். மாவட்ட கிரிக்கெட் அக்டமியில் நடைபெறவுள்ளது.

இதில் கடந்த 31-08-2012 அன்று கேதரமாயவில் இலங்கை கிரிக்கெட் சங்கத்தால் நடத்தப்பட்ட கூட்டம் பற்றி யாழ். மாவட்ட கிரிக்கெட் நிர்வாக சபைக்கு கொண்டு வருதலும் இடம்பெறவுள்ளதாக யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தால் தெரிவிக்கப்பட்டது.

இதில் பதிவு செய்யப்பட்ட அணிகளை தவறாது கலந்துகொள்ளுமாறும் அவர்கள் கேட்டுள்ளனர். (எஸ்.பி.)

## சென். ஜோன்ஸ் கல்லூரி வெற்றி

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி அருணோதயக் கல்லூரி அணிக்கெதிரான சிநேகபூர்வ கால்பந்தாட்டப் போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி வெற்றிபெற்றது.

கடந்த 17ஆம் திகதி சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டி வயது அடிப்படையில் நடைபெற்றது. இதில் 14 வயதுப் பிரிவில் 1-0 என்ற கோல் கணக்கிலும், 16 வயதுப் பிரிவில் 1-0 என்ற கோல் கணக்கிலும், 18 வயதுப் பிரிவில் 2-0 என்ற கோல் கணக்கிலும், 20 வயதுப் பிரிவில் 1-0 என்ற கோல் கணக்கிலும் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி முழுமையாக வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி., 20)



படப்பிடிப்பு : சுரேஷ்

# யாரோ ஒருவன்

**- சாரு நிவேதிதா -**



மிகோஸ் கஸான்ஸாகிஸ் Report to Creco என்ற நாவலை எழுதிக் கொண்டிருந்த போது மரணப் படுக்கையில் கிடக்கிறார். சாவதற்குள் அந்த நாவலை முடித்து விட முடியுமா என்று தெரியவில்லை. தன் மனைவியிடம் அப்போது அவர் சொன்னாராம். "தெருவில் போய் நின்று கொண்டு எல்லோரிடமும் அவரவர் வாழ்நாளில் ஒரே ஒரு நாளைத் தனக்காக தானம் தர முடியுமா என்று பிச்சை கேட்கலாம் என்று தோன்றுகிறது." இதை கஸான்ஸாகிஸின் மனைவி அந்த நாவலின் முன்னுரையில் எழுதியிருக்கிறார்.

அதே போல் நான் என் மொழிபெயர்ப்பாளர்களிடம் "உங்கள் நேரத்தின் ஒரு பகுதியை என் எழுத்துக்காக தானம் தாருங்கள்" என்று உங்கள் பாதம் தொட்டு வணங்கிக் கேட்டுக் கொள்கிறேன்.

யாரோ ஒருத்தருக்காக ஏன் உங்கள் நேரத்தை செலவிட வேண்டும் என்று சிலர் உங்களைக் கேட்கலாம். அவர்களிடம் சொல்லுங்கள். எழுத்தாளன் என்பவன் யாரோ ஒருவன் அல்ல. அவன் ஒரு தேசம். அவன் ஒரு மொழி. அவன் ஒரு கலாச்சாரம். அவன் வாழும் காலத்திற்காக சாட்சி கொடுப்பவன் அவன்.

வேறு எந்த மொழிக்கும் இந்த அவலநிலை இல்லை. ஒரு வங்கத்துக் கவிஞன் பேசினால் அவனை மொழி பெயர்க்க அரை டசின் பேர் அவன் பின்னால் வருகிறார்கள். கார்ஸியா மார்க்கேஸ் எத்தனை நாவல்கள், குறுநாவல்கள், சிறுகதைகள் எழுதியிருக்கிறார்? இருபது தொகுப்புகள் வரும். Mario Vargas Llosa-வும் அப்படியே. ஒரு டசின் நாவல்களுக்கு மேல் எழுதி இருக்கிறார். ஒவ்வொன்றும் 500 பக்கங்கள் இருக்கும். War of the end of the world நாவல் பார்க்கவே டிக்ஷனரி சைஸுக்கு இருக்கும்.

இவர்களைப் போல் எத்தனையோ எழுத்தாளர்கள். இவர்களெல்லாம் என்ன, மொழிபெயர்ப்பாளர்களிடமா கெஞ்சிக் கொண்டிருக்கிறார்கள்?

தமிழின் சாபக்கேடு இது. ஆங்கிலம் தெரிந்த elite பிராமணர்களுக்கு இலக்கியம் தெரியவில்லை. அவர்கள் ஹிண்டு பேப்பர் படித்துக் கொண்டு நாடக மேதைகள் மௌலி, க்ரேஸி மோகன் போன்றவர்களின் நாடகங்களை ரசித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் காலத்தில் எழுதிய எல்லா எழுத்தாளர்களுக்கும் ஆங்கிலம் தெரிந்திருந்தது. அவர்கள் அனைவரும் நன்கு படித்த பிராமணக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். கு.ப.ரா., தி. ஜானகிராமன், தி.ஜ.ரங்கநாதன், மௌனி, சி.சு. செல்லப்பா, க.நா.சு., அசோகமித்திரன், இந்திரா பார்த்தசாரதி என்று சொல்லிக் கொண்டே போகலாம். இதற்குப் பிறகு திராவிடக் கட்சிகளின் ஆதிக்கத்துக்குப் பிறகு பிராமணர்கள் தமிழாச்சு, மயிராச்சு என்று சொல்லி விட்டுத் தமிழைக் கை கழுவி விட்டனர். இப்போதைய எழுத்தாளர்களில் ஒரே ஒரு-வரைத் தவிர - அவரையும் யாருக்கும் தெரியாது - மற்ற யாரும் பிராமணர் அல்லர்.

இதே சமயத்தில் எங்களைப் போல் •கிராமத்துப் பள்ளிக்கூடங்களில் படித்து வந்தவர்களால் ஆங்கிலத்தில் சுயமாக எழுத முடியாமல் போனது.

ஒன்றைத் தெளிவு படுத்தி விடுகிறேன். இலக்கியப் படைப்புகளை மொழிபெயர்க்க வேண்டுமானால் அதைக் கல்வியாளர்கள்தான் முன்னெடுத்துச் செய்ய வேண்டும். தமிழ்நாட்டில் அந்த இடம்தான் பெரும் மௌடீகத்தின் உறைவிடமாக இருக்கிறது. சர்வதேச அளவில் பிரபலமான ஆங்கில மொழிபெயர்ப்பாளர்கள் (தமிழ்) இப்போதுதான் திருவள்ளுவருக்கு வந்திருக்கிறார்கள். சிலர் ஸ்ரீராமானுஜரை மொழிபெயர்த்து வருகிறார்கள். இப்போது புரிகிறதா, என் பதற்றத்தின் காரணம்?

2000 ஆண்டுகளாக தமிழ் எழுத்தாளன் யாரும் காணாத, யாரும் கேட்காத வன அருவியைப் போல் வாழ்ந்து கொண்டிருக்கிறான். ஒரு நூற்றாண்டுத் தனிமை என்றார் மார்க்கேஸ். தமிழ் எழுத்தாளனின் தனிமை 2000 ஆண்டு நீண்டது. இதை நான் உடைக்க விரும்புகிறேன். தமிழ் எழுத்து என்று சர்வதேச அளவில் இன்னும் அறிமுகமே ஆகவில்லை. இன்றைய தமிழ் எழுத்தாளர் அநேகருடைய எழுத்தும் சுமார் ஆறு ஐரோப்பிய மொழிகளில் மொழிபெயர்க்கப் பட்டிருக்கும். இவர்களுடைய பயோடேட்டாவைப் பார்த்தால் இவர்களின் எழுத்து செக், ரஷ்யன், ஹங்கேரியன் போன்ற மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டிருப்பதை நீங்கள் காணலாம். ஆனால் இது எல்லாமே டுபாக்கூர் மொழிபெயர்ப்புகள். சரியான மொழிபெயர்ப்பு என்றால் அவர் பெயர் நம்முடைய இந்தி எழுத்தாளர் நிர்மல் வர்மா அளவுக்காவது வெளியே சென்றிருக்க வேண்டுமே? நமக்கு சாதத் ஹஸன் மாண்ட்டோவைத் தெரியும். உலகம் பூராவும் அவரைத் தெரியும். ஆனால் நம்முடைய நகுலனை, ப.சிங்காரத்தை யாருக்குத் தெரியும்? தமிழர்களுக்கே தெரியாதே? இதை ஆங்கிலம் தெரிந்த, என் எழுத்தில் பரிச்சயமும் என் மீது மரியாதையும் கொண்ட வாசக நண்பர்களின் உதவியால் உடைக்க விரும்புகிறேன். 2000 ஆண்டுகளாக நீடிக்கும் இந்த அவல நிலையை நான் உங்கள் துணையைக் கொண்டு மீற விரும்புகிறேன்.

என் வருத்தமும் பதற்றமும் உங்களுக்குப் புரிகிறதா என்று கூட என்னால் யூகிக்க முடியவில்லை. இது ஏதோ ஒரு அர்த்தமற்ற soliloquy மாதிரி கூட எனக்கு சமயங்களில் தோன்றுகிறது.

உலகளவில் பிரபலமான மேன் ஏஷியன் புக்கர் பரிசைப் பெறும் பல நாவல்கள் சராசரியாக இருக்கின்றன. தமிழில் அதை விடப் பிரமாதமான பல நாவல்கள் உள்ளன. ஒன்றே ஒன்று, நாம் அதை வேறு மொழிகளில் கொண்டு செல்வதில்லை.

நல்ல மொழிபெயர்ப்பின் மூலமாக மட்டுமே இதைச் செய்ய முடியும். மொழிபெயர்ப்பாளர்களுக்குத் தனிப்பட்ட முறையில் சில சிரமங்கள் ஏற்படும். உறவினர்களுக்கு உங்கள் பணி பற்றிப் புரியாது. புரிய வைக்க முயல வேண்டாம். முயன்றால் தோல்வி அடைவீர்கள். குடித்தால் ஒன்றும் சொல்ல மாட்டார்கள் படித்தால் உங்களை மனநோய் இல்லத்தில் சேர்த்து விடுவார்கள். அதுதான் தமிழ்ன் குணம். இந்த நிலையில் உங்கள் உறவினர்களையும் சமாளித்துக் கொண்டு செய்ய வேண்டிய வேலை இது. ஏனென்றால், வரலாற்றில் உங்கள் பெயரும் தொண்டும் நிற்கும்.

---

# கோடம்பாக்கத்தில் சொன்னார்கள்!

அஜீத் கேட்டால் அவர் படத்தில் ஒரு பாடலுக்கு ஆடிக் கொடுத்துவிட்டுப் போவேன்.

**- "இங்கிலிஷ் விங்கிலிஷ்" ஸ்ரீதேவி.**



நானா படேகர், அர்ஜுன், ராம்சரண் தேஜா, ஜுனியர் என்.டி.ஆர்., மகேஷ்பாபு, கார்த்தி, சூர்யா, விஜய் ஆகியோருடன் நடித்திருந்தாலும் எனக்கு ஏற்ற பொருத்தமான அதே சமயம் ராசியான ஜோடி கார்த்திதான்.

**- காஜல் அகர்வால்**



கமல் சாருடன் எனக்கு டூயட் கிடையாது. ஒரு முத்தக்காட்சி கூட கிடையாது. இதனால் எனக்கு எந்த வருத்தமும் கிடையாது. அவ-ரோடு சேர்ந்து ஒரு படத்தில் நடித்தோமே என்ற அந்த ஒரு பெருமை போதும் எனக்கு.

**- "விஸ்வரூபம்" பூஜா குமார்**

அரசியல் கதையா, வேண்டாம் ஆளை விடுங்கள். காதல், காமெடி கதைகள் இருந்தால் மட்டும் சொல்லுங்கள்.

**- "சகுனி" கார்த்தி**

சமூகப் பார்வை இல்லாத கதைகளில் நடிக்க முடியாது. மேலும், தொடர்ந்து நடிக்க வேண்டும் என்ற ஆசையும் எனக்கில்லை... டைரக்ஷனிலேயே என் முழு கவனமும்.

**- "சாட்டை" சமுத்திரக்கனி**

பேரன், பேத்தி எடுத்து தாத்தாவாகிவிட்டால், "சிக்ஸ் பேக்" உடலமைப்பில் நடிக்கக் கூடாதா?

**- ரஜினியின் நெருங்கிய நண்பரும் தெலுங்கு நடிகருமான மோகன்பாபு**



இதுவரை எந்த நடிகையும் நடிக்காத இரட்டையர் வேடத்தில் நடித்தது, எனக்கு பெரிய திருப்தியாக உள்ளது. இனி, வெயிட்டான படங்கள் கிடைத்தால் மட்டுமே நடிப்பேன்...

**- "சாருலதா" ப்ரியா மணி**

"அருந்ததி"யை விட இந்தப் படம் அனுஷ்காவுக்கு பெரிய பெயரைப் பெற்றுத் தரும். ஜோர்ஜியா காடுகளில் இரண்டு மாதங்களுக்கு மேல் ஷூட்டிங் நடந்தது. எண்பத்து ஐந்து ஆண்களுக்கு மத்தியில் அவர் ஒருவர் மட்டுமே பெண் நடிகை. சொகுசான ரூம், கட்டில், மின்சாரம் என எதுவும் இல்லாதபோதும், பந்தா இல்லாமல் நடித்துக்கொடுத்தார். அதனால் அவர் மீது எனக்கு மரியாதை அதிகரித்துள்ளது.

**- "இரண்டாம் உலகம்" ஆர்யா**

தமிழில் இதுவரை எனக்கு குடும்பப் ப்ாங்கான வேடங்கள்தான் கிடைத்தன. அதனால் என்னால் கிளாமராக நடிக்க முடியாது என சில இயக்குநர்கள் நினைக்கலாம். அதற்காகத்தான் என்னாலும் கிளாமராக நடிக்க முடியும் என கூறினேன். சினிமாவில் கிளாமரும் ஓர் அங்கம் என்பதால்தான் அப்படிக் கூறினேன்.

**- "சுப்ரமணியபுரம்" ஸ்வாதி**



---

## ஆபிரகாம் லிங்கனின் முயற்சி!


தகரக் கதவுடன் கூடிய மரக்கூண்டு வீட்டில் வாழ்க்கையைத் தொடங்கிய லிங்கன் வெள்ளை மாளிகைக்குள் நுழையும் வரை சந்தித்த தோல்விகள் ஏராளம். அவர் சந்தித்த தோல்விகளை வேறு யார் அனுபவித்திருந்தாலும் வெறுத்துப் போயிருப்பார்கள்.

தன்னுடைய 19 ஆம் வயதில் சிறிய பெட்டிக்கடை வைத்தார். வியாபாரம் நொடித்துப் போனது.

20 வயதில் மதுபானக் கடை ஒன்றைத் திறந்தார். கையிலிருந்த பொருள் அனைத்தையும் இழந்து நஷ்டமடைந்தார்.

23ஆவது வயதில் இலினாய்ஸ் மாநில சட்டசபைத் தேர்தலில் நின்று தோற்றுப் போனார்.

26 வயதில் உயிருக்கு உயிராய் நேசித்த ரட்லெஜ் என்ற இளம் பெண்ணை மணமுடிப்பதற்குள் காலன் அந்தப் பெண்ணை அழைத்துக் கொண்டான்.



27ஆவது வயதில் கடுமையான நரம்புத் தளர்ச்சியால் பாதிக்கப்பட்டார்.

49ஆவது வயதில் அமெரிக்க செனட்டர் தேர்தலில் வெற்றி வாய்ப்பை இழந்தார்.

இப்படித் தொடர் தோல்விகளால் துவண்டு விடாத லிங்கன் 1861ஆம் ஆண்டு அமெரிக்காவின் 16ஆவது ஜனாதிபதியா-கப் பொறுப்பேற்று சரித்திரம் படைத்தார்.

“ஒரு மன்னனுக்கு தன் மந்திரியிடம் கருத்து வேற்றுமை ஏற்பட்டது. அவனை ஒழித்துக் கட்ட ரும்பினான். ஆனால், மக்கள் சந்தேகப்பட்டு ன்னையே எதிர்ப்பார்கள் என அறிந்து, ந்திரியிடம் ஒரு கடிதத்தை உறையில் போட்டுக் காடுத்து, பக்கத்து நாட்டு அரசனிடம் தூது னுப்பினான்.



# ரன்னரின் கடிதம்!

அந்தக் கடிதத்தில், “இந்தக் கடிதம் கொண்டு ரும் மந்திரியின் தலையைக் கொய்து விடவும்” ன்று எழுதப்பட்டிருந்தது.

அதைப் படித்துப் பார்த்த பக்கத்து நாட்டு ன்னன் மந்திரியிடம் விசயத்தைச் சொல்லி, “ஏன் ன் மன்னர் இப்படி எழுதியிருக்கிறார்?” என்று ான்.

“அரசே! என் எதிர்காலத்தைக் கணித்த ஜாதிடர் ஒருவன். நான் எங்கு இறக்கிறேனோ ங்கு 12 வருடங்கள் மழை பெய்யாது ன்று கூறியுள்ளான். அதை மன்னரிடம் தரிவித்திருந்தேன். என்னைக் கொல்ல எண்ணிய ன்னன் தன் தேசத்தைக் காப்பாற்றவே இப்படி ழ்ச்சி செய்து தங்களிடம் அனுப்பியுள்ளான்” ன்றான் மந்திரி.

பக்கத்து நாட்டு மன்னன் தூது வந்த மந்திரியை டனடியாக நாட்டை விட்டு வெளியேறும்படி சொன்னான்.


**மந்திரி மதிநுட்பத்தால் தப்பித்தான்.**


# காதல் கோயில்

இந்தியாவின் மத்தியப் பிரதேசத்தில் உள்ளது “காதல் கோயில்” என்றழைக்கப்படும் கஜுராஹோ. நாள்தோறும் கோயிலைக் காண வந்து குவியும் ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகளுக்காகவே ஏராளமான ஐந்து நட்சத்திர ஆடம்பர ஹோட்டல்கள் இச்சிறு கிராமத்தில் உண்டு.

கிபி 950 முதல் நூற்றைம்பது வருடகால இடைவெளியில் கஜுராஹோ கோயில்கள் கட்டப்பட்டிருக்கலாம் என்று சொல்லப்படுகிறது. இதைக் கட்டியது எந்த மன்னர் பரம்பரையினரும் அல்ல. சிற்பக்கலையில் வல்லுனர்களான சன்தேளர்கள் என்பவர்கள்தான் இந்தக் கோயிலை நிர்மாணித்தவர்கள் என்று சொல்லப்படுகிறது.

19ஆவது நூற்றாண்டில் கஜுராஹோவில் 80இற்கும் மேற்பட்ட கோயில்கள் இருந்தன. இப்போது மிச்சமிருப்பவை 22 கோயில்கள் மட்டுமே. யுனெஸ்கோ அமைப்பின் பாரம்பரியச் சின்னமாக அறிவிக்கப்பட்டிருக்கும் கஜுராஹோ 13ஆம் நூற்றாண்டு காலத்தில் கட்டப்பட்ட கோயில் என்றாலும் 19ஆவது நூற்றாண்டின் இறுதிவரை சுற்றுலாப் பயணிகள் யாருக்கும் இந்தக் கோயிலைப் பற்றிய செய்திகளோ சிறப்புகளோ தெரிந்திருக்கவில்லை. இந்தக் கோயிலின் சிறப்பை உலகத்துக்கு முதன் முதலாக எடுத்துச் சொன்னவர் அலெக்ஸாண்டர் கன்னிங்ஹாம் என்ற தொல்லியல் நிபுணர்.





கஜுராஹோ என்றாலே பாலியல் சம்பந்தப்பட்ட சிலைகள் மட்டுமே இருக்கும் என்று எண்ணினால் அது மிகவும் தவறு. அங்கே உள்ள 22 கோயில்களில் நான்கு அல்லது ஐந்து கோயில்களில் மட்டுமே பாலியல் சம்பந்தமான சிற்பங்கள் இருக்கும். மற்ற கோயில்களில் ஆன்மிகம் சம்பந்தமான சிலைகளே அழகுற அணிவகுத்துள்ளன.

ஆன்மிகத் தலத்தில் எதற்காக இத்தகைய பாலியல் சிற்பங்கள்? பொதுவாக “கடவுளை நாம் அடைய வேண்டுமானால் காம குரோதங்கள் அனைத்தையும் வெளியே விட்டுவிட்டு உள்ளே செல்ல வேண்டும்” என்பதைக் காட்டுவதற்காகவே இவை செதுக்கப்பட்டுள்ளன என்பார்கள். ஆண் பெண் தாம்பத்தியம் புனிதமானது என்பதை உலகத்தினருக்கு உணர்த்தவே இந்தக் காமசூத்திரக் காதல் கலைகளை சிற்பங்களாக வடித்து கோயிலில் நிறுவியிருக்கிறார்கள் என்றும் சொல்கிறார்கள். இந்த சிற்பங்களைக் காண உலகின் பல பகுதியைச் சேர்ந்த வெளிநாட்டவரும் ஜோடி ஜோடியாகத் திரண்டு வருகிறார்கள்.

இங்கே சிவபெருமான், விஷ்ணு, முருகன், அனுமான், கிருஷ்ணன், பார்வதி, லட்சுமி போன்ற எல்லா தெய்வங்களுக்கும் கோயில்கள் உள்ளதால் இங்கு வருடம் முழுக்க திருவிழாக்கள் நடந்தபடி இருக்கின்றன.

பண்டைய கால “லவானியா” மொழியில் “கஜுர்” என்றால் பேரீச்சம்பழம் என்றும் “ரஹோ” என்றால் தங்கம் என்றும் அர்த்தம். ஒருகாலத்தில் இந்தப் பகுதியில் விளைந்த பேரீச்சம் பழங்கள் தங்கம் போன்ற நிறத்தில் இருந்ததால் இப்பிரதேசத்துக்கு கஜுராஹோ என்று பெயர் வந்ததாம்.

உலகத்தின் ஏழு அதிசயங்களில் ஒன்றாக தாஜ்மகால் மதிக்கப்படுவதைப் போல, இந்தியாவின் ஏழு அதிசயங்களில் ஒன்றாக கஜுராஹோ போற்றப்படுகிறது. வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இந்தக் கோயிலுக்குள் காலை பத்து மணிக்கு உள்ளே நுழைந்தால் மாலை ஐந்து மணிக்குத்தான் வெளியே வருகிறார்களாம்.

# அப்பிளும் அமெரிக்கப் பொருளாதாரமும்

– நரேன் கட்டுரையிலிருந்து –

கடந்த செப்டம்பர் 12ஆம் திகதி ப்பிள் நிறுவனம், தங்களுடைய தாவது தலைமுறை செல்பேசியை போன் 5) அறிமுகப்படுத்தியது. க்காவில் மட்டுமல்ல உலகம் ழுவதிலும் பெரும் கிளர்ச்சியை ந்த அறிவிப்பு ஏற்படுத்தியது. மறைந்த ஸ்டீவ் ஜொப்ஸுக்கு தைவிடச் சிறப்பான அஞ்சலி வேறெ யும் இருக்க முடியாது. முன்பதிவு ரம்பித்த முதல் நாளில் மட்டும் 2 ல்லியன் போன்களுக்கான பதிவு ந்து முடிந்திருக்கிறது. ஐபோன் முதல் வாடிக்கையாளரின் கையில் ழும்போது இந்த எண்ணிக்கை மில்லியனாக மாறியிருக்கும் கிறார்கள். டிசம்பர் முடிய ருக்கும் காலாண்டில் ஐபோன் மட்டும் 2225 மில்லியன் போன்கள் றிருக்கும். இந்த வெற்றியை படி அழைப்பது என்று திகைத்துக் ாண்டிருக்கின்றன வோல் ஸ்ட்ரீட் றுவனங்கள்.

“அப்பிளின் ஐபோன் 5இன் ற்பனை அமெரிக்கப் பொருளா ரத்தை மேம்படுத்தும், அமெரிக்க ாத்த கூட்டு உற்பத்தியினை 0.25% - % வரை நான்காவது காலாண்டில் உயர்த்தும்” என்கிறார் பொருளாதார நிபுணர் மைக்கேல் பெரோலி (Michael Feroli). ஒரே ஒரு போன் இந்த அதிசயத்தை நிகழ்த்துமா என்பது டிசம்பரில்தான் தெரியும். ஆனால், அப்பிள் நிறுவனத்துக்கு இதைச் செய்யக்கூடிய சாத்தியமும் வாடிக்கையாளர் பலமும் இருக்கிறது.

2007இல் ஐபோன் என்றொரு புது ஸ்மார்ட் போனை ஸ்டீவ் ஜொப்ஸ் அறிமுகம் செய்தபோது, உலகம் எழுந்து நின்று கைதட்டியது. ஏனெனில் அதற்கு முன்புவரை போன்களில் அடிப்படை வசதிகள் மட்டுமே இருந்தன. பேசுவதும், குறுஞ்செய்தி அனுப்புவதும் மட்டுமே சாத்தியம். கூடுதல் வசதி என்றால் கலண்டர் இருக்கும், அவ்வளவுதான். போதாததற்கு தடியான வடிவமைப்பு, பொடி எழுத்துகள். ஸ்டீவ் ஜொப்ஸும் அப்பிளின் டிசைனர்களும் போனின் இலக்கணத்தை ஒட்டுமொத்தமாக மாற்றியமைத்தார்கள். குறைவான விசைப் பலகை, வண்ணமயமான டிஸ்ப்ளே, தொடுதிரை, “ஆப்ஸ்” என்றழைக்கப்பட்ட குறு மென்பொருள்கள், விளையாட்டுகள், வீடியோ என ஒரு போனுக்குள் ஒரு உலகத்தையே கொண்டுவந்த பெருமை அப்பிளையே சாரும்.



2010இல் ் மைக்ரோசொ ப்டைப் பின்னுக்குத் தள்ளி அமெரிக்கச் சந்தையில் முன்னணி தொழில்நுட்ப நிறுவனமாக அப்பிள் உயர்ந்தது. ஐபோட், ஐபோன் பின்னாளில் ஐபாட் என்று டிஜிட்டல் வாடிக்கையாளர் சாதனங்களைக் கண்டறிந்து சந்தையில் இறக்கி, அமெரிக்காவின் மிகப் பெரிய நிறுவனமாக வளர்ந்தது. ஸ்டீவ் ஜொப்ஸ் தனது சாதுரியத்தைப் பயன்படுத்தி டிஜிட்டல் வெளியைக் கைப்பற்றினார். முதலில் இசை (ஐபோட் ஐ ட்யுன்ஸ்), பிறகு தொலைத்தொடர்பு (ஐபோன்) இப்போது கல்வி (ஐபாட்) என்று பெரு வெளிகளுக்கான சாத்தியங்களை இரண்டறக் கலந்து, அதை உலகமெங்கும் பரப்பியதுதான் ஸ்டீவ் ஜொப்ஸின் வெற்றிக்கான ரகசியம்.

இன்றைக்கு அமெரிக்காவில் அப்பிள் ஸ்டோர்கள் என்றழைக்கப்படும் அப்பிள் நிறுவனத்தின் கடைகளில் பொருள்கள் வாங்க சாப்பாடு மூட்டை கட்டிக்கொண்டு சராசரி அமெரிக்கர்கள் கியூவில் நிற்கிறார்கள். சரிந்து கொண்டிருக்கும் அமெரிக்கப் பொருளாதாரத்தின் நம்பிக்கை நட்சத்திரமாக அப்பிள் முன்னிறுத்தப்படுகிறது. அப்பிளை அடிப்படையாகக் கொண்டு சம்பாதிக்கும் சிறு நிறுவனங்கள் அதிகம். இப்படி அப்பிளைச் சார்ந்திருக்கும் தொழில் முனைவோர் குழுமம் அமெரிக்காவில் நீடித்து வரும் வேலையில்லாப் பிரச்சினையின் சூழலை கொஞ்சம் கொஞ்சமாக மாற்றியமைப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உலகில் சந்தை மதிப்பில் மிகப் பெரிய நிறுவனமாக இருந்த எக்சான் மொபிலை பின்னுக்கு தள்ளி 2011இல் அமெரிக்காவின் உச்ச நிறுவனமாக அப்பிள் மாறியது. இன்றைய அப்பிள் பங்கின் சந்தை மதிப்பு கிட்டத்திட்ட 650 பில்லியன் டொலர். சுருக்கமாகச் சொன்னால் இந்த வருடத்தில் மட்டும் அப்பிளின் பங்கு மதிப்பு 60% உயர்வடைந்திருக்கிறது.

அதிசயிக்கத்தக்க இந்த மாற்றம் வெறும் பத்தாண்டுகளில் நிகழ்ந்திருக்கிறது என்பதுதான் ஆச்சரியம். ஸ்டீவ் ஜொப்ஸ் ஒரு ஜீனியஸ் என்றால், அவருக்குப் பின் பொறுப்பேற்ற டிம் குக் சந்தை விநியோகத்தில் மன்னன். சந்தைக்கு புதிய போன் வரும்போது அதனுடன் புதிய ஒபரேட்டிங் சிஸ்டமான ஐஓஎஸ் 6ஆம், அதற்கு ஈடு கொடுக்கும் புது “ஆப்ஸ்”களும், மென்பொருள்களும் இணையாக களமிறங்கும். இப்படி தொழில்நுட்பம், வடிவமைப்பு, சந்தைப்படுத்தும் திறன் என்று அனைத்திலும் முன்னணியில் இருக்கும் இன்னொரு நிறுவனம் இல்லை.

இதே ரீதியில் அப்பிள் நிறுவனம் வளர்ந்தால் இன்னும் மூன்று ஆண்டுகளுக்குள் அப்பிளின் சந்தை மதிப்பு ஒரு ட்ரில்லியன் டொலர்களை எட்டிப்பிடிக்கலாம். அது மட்டும் நடந்துவிட்டால், மனித குல வரலாற்றில் முதல் முறையாக ஒரு ட்ரில்லியன் டொலரைத் தொடும் தனியார் நிறுவனம் என்னும் பெருமை அப்பிளுக்குக் கிடைக்கும்.

# குறுகி வரும் எதிர்காலம்

கருவறையில் இடம் தந்தேன்..!
உன் வீட்டில் நான் வசிக்க..
இல்லையா சிறு அறை..!

இது ஒரு கவிஞனின் ஹைக்கூ கவிதை. பெற்ற பிள்ளைகளால் அன்பாகப் பராமரிக்கப்படாமல் முதியோர் இல்லத்தில் தள்ளப்பட்ட பெற்றோரின் ஆதங்கக் குரலாய் ஒலிக்கிறது.

எம்மை வளர்த்து ஆளாக்கியவர்கள் தமது வாழ்நாளில் பல்வேறுபட்ட தியாகங்களைப் புரிந்து எம்மை இந்த நிலைக்கு கொண்டு வந்த எங்களுடைய பெற்றோர் 'ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்' தந்தை, எல்லோருமே நவீன உலகமயமாக்கல் யுகத்தில் பொருளாதாரத்தை மையமாகக் கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கும் அவர்களது பிள்ளைகளால் முதியோர் இல்லங்களில் வாழ்கின்றார்கள்.

எமது பெற்றோரை பராமரிக்க எமக்கு கால அவகாசம் கிடைப்பதில்லை. கடந்த ஒரு தசாப்தத்துக்கு இடைப்பட்ட காலத்தில் முதியோர் இல்லங்களில் தமது பெற்றோரை சேர்த்துவிடும் நிலை அதிகரித்து வருவதாக அண்மைக்கால புள்ளி விபரத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

'நாம் பெற்றோர் ஆகும் வரை நமது பெற்றோரின் அருமை தெரியாது' என்ற முன்னோர் கருத்துக்கு வலுசேர்க்கும் விதமாகவே இன்றைய கால கட்டத்தில் பெற்றோராக இருப்பவர்கள் தங்கள் குழந்தைகளின் எதிர்காலத்தை எண்ணி எண்ணி நாட்களை நகர்த்திக் கொண்டிருக்கின்றனர்.



இயந்திரமான வாழ்க்கை, மேலை நாடுகளின் கலாசார தாக்கம் போன்றவற்றின் காரணமாக பெற்றோர் தங்கள் குழந்தைகளுடன் கொஞ்சி விளையாடும் நேரங்கள் குறைந்து கொண்டே வருகின்றன. இதனால்தான் தற்போதெல்லாம் பிஞ்சுக் குழந்தைகளை மணிக்கணக்கில் பாதுகாக்க குழந்தைப் பராமரிப்பு இல்லங்களையும், பிள்ளை பராமரிக்கும் பெண்களையும் தேடிப் பிடிக்க வேண்டிய சூழல் உருவாகிவிட்டது.

இன்று குழந்தைகளாக இருப்பவர்கள் பிற்காலத்தில் பெற்றோராக மாறும் போது தம்மைப் பெற்றெடுத்த தாய் தந்தையர்களை முதியோர் இல்லங்களுக்கு அனுப்புவதென்பது கலாசாரம் ஆகிவிட்டது. பணம் கட்டி விட்டால் போதும் முதியோர் இல்லங்களில் பெற்றோர் மகிழ்ச்சியாக இருப்பார்கள் என்று நம்பும் இன்றைய பிள்ளைகள், முதியோர் இல்லங்களில் தங்கள் பெற்றோர் படும் துன்ப துயரங்களை எண்ணுவதில்லை.

வளரும் வரைதான் பெற்றோர்- சொந்தக் காலில் நின்று விட்டால் யாரும் தேவையில்லை என்ற கண்ணோட்டம் இன்றைய இளைஞர்கள், யுவதிகள் மனதில் ஆழமாகவே வேரூன்றியிருக்கிறது. ஆனால், தாமும் ஒரு காலத்தில் முதியவர்களாவோம் என்ற எண்ணத்தை மறந்துவிடுகின்றார்கள்.

உலகளாவிய ரீதியில் ஒப்புநோக்கும்போது கூடிய முதியோர்களைக்கொண்ட நாடு என்ற பெருமை இலங்கைக்கு உள்ளது. 2006 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட ஒரு கணக்கெடுப்பில் இலங்கையில் அண்ணளவாக 22 இலட்சம் மூத்த பிரஜைகள் இருப்பதாகத் தெரியவந்துள்ளது. இதன்படி 2011 ஆம் ஆண்டளவில் 60 வயதுக்கு மேற்பட்டோரின் தொகை 27 இலட்சம் ஆகவும், 2031 ஆம் ஆண்டில் 50 இலட்சம் ஆகவும் இருக்கும் எனவும், தெரிவிக்கப்பட்டுள்ளது. இது அப்போதைய மொத்த சனத்தொகையில் 13 வீதமாகும்.

எமது நாட்டைப் பொறுத்தவரையில் முதியோர் பெரும்பாலும் தமது பிள்ளைகளில் தங்கியிருக்க வேண்டிய நிலைமையே காணப்படுகின்றது. ஒரு சிலர் தமது பிள்ளைகளாலேயே முதியோர் இல்லங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். ஏனையோர் பிள்ளைகளால் கைவிடப்பட்ட நிலையில் உள்ளனர். புள்ளி விபரங்களின்படி இலங்கையில் 48.3 சத வீதமான முதியோர்கள் தமது பிள்ளைகளின் பராமரிப்பில் வாழ்ந்து வருகின்றனர். ஓய்வூதியம் மூலம் 13.5 வீதத்தினரும் விவசாயம் மற்றும் ஏனைய தொழில்கள் மூலம் 10.3 வீதத்தினரும் தமது சொத்துகளின் வருமானம் மூலம் 7.7 வீதத்தினரும் வாழ்க்கையை நடத்துகின்றனர். இலங்கையில் உள்ள முதியோர்களில் 60-70 வயதுக்கிடைப்பட்டோர் 54.4 வீதமாக உள்ளனர். 70-80 வயதுக்கிடைப்பட்டோர் 32.3 வீதமும் 80-90 வயதுக்கிடைப்பட்டோர் 10 வீதமும் 90 வயதுக்கு மேற்பட்டோர் 1.3 வீதமுமாக உள்ளனர். இதே வேளை இலங்கையில் அதிகரித்து வரும் முதியோர்கள் தொடர்பில் அவர்களுக்குரிய பல செயற்றிட்டங்கள் முன்வைக்கப்படல் அவசியம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. காரணம் அதிகரித்து வரும் முதியோர்களை வைத்து பராமரிக்கும் அளவிற்கு இங்கு முதியோர் இல்லங்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதும் அந்த இல்லங்களுக்குரிய போதிய வருமானங்கள் நன்கொடைகள் கிடைப்பதில்லை என்பதுமாகும்.

**சர்வதேச முதியோர் தினம்**

முதியோர்களை ஒவ்வொரு சமூகமும் கண்ணியமாகவும், கௌரவமாகவும் நோக்கி அவர்களை மதிக்க வேண்டியதன் அவசியத்தை உணர்த்தும் முகமாக ஐக்கிய நாடுகள் பொதுச்சபை ஆண்டு தோறும் ஒக்ரோபர் 1 ஆம் திகதியை சர்வதேச முதியோர் தினமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது.

முதன் முதலாக 1991 ஆம் ஆண்டு சர்வதேச முதியோர் தினம் உலகெங்கும் கொண்டாடப்பட்டது. தொடர்ந்து ஒவ்வோர் ஆண்டும் கொண்டாடப்பட்டு வருகின்றது. உலகெங்கும் வாழும் முதியோர்களின் நலன் மற்றும் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதும் அவர்களுக்கென ஒரு சமூக கட்டமைப்பை உருவாக்குவதுமே இந்த நாளின் பிரதான நோக்கமாகும்.

**முதுமை என்றால் என்ன?**

பொதுவாக 60 வயதுக்கு மேற்பட்டோர் முதியோர் என வரையறுக்கப்பட்டாலும்கூட, முதுமை என்பது ஒரு நபரின் பிறப்பிலிருந்து தொடங்குகின்றது என்பர். ஒரு குழந்தையானது வளர்ந்து பெரிதாகும் ஒவ்வொரு காலகட்டத்திலும் முதுமை நிகழ்வு ஏற்பட்டுக்கொண்டே இருக்கின்றது.

முதுமையும் இறப்பும் மனிதன் சந்திக்கும் தவிர்க்க முடியா நிலையாகும்.

மூளை மற்றும் நரம்புமண்டல அமைப்பு முதுமையடையும் போது, மூளையின் நரம்பும்ண்டல அணுக்களின் எண்ணிக்கையானது குறையவடையத் தொடங்குகின்றது. இழையச் சீர்கேடு, தோல் சுருக்கம், தசை எடை குறைவு, புலன் குறைபாடு, உடல் அசைவுத் தன்மைக் குறைவு, இனப்பெருக்கத் தடை, உளவியல் பாதிப்புகள் என பல்வேறு முறைகளில் உடலியல் தொழிற்பாடு பாதிக்கப்படுவதனால் வயதானவர்களின் நடவடிக்கைகளில் வேகம் குறைந்து காணப்படுகின்றது. ஞாபகசக்தி குறைவு, புதிய விஷயங்களை கற்றுக் கொள்வதிலும் குறைவான வேகத்துடனேயே காணப்படுவர்.

60 வயதிற்கு மேல் முதுகுத் தண்டில் உள்ள அணுக்கள் குறைய ஆரம்பிப்பதால் அவர்களின் உணர்வு சக்தி குறையத் தொடங்குகின்றது. முதுமையடையும் பொழுது உடலின் நோய் எதிர்ப்பு சக்தியானது மெதுவாகக் குறைய ஆரம்பிக்கின்றது, இது பல நோய்தொற்றுகளுக்கு, குறிப்பாக இதய நோய், பக்கவாதம், மூட்டுவலி, புற்று நோய், நீரிழிவு நோய் போன்றவை பெரிதும் முதுமைப்படுதலின் காரணமாகவே ஏற்படுகிறது.

வாழ்நாள் எதிர்பார்ப்பு என்பது ஒரு உயிரினத்தின் சராசரி வாழும் காலத்தைக் குறிக்கும். சத்துணவு, நலவாழ்வு, மருத்துவம் ஆகியவற்றிலேயே வாழ்நாள் எதிர்பார்ப்பு பெரும்பாலும் தங்கி இருக்கிறது. சமூக அரசியல் சூழலும் பொருளாதார வளர்ச்சியும் வாழ்நாள் எதிர்பார்ப்பைக் கூட்டும் காரணிகளை ஏதுவாக்கத் தேவை. இத்தகைய சூழலைப் பொறுத்து ஒரு மனிதனுக்கு சராசரி ஆயுட்காலம் 81 வருடங்களாகக் கணிப்பிடப்பட்டுள்ளது. நாட்டுக்கு நாடு இந்தக் கணிப்பீடு வேறுபடலாம். பதியப்பட்ட மனித வரலாற்றில் யாரும் 123 வயதுக்கு மேல் இருந்ததாக ஆதாரம் இல்லை. மிகக் குறைவான எண்ணிக்கையிலான மனிதர்களே 100 வயதுக்கு மேலே வாழக்கூடியதாக இருக்கின்றது. மனிதனின் சராசரி வாழ்நாள் கூடி வந்திருப்பினும், மிக கூடிய வாழ்நாளின் அளவு கூடவில்லை. இதற்கு உயிரியல் அடிப்படையிலான எல்லைகள் இருக்கலாம். இருப்பினும், அண்மையில் மேற்கொளப்பட்ட ஆய்வுகளின் படி இந்த எல்லை நீடிக்கப் படக்கூடியதே.

ஐ.நா.வின் கணிப்பீட்டின்படி தற்போது உலகில் ஒவ்வொரு பத்துப் பேருக்கு ஒருவர் என்றடிப்படையில் அறுபது அதற்கு மேற்பட்ட வயதை உடையவர்கள் காணப்படுகின்றனர். இது 2050ஆம் ஆண்டில் 5க்கு ஒன்று என்றடிப்படையிலும் 2150 இல் 3க்கு ஒன்று என்றடிப்படையிலும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. உலக அளவில் பிறப்பு மற்றும் இறப்பு விகிதம் குறைந்து வருவது இதற்கு காரணமாகக் கூறப்படுகின்றது. குழந்தை பிறப்பு வீதம் அதிகம் அதே போல் இறப்பு வீதம் அதிகம் என்ற நிலை மாறி தற்போது பிறப்பு-இறப்பு எண்ணிக்கை குறைந்திருப்பதால் வயதானவர்களின எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவுக்கு உயர்ந்துளளது.

பெரியோர்களை மதி, கவனி என்று அறிவுரை வழங்கும் போது நம் பிற்காலத்தைக் கவனத்தில் கொண்டுதான் இப்படிக் கூறுகின்றோமோ என்று எண்ணத்தோன்றுகின்றது. ஆங்கில மகாகவி வில்லியம் ஷேக்ஸ்பியர் முதுமை எவ்வாறு உருவாகின்றது? அதனை வரவேற்பது எப்படி? என்பதை இவ்வாறு கூறினார். 'ஒருமனிதன் தன் வாழ் நாளில் பல பாத்திரங்களை ஏற்கிறான். முதலில் குழந்தை. பிறகு மாணவன் பின்னர் விடலைப்பருவம், தொழில் வாய்ப்பை பெற்றபின் குடும்பஸ்தன் ஆகின்றான். காலச்சக்கரத்தின் அபரிமித சுழற்சியின் விளைவாக இறுதியில் மூக்குக் கண்ணாடி அணிந்து முகம் சுருங்கி, உடல் மெலிந்து பல், கண்பார்வை எல்லாம் அற்ற நிலையில் கூன் விழுந்து முதுமையாகி மறைவது தான் சரித்திரம்' என்றார்.

இன்றைய சமூக அமைப்பு பெரும்பாலும் கூட்டுக் குடும்ப அமைப்பிலிருந்து விலகி தன்னிச்சையாக இயங்கும் குடும்பங்களையே பெரிதும் சார்ந்துள்ளது. புலம் பெயர்தலால் அடையும் நன்மைகள் பலற்பல, அதே நேரத்தில் நாம் நமது பெற்றோர்களுக்கு கொடுக்கும் மன உளைச்சலுக்கும் நிம்மதியின்மைக்கும் அளவில்லை என்பதையும் கருத்திற் கொள்ள வேண்டியுள்ளது. உலகமயமாக்கலுடன் இணைந்த எமக்கு இது சற்று சிரமத்தைத் தந்தாலும் கூட, இவற்றை நடுநிலைமைப்படுத்திக் கொள்ளக் கூடிய அளவில் எம்மை நாம் பக்குவப்படுத்திக் கொள்ளாதவிடத்து முதியோராகப்போகும் எ நிலையைப் பற்றி நாம் ஓரளவுக்கேனும் சிந்திக்க வேண்டிய கட்டாயப்பாட்டில் உள்ளோம்

> **"காவோலை விழக் குருத்தோலை சிரிக்கின்றது" என்பது பழமொழி. இன்றைய குருத்தோலையே நாளைய காவோலை என்பதைச் சிந்திக்க வேண்டும். "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்றார் தமிழ் மூதாட்டி. ஆனால் எமது இளைஞர்களும் சரி, யுவதிகளும் சரி "அன்னையும், பிதாவும் பின்னடிக்கு இடைஞ்சலாகக்" கருதுவதனாலேயே முதியோர் இல்லங்கள் நிரம்பி வழிகின்றன.**

ஜெயந்தி - சிகரம்

# தீவகத்திற்கு இரு பேருந்துகள்; வேலணைக் கூட்டத்தில் இணக்கம்

(வேலணை)

வேலணை பிரதேச செயலகத்தில் நல்லிணக்கக் குழுக் கூட்டம் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜீவ விஜேசிங்கவின் தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்திற்கு வேலணை பிரதேச சபை தவிசாளரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வேலணை பிரதேச அமைப்பாளருமாகிய சி.சிவராசா (போல்), வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளா சதீஸன், கிராம சேவையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பிரதேசப் பாடசாலைகளின் அதிபர்கள், வேலணை பிரதேச பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் நாடாளுமன்ற உறுப்பினரிடம் தீவகத்தில் அபிவிருத்தி வேலைகள் செய்யப்படவில்லை எனக் கருத்துக்களைத் தெரிவித்தார்கள். இவ்விடயமாக வேலணை பிரதேசசபை தவிசாளரிடம் நாடாளுமன்ற உறுப்பினர் கேள்வி கேட்கும் போது, அவர் கடந்த சில நாட்களுக்குமுன் ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான முருகேசு சந்திரகுமார், சில்வேஸ்திரி அலென்ரின் மற்றும் ஊர்காவற்றுறை பிரதேச சபை தவிசாளர், நெடுந்தீவுப் பிரதேச சபை தவிசாளர் மற்றும் யாழ் மாநகரசபை முதல்வர் ஆகியோரும் கொழும்பு சென்று வேலணை தீவக அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான கோவைகளினை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கையளித்துள்ளோம். விரைவில் தீவக அபிவிருத்தி முன்னெடுக்கப்படும் எனத்தெரிவித்தார்.



தொடர்ந்து பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்தினை சீர்செய்யுமாறு மக்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க இரு பஸ்களைப் பெற்றுத்தருவதாக நாடாளுமன்ற உறுப்பினர தெரிவித்தார்.

குற்றச் செயல்கள் தொடர்பில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மிகவும் பொறுப்புடன் செயற்படவேண்டுமெனவும், குற்றச் செயல்கள் இடம் பெற்ற பின்னர் நாம் பாதுகாப்பைத் தேடுவதைவிட குற்றச் செயல்கள் இடம்பெறுவதற்கு முன் அவை இடம்பெறாத வண்ணம் கவனமாக இருந்து அவைகளைத்தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் தெரிவித்தார்.

# மகோற்சவ பெருவிழாவும் கேதார கௌரி விரதமும்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர் புராதன தான்தோன்றீஸ்வரர் வாரிவனம் தேவஸ்தானம் வரலாற்றுப் புகழ் மருவும் வாரியப்பர் திருக்கோயில் மகோற்சவ பெருவிழா எதிர்வரும் புதன் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

கலாநிதி து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறும் இம்மகோற்சவ பெருவிழாவில் இரதோற்சவம் நவம்பர் முதலாம் திகதியும், 2 ஆம் திகதி தீர்த்தோற்சவவும் நடைபெறவுள்ளது. இவ்விழாவுக்கு ஆசியுரையை நல்லை ஆதீன குரு மகாசந்தி தானம் சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் நிகழ்த்தவுள்ளார்.

மகோற்சவக்காலத்தில் கேதாரகௌரி விரதபூசைகளும் நடைபெற்று தீபாவளி தினத்தன்று இதன் பூர்த்தி விழாவும் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# ஆலய புனர்நிர்மாணம் துரித கதியில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை வளாகத்தில் அமைந்துள்ள ஆலயம் துரிதகதியில் புனர்நிர்மானம் செய்யப்பட்டு வருகிறது.

வளாகத்தில் அமைந்துள்ள ஜப்பானிய அரசின் உதவியுடன் கட்டடத்தொகுதிகளின் பணிகள் பூர்த்தியடைந்து இம்மாதம் திறப்பு விழா நடைபெறவிருந்த நிலையில் இவ்வாலயத்தின் கட்டடங்கள் உடைக்கப்பட்டு மீண்டும் மிக அழகான முறையில் கட்டட வேலைகள் நடைபெறுகின்றன.

முற்றிலும் கொங்கிறீற்றிலான உள்வீதி அமைப்பு தற்போது அமைக்கப்பட்டு வருவதோடு இதன் பணிகள் மிக விரைவில் நிறைவு செய்யப்படும் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. இதேவேளை ஜப்பான் அரசினால் அமைக்கப்பட்ட கட்டடத் தொகுதி இம்மாதம் திறக்கப்பட இருந்த போதிலும் சிறிய வேலைகள் இன்னும் நிறைவு செய்யப்படாமையால் இக்கட்டடத்திறப்பு விழா காலதாமதமாகலாம் என்றும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (இ)

# மாதாந்த சொற்பொழிவு

யாழ்.பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையங்களின் ஏற்பாட்டில் மாதாந்த சொற்பொழிவு நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்பட்டுள்ளது. "சுக வாழ்வும் மன ஆரோக்கியமும்" எனும் தலைப்பில் கடந்த மாத சொற்பொழிவுகள் நடைபெற்றன.

கடந்த 15 ஆம் திகதி சனிக்கிழமை மாலை வல்வெட்டித்துறையில் வைத்தியர் சிவசுப்பிரமணியம் (மாவட்ட சித்த ஆயுர்வேத இணைப்பு உத்தியோகத்தர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, மன்னார்)



26-09-2012 புதன் மாலை சாவகச்சேரியில் டாக்டர் க.சிவராஜா (விரிவுரையாளர், சமுதாய மருத்துவத்துறை, யாழ் பல்கலைக்கழகம். இணைப்பாளர், உலக சுகாதார நிறுவனம்)

29-09-2012 சனி மாலை யாழ்.பிறவுண் வீதியில் விஜயஸ்ரீ சந்திரமோகன் (வைத்திய கலாநிதி, வெலிசறை மார்பு வைத்தியசாலை) என்போர் மேற்படி சொற்பொழிவினை நிகழ்த்தியிருந்தனர்.



# வேலை வாய்ப்புச் செய்திகள்

பிரபல தொலைத்தொடர்பாடல் நிறுவனமொன்றுக்கு விற்பனை மேம்பாட்டு அதிகாரி (Team Leader) விற்பனைப்பிரதிநிதிகள் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மேற்படி விண்ணப்பதாரிகள் வார நாட்களில் நேர்முகத்தேர்வுக்கு சுயவிபரக்கோவையுடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: 127,Mpcs Building, K.K.S Road, Jaffna. அல்லது 072 232 1038.

---

நலிவுற்ற சமூக அபிவிருத்திக்கான தன்னார்வ அமைப்புக்கு (Vovcod) திட்ட இணைப்பாளர்கள் - 02, களஇணைப்பாளர்கள் - 04, நோயாளர் பராமரிப்பாளர்கள் - 02, காவலர்கள் - 02 தேவைப்படுகின்றனர். இவர்களுக்கான தகைமைகளாகக் கருதப்படுபவை:

■ மிகவும் நலிந்த மக்கள், சமூகங்கள், கிராமங்களில் பணியாற்ற ஆர்வமும் அவர்களின் அபிவிருத்தியில் அனுபவமும் கொண்டிருத்தல் வேண்டும்.

■ ஏற்கனவே சமூக குழுக்களில் அங்கம் கொண்டிருத்தல்.

■ கள இணைப்பாளர்கள் க.பொ.த (சா/த) தரமும், திட்ட இணைப்பாளர்கள் க.பொ.த (உ/த) தரமும் குறைந்தளவு கல்வித்தகைமைகளாக எதிர்பார்க்கப்படுகிறது.

■ அமைப்பினது நலிந்தோர் அபிவிருத்தியில் தொலைநோக்காகக் கொண்டு செயற்படல்.

■ திட்ட இணைப்பாளர்கள் அறிக்கையிடல், ஆங்கிலப்புலமை முக்கியமாக எதிர்பார்க்கப்படுகிறது.

விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பப்படிவங்களை சுய விபரக்கோவையுடன் தபாலிலோ அல்லது நேரிலோ சமர்ப்பிக்க வேண்டும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: திட்டமுகாமையாளர், Vovcod, 154, மன்னார் வீதி, வேப்பங்குளம், வவுனியா. தொ.பே.இல: 024 222 6059 அல்லது vovcod vavuniya@gmail.com

---

கொழும்பைத்தளமாகக் கொண்டியங்கும் குளிரூட்டிகள் (Air Conditioners) விற்பனையில் முன்னணியாகத் திகழும் கம்பனியொன்று யாழ்ப்பாணத்தில் தனது வியாபரத்தை விஸ்தரிக்க உள்ள நிலையில் சுறுசுறுப்பான இளமைத்துடிப்புள்ள, சந்தைப்படுத்தல் துறையில் அனுபவமுள்ள ஒருவர் யாழ்ப்பாணக்கிளைக்கு உதவி முகாமையாளராகப் பணியாற்றத் தேவைப்படுகின்றார். குறைந்த வழிகாட்டலுடன் சுயமாக இயங்கக்கூடியவராக இருப்பதோடு தெரிவு செய்யப்படுபவருக்கு உற்பத்தி பற்றிய அறிவும், பயிற்சியும் கொழும்பில் வழங்கப்படும். தெரிவாகும் விண்ணப்பதாரிக்கு கவர்ச்சிகரமான சம்பளம், தரகுப்பணம் மற்றும் ஏனைய நன்மைகளும் வழங்கப்படும். உங்களது விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமைக்குள் E-mail: anilanjee@yahoo.com, hrgtss@ gmail.com என்னும் மின்னஞ்சல் முகவரியூடாக அனுப்பி வைக்கவும்.

---

IT,Beautican, Diesel Machanic, Marketing, Tailoring, English Language, Singala language ஆகிய துறைகளில் அனுபவம் மிக்க போதனாசிரியார்கள் முல்லலைத்தீவு, ஒட்டுசுட்டான் ஆகிய இடங்களில் அமைந்துள்ள தொழிற்கல்வி நிலையத்தில் கற்பிப்பதற்கு தேவைப்படுகின்றார்கள். ஆர்வமுள்ளவர்கள் தங்களது சுயவிபரக்கோவையை தொடர்பு இலக்கத்துடன் The Administrative Officer, 23 - 1/1,Gregory's Road, Dehiwala என்னும் முகவரிக்கு எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பி வைக்கவும். உங்களது சுயவிபரக்கோவையை ilead. colombo@gmail.com என்னும் முகவரிக்கு மின்னஞ்சல் செய்யலாம்.

---

விலங்குகளுக்கான தீன் விற்பனை நிலையத்துக்கு க.பொ.த. சாதாரணதர கல்வி அறிவுடைய பில்கிளார்க் மற்றும் கடை உதவியாளர்கள் தேவை. நேரில் வரவும். S.K.ஏஜன்சிஸ், இல.128/D, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

---

யாழ்ப்பாணத்தில் உள்ள வீடொன்றில் தங்கி நின்று வீட்டு வேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை. தொடர்புகளுக்கு: 077 699 5626, 075 640 3632.

---

யாழ்ப்பணத்தில் இயங்கி வரும் பிரபல போன்சொப் கடைக்கு வேலையாட்கள் தேவை. ஆண்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும். தொடர்புகளுக்கு: 021 222 3817.

# புனர்வாழ்வு பெற்ற 27 பேர் பெற்றோரிடம் ஒப்படைப்பு

## தீபாவளிக்காக 33பேர் விடுதலையாவர்



(கொழும்பு)

இறுதி யுத்தத்தின் போது இராணுவத்தினரிடம் சரணடைந்த புலிகளில் புனர்வாழ்வு பயிற்சிக் காலத்தை முடித்துக் கொண்ட ஒரு தொகுதியினர் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீரவினால் சமூகத்தில் இணைக்கப்பட்டுள்ளனர்.

புனர்வாழ்வுப் பயிற்சி பெற்றவர்களில் 33 பேரில் 27 பேர் இவ்வாறு நேற்றுமுன்தினம் விடுதலை செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

மிகுதி 6 பேர் இம்மாதம் 30 ஆம் திகதி அவர்களின் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்படுவார்கள் அவர்கள் விடுதலை செய்யப்படுவதற்கான ஆவணங்கள் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரினால் கையளிக்கப்பட்டுள்ளன.

இந்த வைபவம் வவுனியா மருதமடு புனர்வாழ்வு பயிற்சி நிலையத்தில் நடைபெற்றிருக்கின்றது.

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு மேலும் 33 பேர் அடுத்த மாதம் 8ஆம் திகதி விடுதலை செய்யப்படவுள்ளதாக அமைச்சின் மூத்த ஆலோசகர் சிவலிங்கம் சதீஸ்குமார் தெரிவித்துள்ளார்.

இதுவரையில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட புலி உறுப்பினர்கள் புனர்வாழ்வுப் பயிற்சியின் பின்னர் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை வழக்குத் தாக்கல் செய்யப்படுவதற்காக 500க்கும் மேற்பட்டவர்கள் இன்னும் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

புனர்வாழ்வுப் பயிற்சியை முடித்துக் கொண்டதன் பின்னர் சமூகத்தில் இணைக்கப்பட்டுள்ளவர்களுக்கு சுயதொழில் முயற்சிகளை மேற்கொள்வதற்கான திட்டத்தின் கீழ் இதுவரையில் 1008 பேருக்கு கடன் வசதிகள் செய்யப்பட்டுள்ளதாகவும் சதீஸ் குமார் தெரிவித்துள்ளார்.

# துரிதகதியில் அகலிப்பு வீதியால் சென்றவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ் கே.கே.எஸ். வீதி வழியாக நேற்றுப்பிற்பகல் மோட்டார்ச் சைக்கிளில் பயணித்த இளைஞர் ஒருவர் மீது கட்டடமொன்று இடிக்கப்பட்ட போது கற்கள் வீழ்ந்ததில் அவர் காயமடைந்ததுடன் அவர் பயணம் செய்த மோட்டார்ச் சைக்கிள் முழுமையாகச் சேதமடைந்துள்ளது.

யாழ்.கே.கே.எஸ்.வீதியின் அகலிப்பு வேலைகள் தற்சமயம் நடைபெற்று வருகின்றன. இதன் போது அகலிப்பு வேலைகளுக்காக அருகில் இருந்த கட்டடங்கள் இடிக்கப்பட்டு பின்னே நகர்த்தப்பட்டு வருகின்றன. இதன் போது நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் அந்த வீதி வழியாக மோட்டார்ச்சைக்கிளில் வந்து கொணடிருந்த தவராசா துவராகன் (வயது 20) என்பவர் மீது கட்டடமொன்றின் மேல்தளத்தில் இருந்து உடைக்கப்பட்ட கற்கள் அவர் மீது விழ்ந்திருக்கின்றது. கற்கள் மூடிய நிலையில் அவர் 10 நிமிடங்கள் வரை அதனுள் இருந்திருக்கின்றார். அதன் பின்னர் அயலில் நின்றவர்கள் கற்களை அகற்றி அவரை யாழ் போதனாவைத்தியசாலையில் சேர்த்திருந்தனர்.

தெய்வாதீனமாக உயிர் தப்பிய இவருக்கு சிறிய வெளிக் காயமும் உடல் உபாதையும் ஏற்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்தின் போது கட்டடத்தை உடைத்தவர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர். சம்பவம் குறித்து யாழ் பொலிஸ் விசாரணைகளை மேற்கொண்டனர். இந்தக் கட்டடம் உடைப்பின் போது தடையோ அறிவிப்போ எதுவுமே மேற்கொள்ளப்படவில்லை என்றும் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர் தெரிவித்துள்ளார். (பா)

# தாளையடி வீதிக்கு விமோசனம் எப்போது?

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தை ஏ-9 வீதியுடன் இணைக்கும் சோறன்பற்று - தாளையடி வரையான 7.5 கிலோ மீற்றர் நீளமான வீதி தற்போது தற்காலிகமாகத் திருத்தம் செய்யும் வேலைகள் நடைபெற்று வருகின்றன. இவ்வீதியில் கூடுதலான பகுதிகளில் மேடு, பள்ளங்கள் காணப்படுவதால் வாகனங்கள் சிரமத்தின் மத்தியில். செல்கின்றன. இதனால் விபத்துக்கள் ஏற்படக் கூடிய நிலையுள்ளது. இதனை விட இவ்வீதியில் அமைந்துள்ள 3 பாலங்கள் மிகவும் பழமையானவை. பாலங்கள் திருத்துவதற்கு வீதியின் இருமருங்கிலும் குழிகள் வெட்டப்பட்டுள்ளதுடன் கல்லு மண் என்பன பறிக்கப்பட்டுள்ளன. மழை நேரத்தில் குழிகளில் நீர் தேங்கி நிற்கிறது அபாயம் என்தற்கு அறிகுறியாக பாதையில் இரு மருங்கிலும் சிவப்புக் கொடிகள் கட்டப்பட்டுள்ளன. இரவு நேரத்தில் அபாயம் என்பதற்கான அடையாளம் எதுவும் காணப்படுவத்திலை. இதனால் மழை நேரத்தில் விபத்துக்கள் ஏற்படும் அபாயம் உண்டு.

ஒரு வருடத்திற்கு முன் புனரமைக்கப்பட்டு திறந்து விடப்பட்ட மருதங்கேணி பாலத்தில் வடக்கு தெற்குப்பக்கமாக வீதிகளில் வெடிப்புக் காணப்படுகிறது. கவனம் மெதுவாக செல்லவும் என்ற அறிவிப்புப் பலகை நீண்ட நாட்களாக நாட்டப்பட்டுள்ளது. திருத்துவதற்குரிய நடவடிக்கைகள் எதுவும் இடம் பெறவில்லை.

இப்பிரதேசத்தில் நிரந்தர வீடுகள் அமைப்பதற்குரிய கல், மண், சீமேந்து ஏற்றும் டிப்பர் வாகனங்கள், கடலுணவு வகைகளை ஏற்றிச் செல்லும் கூலர் வாகனங்கள், லொறிகள், பஸ் வண்டிகள் என்பன இவ்வீதியுடாகவே செல்கின்றன.

மழை காலம் ஆரம்பித்துள்ள இவ்வேலையில் சில இடங்களில் வெள்ளம் பாயும் இடங்களுமுண்டு இவ்வேளை வீதி எது நிலம் எது எனத் தெரியாத நிலையில் வாகனங்கள் பாதையை விட்டு கீழே இறக்கக் கூடிய சாத்தியமுண்டு இதனால் வாகனங்களில் செல்வோர் பாதிப்படையும் நிலையும் ஏற்படலாம்.

எனவே இவ்வீதி முழுவதும் முற்றாகத் திருத்தி அமைப்பதுடன் இவ்வீதியிலுள்ள நான்கு பாலங்களையும் திருத்தி அமைப்பதற்குரிய நடவடிக்கைகளையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டுமென இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (70)

# உள்ளூராட்சி செயலாளர்களுக்கு "நெல்சிப்" திட்டக்கலந்துரையாடல்

(வேலணை)

வடமாகாண உள்ளூராட்சி சபைகளில் செயலாளர்களாகக் கடமையாற்றி வருகின்ற செயலாளர்களுக்கு நெல்சிப் திட்ட வேலைகள் தொடர்பாக விளக்கமளிக்கும் கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை கைதடியில் உள்ள வடமாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தின் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி கருத்தரங்கில் வடமாகாணத்தில் இயங்கிவருகின்ற உள்ளூராட்சி சபைகளில் இருந்து 34 செயலாளர்கள் கலந்து கொள்ள இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (05)

# பன்றிக் காய்ச்சல் நோயிலிருந்து பாதுகாப்பது எப்படி?



இன்புளுவென்டசா HINI என்பது புளு (Flu) காய்ச்சல் போன்ற நோயாகும். இந்நோய் ஒருவரிலிருந்து இன்னொருவருக்கு மூக்கிலிருந்து வெளியேறும் சளி மற்றும் இருமும்போதும் வெளியேறும் கிருமிகள் மூலம் தொற்றுகிறது. இந்நோய் முன்னர் பன்றிக் காய்ச்சல் என்றழைக்கப்பட்டது. ஆயினும் இந்நோய் பன்றிகளிலிருந்து தொற்றுவதில்லை என்ற காரணத்தில் இப்பொழுது 'பன்றிக்காய்ச்சல்' என்றழைக்கப்படுவதில்லை. இது ஒரு புதிய வகை வைரஸ் கிருமியினால் ஏற்படும் நோய் ஆகையால் பெரும்பாலான மக்கள் இந்நோய்க்கான எதிர்ப்பு சக்தியை கொண்டிருப்பதில்லை ஆகவே இந்நோய் மிகவும் வேகமாகப் பரவி வருகின்றது. இது சிறு பிள்ளைகள் மற்றும் இளம் வயதினர் மத்தியில் அதிகமாகப் பரவுகின்றது.

**குணங்குறிகள்**

பொதுவாக இது ஒரு சாதாரண நோயாகும். ஆகவே தேவையற்ற பதற்றம் அடையத் தேவையில்லை. பொதுவான குணங்குறிகளாவன,

01) காய்ச்சல்
02) தலையிடி
03) உடல் வலி
04) தொண்டை வலி
05) இருமல்
06) மூக்கிலிருந்து சளி வடிதல்
07) சில வேளைகளில் வாந்தி மற்றும் வயிற்றுப் போக்கு ஏற்படும்.

இது சாதாரண தடிமன் போன்றது ஆகவே மற்றைய இன்புளுவென்சா காய்ச்சல் வகைகளிலிருந்து வேறுபடுத்தி இனங்காண்பது கடினமானது. இந்நோய் சில நோயாகளிலிருந்து நியூமோனியா காய்ச்சலாக மாறக்கூடிய வாய்ப்புண்டு. இவ்வாறு நியூமோனியா காய்ச்சலாக மாறுமிடத்து மூச்சு விடுதல் கடினமாக இருக்கும் மேலும கடுங்காய்ச்சலாகக் காணப்படக் கூடும் அல்லது காய்ச்சல் காணப்படாமலும் நோய் கடுமையாகும்.

மேற்கூறிய குணங்குறிகள் காணப்படின் செய்யப்படவேண்டியவை

01) குணங்குறிகள் அகலும் வரை நோயாளி படுக்கையில் ஓய்வெடுத்தல்

02) சன நெருக்கடி மிகுந்த இடங்களைத் தவிர்த்தல். இது நோய் பரவுதலைத் தடுக்கும்.

03) போசாக்கு மிகுந்த உணவு வகைகளையும் அதிகளவு நீராகாரங்களையும் உட்கொள்ளுதல்.

04) குடும்ப வைத்தியரிடம் குணங்குறிகளுக்கான வைத்திய ஆலோசனை பெறுதல். சாதாரண நோய்க்கு விசேட வைத்திய சோதனைகள் மற்றும் வைத்தியசாலையில் தங்கிருந்து சிகிச்சை பெறுதல் முதலியன தேவைய்யில்லை.

05) சவர்க்காரம் கொண்டு கைகளை அடிக்கடி கழுவுதல்.

06) தும்மும்போதும் இருமும் போதும் கைக்குட்டையை உபயோகித்தல், பேப்பர் டிசு (Tissue) உபயோகிப்பின் அதை உரிய முறையில் அகற்ற வேண்டும். எக்காரணம் கொண்டும் கைகளை உபயோகிக்க கூடாது. கைகளில் மூலம் மற்றைய இடங்களைத் தொடும்போது இவ்வைரஸ் மற்றைய இடங்களுக்கும் பரவக்கூடும்.

07) அரிதாக சிலரில் இந்நோய் முற்றி நியூமோனியாவாக மாறக்கூடும் அல்லது வலிப்பு ஏற்படக்கூடும். மேலும் தடுமாற்றம் மாறுபட்ட விழிப்புணர்வு ஏற்படக்கூடும்.

கீழ்க் காணப்படும் குணங்குறிகள் காணப்படின் வைத்திய ஆலோசனை பெற வேண்டும்.

a) கடுங்காய்ச்சல்
b) மூச்சு விடுதல் கடினமாதல்
c) மாறுபட்ட விழிப்புணர்வு
d) குணங்குறிகளின் கடுமை அதிகரித்தல்
e) உடல் சோர்வு

**இந்நோய்க்கு சிகிச்சை உண்டா?**

இந்த நோய் பற்றிய ஆய்வுகள் நோய் முற்றிய நோயாளிகளுக்கும் நோய் ஆபத்து சாத்தியக்கூறுகள் அதிகமானவர்களுக்கும் மட்டுமே அவசியமாகும். ஆகவே எல்லோரும் பதற்றப்படவோ வைத்திய சோதனைகளோ செய்ய வேண்டிய அவசியமில்லை. இந்நோய் கடுமையாகுமிடத்து அதை எதிர்கொள்ளத் தேவையான வளங்களும் மருந்துகளும் நம் நாட்டில் உண்டு. ஆகவே இதைக் குறித்து கவலையடையத் தேவையில்லை.

**அதிக கவனம் எடுக்க வேண்டியவர்கள் யார்?**

கடுமையாக நோய் வாய்ப்படக்கூடிய சாத்தியக்கூறுகள் அதிகம் உள்ளவர்கள்.

*2 வயதிற்கு உட்பட்டவர்கள்
*65 வயதிற்கு மேற்பட்டவர்கள்
*கர்பிணிகள்
*நீரிழிவு, ஆஸ்மா, சிறுநீர் நோய், புற்றுநோய், உள்ளவர்கள் பிரட்னிசலோன் (Prednisolone) மருந்து நீண்ட காலமாக பாவிப்பவர்கள்.

ஆகவே நீங்கள் மேற்குறிப்பிட்ட குழுவைச் சேர்ந்தவராயின் அதிக கவனம் எடுக்க வேண்டும்.

**இந்நோயிலிருந்து பாதுகாப்பது எப்படி?**

01) சன நெருக்கடி மிகுந்த இடங்களை தவிர்த்தல்

02) சவர்க்காரம் கொண்டு அடிக்கடி கை கழுவுதல்

03) வாய் மற்றும் மூக்கு பகுதிகளை தேவையின்றித் தொடுவதை தவிர்த்தல்

04) மூக்கால் நீர் / சளி வடியும் நோயாளிகளிடம் குறைந்தது 1 மீற்றர் தூரம் தள்ளி நிற்றல்.

05) வீடுகளிலும் அலுவலகங்களிலும் ஜன்னல்களை திறப்பதன் மூலம் காற்றோட்டத்தை அதிகரிக்கச்செய்தல்.

06) Mask உபயோகிப்பின் முக்கையும் வாயையும் மூடக் கூடியதாக சரியான முறையில் அணியப்பட வேண்டும். தவறான உபயோகம் நோய் தொற்றும் சாத்தியக்கூறுகளை அதிகரிக்கும். நோய் தொற்றுதலை தவிர்க்க ஒரு சுகதேகி Mask அணிவதை பார்க்கிலும் நோயாளர் நோய் பரவுதலைத் தடுக்க Mask அணிவது சிறந்தது.

## வெளியீடு 05

### வினாக்களுக்குரிய விடைகள்

01. மொத்தத்தூரம் - மொத்தத் தொகை - 1/2
= 21 - 1 = 20
= 20 x 15 m = 300 m

2) நிழற்றப்படாத பகுதி
= மொத்தக் கட்டம் - நிழற்றப்பட்ட கட்டம்
= 10 - 3 = $\frac{7}{10}$ = 0.7　　ஆகவே 2

3) நீரின் மொத்தக் கனவளவு = 1/250ml
x 6
ஆகவே 2　　7/500ml

4) பகுதியின் அளவு = 5 cm ஆகவே 3
5 x 5 cm = 4x 4 = 16 cm

5) ஒரு செங்கலின் உயரம் = 4 cm ∴ 3
ஆகவே 4 ஒரு செங்கலின் உயரம் = 4x4 =1

6) முன்னால் ⟵ 10 11 12

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | ரவி | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | 3 | 2 | 1 |

∴ 12 பேர்　　∴ 2

7) 1 kg வாழைப்பழத்தின் விலை = ரூ.80.00
ஆகவே 100g வாழைப்பழத்தின் விலை = ரூ. 8.00
எனவே 2 kg 350g வாழைப்பழத்தின் விலை
ஆகவே 2kg 350g வாழைப்பழத்தின் விலை
= 2kg ⟶ 80 x 2 =160/-
= 300 g ⟶ 8 x 3 = 24/
= 50 g ⟶ 4　　4/-
188　　ஆகவே 2

8) முதலில் உருக்களுக்கு இடையிலான தொடர்பை கண்டு பிடிக்க வேண்டும்.
□ + ⊘ = 800g
+ □ - ⊘ = 200g
2□ = 1000g
□ = 500g ○ 300g
□ - □ + □ + ○ = ○ + ○
500 - 500 + 500 + 300 = 300 + 300 + 300
1500g = 1200g (பிழை)
- □ + □ = ○ + ○ + ○
500 500 300 300 300
1000g = 900g (பிழை)
- □ + □ + □ = ○ + ○ + ○ + ○ + ○
500 500 500 = 300 + 300 + 300 + 300 + 300
∴ 3　　1500g = 1500g (சரி)

9) □ + □ + ○　　∴ 1
= 500 500 300 = 1300 g

10) ஒரு டொலரின் இலகைப் பெறுமதி = ரூ. 120
∴ 800 டொலரின் இலகைப் பெறுமதி = 800 x 120
= 96,000

11) 1 kg தேயிலையிலிருந்து தயாரிப்பவை = 10 பைக்கற்
∴ 4 kg 500g தேயிலையிலிருந்து தயாரிப்பவை
∴ 2　　= 45 பைக்கற்

12) வெப்பநிலை வேறுபாடு
= உயர் வெப்பநிலை - தாழ்வெப்பநிலை
= 34⁰ C - 20⁰C = 5⁰C

13) தோட்டத்திலுள்ள மொத்த மரங்கள்
= 10 + 9 +8 + 3 =30
1 மரத்திற்குத் தேவைப்படும் பசளை 500g
∴ 500 மரத்திற்கு தேவைப்படும் பசளை
$\frac{30 \times 500g}{1000}$ = 15000g
∴ 3　　= 15 kg


14) 1 kg வளமாக்கியின் விலை = ரூ. 40 ∴ 1
15 kg வளமாக்கியின் விலை = 15 x 40 = 600/=

15) 20 மாணவருக்குத் தேவையான வகுப்பறை
-1
∴ 163 மாணவருக்கு தேவையான வகுப்பறை
= $\frac{163}{20}$ = 8, மீதி 3
∴ இங்கு 3 மாணவருக்கு இன்னொரு வகுப்பறை
தேவை = 8 +1 = 9 வகுப்பறை ∴ 2

16) சதுரமுகியின் பக்கங்கள் சமமானவை, அத்தோடு 6 பக்கம் முகங்கள் காணப்படும்.
ஒரு முகத்தின் பரப்பளவு = நீளம் x அகலம்
= 100 x 100 = 1000cm² ∴ 2

17) 1m கம்பிக்கான விலை = ரூ. 40
4m 25 cm கம்பிக்கான விலை = 160 x 10 = 170/-

18) வடக்கு வலது கைப்பக்கம் திரும்புதல்




19) தற்போது எனது வயது 11: தம்பியின் வயது 4
1 வருடம் 12 வயது : 5 வயது
2 வருடம் 13 வயது : 6 வயது　　∴ 1
3 வருடம் 14 வயது : 7 வயது
∴ 3 வருடத்தில் 2 மடங்கு : ஒரு மடங்கு

20) மொத்த நீளம் - வெட்டப்பட்டது
5 m 00 cm - 2m 85 cm
= 2 m 15 cm
- m cm
5 00
2 85
∴ 1　　2m 15 cm

**எதிர்வரும் வெள்ளிக்கிழமை வெளியீடு 5- 6 இற்கான விடைகள் வெளிவரும்.**

(தொடரும்...)



## தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013

1.30 மணி


# கல்வி முரசு

வெளியீடு 06




**மிகவும் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

1) ஒருவர் காலை வேளையில் தெற்கு நோக்கி நடந்த செல்கின்றார். இவரது நிழல் எந்தத் திசையில் காணப்படும்?


2)  உருவில் காணப்படும் வட்டத்துக்கு 4 சமச்சீர் கோடுகளை வரைக.

3) தரப்பட்டுள்ள அளவீடுகளுக்கு ஏற்ப, இவ்வுருவின் சுற்றளவைக் காண்க.





4) ஒவ்வொன்றுக்கும் 850 மில்லிலீற்றர் கொள்ளளவு கொண்ட 7 சோடாப்பானப் போத்தல்களில் உள்ள சோடா, ஒரு பாத்திரத்தினுள் ஊற்றப்பட்டது. பாத்திரத்திலுள்ள பானத்தின் மொத்தக் கனவளவு எவ்வளவு?

5) ஒரு ஆற்றில் நீர் மணிக்கு 10 கிலோ மீற்றர் வேகத்தில் பாய்கின்றது. மனிதன் ஒருவன் மணிக்கு 12 கிலோமீற்றர் வேகத்தில் ஆற்றுநீர் ஓட்டத்திற்கு எதிராக நீந்துகின்றான். இம்மனிதன் நீந்திச் செல்லும் உண்மையான வேகம் எவ்வளவு?

6)  கேத்திரகணிதப் பலகையொன்றில் ஆணிகள் அறையப்பட்டுள்ளன. இரு ஆணிக்கு இடைப்பட்ட தூரம் 2 cm எனில், இறப்பர் பட்டியினால் சுற்றப்பட்ட பகுதியின் பரப்பளவு யாது?


7) 4 மீற்றர் நீளமும், 3 மீற்றர் அகலமும் கொண்ட சுவருக்கு 2 லீற்றர் தீந்தை தேவை. 6 லீற்றர் நீளமும், 6 மீற்றர் அகலமும் கொண்ட சுவருக்கு பூசுவதற்கு எவ்வளவு தீந்தை தேவை?

8) 1 ஆம் 2 ஆம் உருவிலுள்ள பொருட்களின் மொத்த நிறையை அவதானித்து 3 ஆம் தராசில் உள்ள நிறையைக் காண்க.




9) பி.ப 12.50 இற்கு வந்தடைய வேண்டிய விமானம் 15 நிமிட தாமதத்தின் பின்னரே விமான நிலையத்தை வந்திறங்கியது. அவ்வாறெனில் விமானம் வந்தடைந்த நேரம் எவ்வளவு?


10) டென்ஸ் உபகரணத் தொகுதியிலுள்ள கோல்களை அருகில் உள்ளவாறு அடுக்கி வைத்து, A என்ற பக்கத்திலிருந்து பார்க்கும்போது தோன்றும் விதத்தை வரைக.





......................................................................

11) சுகந்தன் தன்னிடமிருந்து பணத்தில் 2/6 பங்கை தம்பிக்குக் கொடுத்தான். அவனிடம் மீதமிருந்த பணம் ரூபா 90.00 எனில், அவனிடமிருந்த மொத்தப்பணம் எவ்வளவு?


......................................................................

12) 

கம்பி வலையில் ஒரு சதுரத்தின் நீளம் 3 cm ஆகும். கம்பி வலையிலுள்ள $90cm^2$ பரப்பளவை நிழற்றுக.



13) எதிரேயுள்ள உருவில் நிழற்றப்பட்ட பகுதியை முழு உருவின் பின்னமாக எழுதுக.

14)  எதிரேயுள்ள பெரிய கோலுக்கும், சிறிய கோலுக்கும் இடையிலான வித்தியாசம் எவ்வளவு?

ஒவ்வொரு கூட்டிலுள்ள இலக்கங்களின் கோலங்களை விளங்கி, வெற்றுக் கூட்டிற்குள் வரவேண்டிய எண்ணை எழுதுக.


15)

| | | |
|---|---|---|
| 8 | 10 | 12 |
| 6 | 4 | 14 |
| ? | 18 | 16 |

16)

| | | |
|---|---|---|
| 19 | 22 | 25 |
| 16 | 13 | 10 |
| ? | 4 | 7 |

சில பழவகைகள் கீழேயுள்ள அடைப்புக்களில் தரப்பட்டுள்ளன.





17) கூடிய நிறையுள்ள பழவகை எது? ..........................................

18) சமமான நிறையுள்ள பழவகை எவை? ..........................................

19) குறைவான நிறையுடைய பழவகை எது? ..........................................

20) ஒரு விருந்து உபசாரத்தில் கலந்து கொண்ட 32 பேருக்கு ஒவ்வொருவருக்கும் 85ml குளிர்பானம் வழங்கப்பட்டது. இவர்களுக்கு பரிமாறப்பட்ட குளிர் பானத்தின் கனவளவு எவ்வளவு? ..........................



21)  எதிரேயுள்ள உருவிலுள்ள முகங்கள் எத்தனை?

22) அனுலா, அனோஜன் ஆகியோரின் நிறைகளின் கூட்டுத்தொகை 41 கிலோகிராம் ஆகும். அனுலா, அனோஜன், சனுஜன் ஆகியோரின் நிறையின் கூட்டுத்தொகை 67 கிலோகிராம் எனில், சனுஜனின் நிறை எவ்வளவு?

......................................................................

23) ஒரு பேருந்தில் 35 பிரயாணிகள் பயணம் செய்கின்றனர். அடுத்த பேருந்து தரிப்பு நிலையத்தில் 4 பிரயாணிகள் இறங்க, 11 பிரயாணிகள் பேருந்து வண்டியினுள் ஏறினர். தற்போது பேருந்தில் பயணிக்கும் பிரயாணிகள் எத்தனை?

......................................................................

24) கல்முனையிலிருந்து மட்டுநகர், பொலநறுவை, கண்டி ஊடாக கொழும்பு வரையுள்ள தூரம் எவ்வளவு?

......................................................................

| | | | கொழும்பு |
|---|---|---|---|
| | | கண்டி | 142 |
| | பொலநறுவை | 116 | 258 |
| கல்முனை | 45 | 161 | |

**ஒரு கடையில் வைக்கப்பட்டுள்ள விலைப்பட்டியல் எதிரே தரப்பட்டுள்ளது. அதனைப் பயன்படுத்தி விடை தருக.**

| பொருள் | விலை |
|---|---|
| A 1 kg சீனி | ரூ. 68.00 |
| B 500 kg தேயிலை | ரூ. 190.00 |
| C 100 kg மாசி | ரூ. 90.00 |
| D 500kg பருப்பு | ரூ. 70.00 |


25) விலைப்பட்டியலுக்கு ஏற்ப, 1 kg சீனி, 1 kg தேயிலை, 1 kg பருப்பு, 1 kg மாசி ஆகியவற்றின் விலை எவ்வளவு? ..........................................

26) A, B, C,D பொருட்களின் விலைகளுக்கு ஏற்ப, அவற்றை இறங்குவரிசைப் படுத்துக.


......................................................................

27) 250g மாசியும், 500g சீனியும் வாங்கி, ரூபா 500.00 தாளைக் கொடுத்தால் மீதிப்பணம் எவ்வளவு கிடைக்கும்? ..........................................

28) எல்லாப் பொருட்களிலும் 250g வாங்குவதற்கு எவ்வளவு பணம் தேவை? ..........................

29)  எதிரேயுள்ள உருவில் எத்தனை செங்கற்கள் உள்ளன? ..........................

30) உருவில் உள்ள தராசின் தட்டு A யில் ஒரு பெட்டியும் B யில் 2 kg படிக்கல் ஒன்றும் உள்ளன. உருவில் உள்ள தகவல்களைப் பயன்படுத்திப் பின்வரும் வாக்கியத்தைப் பூரணப்படுத்துக.
பெட்டியின் நிறை ஒரு கிலோகிராமிலும் ..........................................




31) ஒரு தேக்கரண்டி கொள்ளத்தக்க திரவத்தின் கனவளவு 5 ml ஆகும். ஒரு நோயாளிக்கு ஒரு தடவைக்கு இரண்டு தேக்கரண்டி வீதம் ஒரு நாளுக்கு மூன்ற தடவை மருந்து கொடுக்கப்பட்டது. அவருக்கு ஒரு நாளுக்குக் கொடுக்கப்பட்ட மருந்தின் கனவளவு? ..........................

32) 5m நீளமுள்ள ஒரு நாடாவிலிருந்து ஒவ்வொன்றும் 20 cm நீளமுள்ள 5 துண்டுகள் வெட்டப்பட்டன. நாடாவின் எஞ்சியுள்ள பகுதியின் நீளம் யாது? ..........................

# 2014 ஆம் ஆண்டுக்கு முன்னரே இந்திய நாடாளுமன்றத் தேர்தல்

## - சரத் பவார் ஆரூடம் -



(புதுடில்லி)

2014ஆம் ஆண்டுவரை காத்திருக்கத் தேவை இல்லை இந்திய நாடாளுமன்றத்துக்கு விரைவில் தேர்தல் வரும் என மத்திய வேளாண் அமைச்சரும் தேசியவாத காங்கிரஸ் தலைவருமான சரத் பவார்தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்; நாட்டில் தற்போது அரசியல் ஸ்திரமற்ற தன்மை நிலவி வருகிறது. இந்த சூழ்நிலையில், அடுத்த நாடாளுமன்ற தேர்தலுக்கு 2014ஆம் ஆண்டுவரை நாம் காத்திருக்கத் தேவை இல்லை என்றே கருதுகிறேன். எனவே, நாடாளுமன்றத்துக்கு விரைவிலேயே தேர்தல் வரும். தேர்தலைச் சந்திக்க நாங்கள் தயாராகி வருகிறோம்.

நான் வருகிற நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட மாட்டேன். கட்சிக்கு தலைவராக இருந்து வழிநடத்துவேன்.

மத்திய மந்திரிசபை விரைவில் மாற்றி அமைக்கப்படுவதால், எங்கள் கட்சி சார்பில் மந்திரி பதவிககு யாருடைய பெயரையாவது சிபாரிசு செய்யுமாறு பிரதமர் மன்மோகன்சிங் என்னிடம் கேட்டார். அதன்படி, எங்கள் கட்சி செய்தித்தொடர்பாளர் தாரிக் அன்வர் பெயரை நான் சிபாரிசு செய்துள்ளேன்.

என் மகள் சுப்ரியா சுலே பெயரை சிபாரிசு செய்யவில்லை. தாரிக் அன்வர் பெயரைத்தான் சிபாரிசு செய்துள்ளேன். என்றார்.

# வறுமையில் வாடும் 8 மில்லியன் இந்தியர்கள்



(ஜெனிவா)

ஆசியா மற்றும் பசிபிக் பகுதிகளில் உணவு, பண வீக்கம் காரணமாக மக்கள் வறுமை நிலைக்கு தள்ளப் பட்டுள்ளதாக ஐ.நா தெரிவித்துள்ளது.


குறிப்பாக உணவுப் பொருட்களின் கடுமையான விலையேற்றம் காரணமாக 8 மில்லியன் இந்தியர்கள் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

விவசாய உற்பத்தி பாதிப்பு, உரங்களின் விலை ஏற்றம், விவசாய நிலங்கள் போதிய அளவில் இல்லாதது, வறட்சி, எண்ணெய் விலை ஏற்றம் உள்ளிட்டவைகளும் இந்த வறுமை நிலைக்கு முக்கிய காரணமாகிறது.

அத்தோடு ஒரு குடும்பத்தின் வருமானத்தில் 65 சதவீதத்திற்கும் அதிகமான பணம் உணவிற்காகச் செலவிடப்படுகிறது.




வங்கதேசம், நேபாளம், இலங்கை ஆகிய நாடுகளில் உணவுப் பொருட்களின் விலை குறைவாகவே உள்ளதாகவும், அதனால் அவர்கள் உணவிற்காகச் செலவழிக்கும் தொகை குறைவானது எனவும் ஐ.நா தெரிவித்துள்ளது.



மார்பக புற்றுநோய் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் தலைநகர் டில்லியில் உள்ள அக்ஷர்தாம் கோயில், விளக்குகளால் ஒளியூட்டியிருப்பதைக் காணலாம்.

# அசுத்தமான நீரை நன்னீராக்கும் கருவியை உருவாக்கிய மாணவி

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அமெரிக்க மாணவி ஒருவர் அசுத்தமான நீரை நன்னீராக்கும் கருவியை உருவாக்கி சாதனை படைத்துள்ளார்.

அமெரிக்காவின் Massachusetts மாநிலத்தின் தென் பகுதியிலுள்ள 'Nashua' உயர் கல்லூரியில் கல்வி கற்று வரும் தீபிகா குருப் (வயது-14) என்ற மாணவியே இந்தச் சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

அமெரிக்காவின் Discovery Eduction 3M young scientist challenge என்ற அமைப்பு இளம் விஞ்ஞானிகளுக்கான தேர்வு ஒன்றை நடாத்தியது.

இதில், அசுத்தமான தண்ணீரை சூரிய சக்தி கொண்டு சுத்தப்படுத்தி தூய குடி நீராக்க உதவும் சிறந்த ஒரு கருவியை மாணவர்கள் உருவாக்க வேண்டும் என்பதே போட்டியின் விதிமுறை.

இதில் தீபிகா குருப் உருவாக்கிய கருவியே சிறந்ததாகத் தெரிவு செய்யப்பட்டு அவருக்கு அமெரிக்காவின் முதல்தர இளம் விஞ்ஞானி என்ற பட்டத்துடன் 25,000 டொலர் பரிசாக வழங்கப்பட்டுள்ளது.

உலகம் முழுதும் சுமார் 1 பில்லியனுக்கு மேற்பட்ட மக்கள் சுத்தமான நீரைப் பயன்படுத்த இயலாதவர்களாக உள்ளனர்.




இதனால் தீபிகாவைத் தெரிவு செய்த நடுவர்கள், அவர் கண்டுபிடித்த விலை குறைந்த கருவி அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் தண்ணீரை சுத்தப்படுத்த மிகவும் உதவிகரமாக இருக்கும் என தெரிவித்துள்ளனர்.


## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..........................................

முகவரி : ..........................................

பிறந்த ஆண்டு : ..........................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

..................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.


## எரிக் சொல்கைமும்...

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நவீன தகவல் தொழில்நுட்ப அறிவியல் வளர்ச்சி உலகின் மூலை முடுக்கெங்கும் அறிவியல் திரட்சியை மேம்படுத்தி வருகிறது. இதே அறிவியல் திரட்சி, பல நாடுகளின் இராணுவ பலத்திற்கு அடிப்படையான அணு ஆயுத உருவாக்கத்திற்கும் வழி செய்திருக்கிறது. இதனால் இந்நாடுகள் ஒன்றுக்கொன்று சளைத்துவிட முடியாத அளவுக்கு இராணுவபலத்தையும் பெற்றுவருகின்றன. இவையனைத்துமே இன்றைய ஏகாதிபத்திய பரவலாக்கல் முறைமைகளுக்கான சில எடுத்துக்காட்டுகளாகும்.

சுருங்கக் கூறின், இத்தகைய நவீன புரிதல்களுக்கூடாகத்தான் நாம் இன்றைய உலகைப் புரிந்துகொள்ள முடியும். இதற்கு அடிப்படையாக (நவீன உலகைப் புரிந்துகொள்ளும் வகையில்) நாம் எமது சிந்தனை முறைமையில் உடைப்பை மேற்கொள்ளவேண்டும். எவ்வளவுதான் கற்றுக்கொண்டாலும் எமது சிந்தனை முறைமையில் உடைப்புச் செய்யாதவரை நாம் குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டுபவர்களாகத்தான் இருப்போம்.

ஏகாதிபத்தியம் அல்லது மேற்குலகம் பற்றிய நவீன புரிதல்களுக்கூடாகத்தான் எரிக் சொல்கைம்மையும் நாம் புரிந்துகொள்ள முடியும். பிரபாகரன் வரலாற்றுத் தவறை இழைத்தார் என்பது தமிழர்களின் அடிமனதில் மறைந்திருக்கும் அப்பட்டமான பேருண்மை. வாழ்க்கை பூராவும் தவறுகளுக்கூடாகவே தலைமைக்கு வந்த ஒரு மனிதன் வரலாற்றுத் தவறிழைத்தார் என்பதில் வியப்பேதுமில்லை. பிரபாகரன் சரணாகதியடைந்தது முதல், இறுதிக்கட்டப் போரில் நிகழ்ந்த இன்னும் பல உண்மைகளை அறிந்திருப்பவர்தான் எரிக் சொல்கைம். அவ்வகையில் இன்னும் பல விடயங்களை அவர் துல்லியப்படுத்த வேண்டும். அதற்கான கடமையும் அவருக்குண்டு.

இறுதிக் கட்டப் போரில் ஓர் தலைவனாக தன்னை புடம்போட்டுக்கொள்வதற்கான சத்திய சோதனையில் பிரபாகரன் தோற்றுப் போகிறார். தற்கொலைத் தாக்குதல் வழியிலும் மற்றும் போர்முனைத் தாக்குதல்களிலுமாய், ஆயிரம் ஆயிரமாய் மாவீரர்களை உருவாக்கிய ஒரு "தலைவன்", பொது மக்கள் சார்ந்தும், தனது போராளிகளின் உயிர்வாழ்வு குறித்தும் தன்னை ஒரு மாவீரனாகத் தியாகித்துக் கொள்ள முன்வரவில்லையே என்பதுதான் இங்கு அவலம். 30 ஆண்டுகால போராட்ட வரலாற்றில் தமிழ் தேசியத்துக்குக் கிடைத்த பேரவலமும் இதுதான்.

எந்தொரு மனிதன் சத்திய சோதனையில் ஜெயிக்கிறானோ அவனே சரித்திரம் முழுமையும் வாழ்வான்.

# 70 சதவிகித இளைஞர்கள் பஞ்சாப்பில் போதைக்கு அடிமை



(பஞ்சாப்)

பஞ்சாபில் இளைஞர்கள் 10 பேரில் 7 பேர் போதைக்கு அடிமையாகி உள்ளனர் என்று கூறியுள்ளார்.

பஞ்சாப் பல்கலைக் கழக வளாகத்தில், இந்திய தேசிய மாணவர்கள் சங்கம் கடந்த வாரம் ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில், காங்கிரஸ் பொதுச் செயலாளர் ராகுல் காந்தி கலந்து கொண்டு பேசினார். அப்போது, பஞ்சாபில் மனித வளம் எந்த நிலையில் இருக்கிறது என்றால், இளைஞர்களில் 10இற்கு 7 பேர் போதைக்கு அடிமையாகி உள்ளனர். அதாவது 60 முதல் 70 சதவீகித இளைஞர் மனித வளம் போதையில் சிக்கியுள்ளது.

இளைஞர்கள் இந்த நாட்டை வழி நடத்திச் செல்ல வேண்டும். நாட்டை ஆள்வதற்கு உங்களிடம் சக்தியும், அறிவும் இருக்கின்றன. நீங்கள் அரசியலுக்கு வர வேண்டும். அரசிய லைப் புனிதமாக்கி, அதன் நிலையை மாற்ற வேண்டும் என்றார்.

இது போன்ற குற்றச்சாட்டை கூறி, மாநிலத்துக்கு கெட்ட பெயரை எற்படுத்த அவர் முயன்றுள்ளார் என்று மாநில அரசு மறுத்தது. ஆனால் பாரதீய ஜனதா எம்.பி. சித்துவின் மனைவியும், ஆளுங்கட்சி எம்.எல்.ஏ.வுமான நவ்ஜோத் கவுர், ராகுல் காந்தியின் கருத்தை அங்கீகரித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக அளித்த பேட்டியில்;

பஞ்சாபில் 60 முதல் 70 சதவீகிதம் இளைஞர்கள் போதைக்கு அடிமையானவர்கள்தான். இதற்கு என்னிடம் ஆதாரம் உள்ளது. இதை நான் சொல்லவில்லை. உலக சுகாதார அமைப்பின் அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

## முகமது நபியை அவதூறாகப் பேசியவர் பாகிஸ்தானில் சுட்டுக் கொலை

பாகிஸ்தானில் முகமது நபியைப் பற்றி அவதூறாக பேசியதாக கூறப்படும் நபரொருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

லாகூரில் இருந்து 80 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள குஜ்ரன்வாலா மாவட்டத்தைச் சேர்ந்த சஜ்ஜத் "ஹசேன். என்பவர் முகமது நபியைப் பற்றி அவதூறாகப் பேசியதாக கடந்த 2011 ஆம் ஆண்டு பெப்ரவரியில் கைது செய்யப்பட்டார்.

இதுதொடர்பான வழக்கை விசாரித்த நீதிமன்றம், இதற்கு தகுந்த ஆதாரங்கள் இல்லை என்றுகூறி அவரைக் கடந்த மாதம் விடுவித்தது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் கடைப் பகுதியில் சென்று கொண்டிருந்த "ஹசேனை, துப்பாக்கியுடன் வந்த 2 பேர் சரமாரியாகச் சுட்டனர். இதில் சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்தார்.

இதன் பின்னர் இருவரும் பொலிஸில் சரணடைந்தனர். விசாரணையில் அவர்கள் 'ேக் சீஸன் மற்றும் அவைஸ் அகமது என்பதும், "ஹசேனின் வீடு அருகே வசிப்பவர்கள் என்பதும் தெரியவந்தது. மேலும் முகமது நபியைப் பற்றித் தவறாகப் பேசியதால் ஹு"சேனை சுட்டுக் கொன்றதாக இருவரும் தெரிவித்துள்ளனர்.

## "ஹஜ்" பண்டிகையை முன்னிட்டு சிரியப் போரை இடைநிறுத்துக

முஸ்லிம்களின் 'ஹஜ்' பண்டிகை அடுத்த வாரம் கொண்டாடப்பட இருப்பதால், சிரியாவில் நடந்து வரும் போரை தற்காலிகமாக நிறுத்த வேண்டும் என அமெரிக்கா சிரியாவுக்கு கோரிக்கை விடுத்துள்ளது.

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் அசாத்துக்கு எதிராக நடந்து வரும் உள்நாட்டு போரில், இதுவரை 30 ஆயிரம் பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் சிரியாவில் முஸ்லிம்களின் முக்கிய பண்டிகைக் காலம் அடுத்த வாரம் தொடங்குகிறது.

இந்த விழாவில் அனைத்து முஸ்லிம் மக்களும் பங்கேற்க வசதியாக சிரியாவில் தற்காலிக போர் நிறுத்தம் ஏற்பட அமெரிக்கா, துருக்கி உள்ளிட்ட நாடுகள் சிரியாவை வலியுறுத்தி உள்ளன.

இதுகுறித்து அமெரிக்க அதிகாரி விக்டோரியா நூலந்து கூறுகையில், சிரியாவில் முஸ்லிம்களின் முக்கிய பண்டிகை அடுத்த வாரம் கொண்டாடப்பட உள்ளது.

இந்த மத விழாவில் அனைத்து முஸ்லிம் மக்களும் எந்த வித பய உணர்வும் இல்லாமல் கலந்து கொள்ள வசதியாக தற்காலிக போர் நிறுத்தம் மேற்கொள்ள வேண்டும் என வற்புறுத்துவதற்காக எங்களது ஆதரவாளர் பெர்காமி அங்கு விரைந்துள்ளார்.

நாங்கள் சிரியாவை வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறோம். உங்களது அனைத்து இராணுவ நடவடிக்கைகளையும் உடனடியாக நிறுத்த வேண்டும்.

மக்கள் பண்டிகை கால கொண்டாட்டத்தை அமைதியாகக் கொண்டாட வசதியாகவும், மனித நேயத்துடன் சிரியா நடந்து கொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்துகிறோம் என்றார்.

இந்நிலையில் சிரியாவில் தற்காலிக போர் நிறுத்தம் ஏற்படுவதற்கு சிரியாவின் ஆதரவு நாடுகளான துருக்கி மற்றும் ஈரான் நாடுகளும் ஆதரவு தெரிவித்துள்ளன.

துருக்கி வெளிவிவகாரத் துறை அமைச்சர் அகமத் தவுத் தோகுலு, மக்களின் விடுமுறை கொண்டாடத்தை சீர்குலைக்காத வகையில் சிரியாவில் 3 அல்லது 4 நாட்கள் போர் நிறுத்தம் ஏற்பட வழிவகுக்க வேண்டும் என்று கேட்டுள்ளார்.

## கடற்கொள்ளையர்கள் 10 பேருக்கு ஜேர்மனியில் சிறைத்தண்டனை


ஜேர்மனியில் முதன் முறையாக கடற் கொள்ளையர்கள் பத்து பேருக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

19 வயது முதல் 50 வயது வரையிலான கடற்கொள்ளையர்கள், கடந்த 2010 ஆம் ஆண்டு போர்க்கப்பல் ஒன்றினைக் கடத்திக் கொண்டு வந்ததற்காக இத்தண்டனையைப் பெற்றனர்.

இவர்களிடமிருந்து ஐந்து இயந்திர துப்பாக்கிகளும், இரண்டு ரொக்கெட் ஏவுகணைகளும் கைப்பற்றப்பட்டன.

இவர்களில் பெரியவர்கள் ஏழு பேருக்கு 6-7 ஆண்டுகள் சிறைத்தண்டனையும், பதின்ம வயது இளைஞர்கள் மூவரை சீர்திருத்த பள்ளியில் சேர்க்கும்படியும் தீர்ப்பு வழங்கப்பட்டது.

## செவ்வாய் கிரகத்தில் ஒளிரும் பொருள்



அமெரிக்காவின் நாசா மையத்தின் கியூரியா சிட்டி என்ற விண்கலம் செவ்வாய்க் கிரகத்திற்கு செனறு ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

அங்கிருந்து புகைப் படங்களை எடுத்து பூமிக்கு அனுப்பி வருகின்றது. இந்நிலையில் தற்போது முதன் முறையாக செவ்வாய் கிரகத்தின் மணலைத் தோண்டி எடுத்து ஆய்வு செய்து வருகிறது.

இது குறித்து எடுக்கப்பட்ட புகைப்படத்தில் வெள்ளை நிறத்தில் ஒளிரும் பொருள் இருப்பது தெரியவந்துள்ளது.

இது நாசா விஞ்ஞானிகளுக்கு பெரும் குழப்பத்தை ஏற்படுத்தி உள்ளது. ஏனெனில் இதற்கு முன்பும் இதுபோன்ற பொருள் இருந்தது குறிப்பிடத்தக்கது.

இப்பொருள் செவ்வாய் கிரகத்தில் உள்ள ஒரு வித்தியாசமான கணிம பொருளாக இருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

எனவே அது குறித்து ஆய்வு நடத்த செவ்வாய் கிரகத்தின் மற்றொரு பகுதியில் மணலை வெட்டி எடுத்து ஆய்வு செய்யுமாறு கியூரியாசிட்டி விண்கலத்துக்கு விஞ்ஞானிகள் கட்டளை பிறப்பித்துள்ளனர்.

## முஸ்லிம் மாணவிகளின் முக்காடு; ரஷ்ய ஜனாதிபதி எதிர்ப்பு



(ரஷ்யா)

மாணவிகள் தலையை முக்காடிட்டு வருவதற்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவில் மொத்தமுள்ள 15 கோடி மக்களில், இரண்டு கோடி பேர் முஸ்லிம்கள் ஆவர்.

செசன்யா, வடக்கு காகசஸ், டடார்ஸ்டான் ஆகிய மாகாணங்களில் அதிகளவு முஸ்லிம்கள் வசிக்கின்றனர்.

இங்கு படிக்கும் பிள்ளைகள் முக்காடு அணிந்து வருகின்றனர். இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் பள்ளி முதல்வர்கள் மிரட்டப்படுகின்றனர்.

இது குறித்து ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் கூறுகையில்,

ரஷ்யா மதசார்பற்ற நாடு. அனைத்து குடிமக்களிடையே சமத்துவம் கடைபிடிக்கப்படுகிறது. இதே சட்டதிட்டங்களை தான் பள்ளியிலும் கடைபிடிக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

உலகச் செய்திகள்

## காசாவுக்குச் சென்ற படகை தடுத்து நிறுத்தியது இஸ்ரேல்

காசாவுக்கு சென்று கொண்டிருந்த படகை இஸ்ரேல் படையினர் தடுத்து நிறுத்தி உள்ளதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

காசா நிலப்பரப்புக்குள் படகுகள் நுழையாதபடி இஸ்ரேல் இராணுவம் தடைகளைப் போட்டு வைத்துள்ளது. மேலும் யாரும் உள்ளே நுழையக்கூடாது என்ற பல்வேறு தடைகளையும் அறிவித்துள்ளது.

இந்நிலையில் தடைகளை மீறி காசா பகுதிக்குள் படகு பயணிக்க முற்பட்ட போது, இஸ்ரேல் படையினர் தடுத்து நிறுத்தி உள்ளனர்.

இத்தகவலை அந்நாட்டின் இராணுவ பேச்சாளர் தெரிவித்துள்ளார். மேலும் அவர் கூறுகையில், படகில் இருந்தவர்களுடன் மோசமாக நடந்து கொள்ளவில்லை என்றும், கடற்படையினர் அவர்களுக்கு உணவும், குடிபானமும் கொடுத்ததாகவும் தெரிவித்துள்ளார்.


இந்தப் படகு தற்போது இஸ்ரேலின் அஷ்டோட் துறைமுகத்துக்கு கொண்டு செல்லப்பட்டிருக்கிறது.

இத்தாலியின் நேப்பிள்ஸ் நகரிலிருந்து பின்லாந்து நாட்டுக் கொடியுடன் ஒக்டோபர் மாதம் 7ஆம் திகதி புறப்பட்ட எஸ்த்தல் என்ற இந்தப் படகில் 8 நாடுகளைச் சேர்ந்த 20 பேர் இருந்துள்ளனர். ஐரோப்பிய நாடுகளின் அரசியல்வாதிகள் ஐந்து பேரும் இந்தப் படகில் சென்றவர்களில் அடங்குவர்.

காசா நிலப்பரப்புக்குள் வசிக்கும் பாலஸ்தீனர்களுக்கு மருந்துப் பொருட்கள் மற்றும் கல்வி உபகரணங்களை எடுத்துக் கொண்டு இந்தப் படகு சென்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றார்.

## ரோம்னிஷியா நோயால் பாதிக்கப்பட்டுள்ளார் மிட் ரோம்னி

### பராக் ஒபாமா கிண்டல்



அமெரிக்க தேர்தல் நேரடி விவாதம் சூடு பிடித்துள்ள நிலையில், மிட் ரோம்னிக்கு அம்னீஷியாவை போன்று ரோம்னிஷியா நோய் வந்துள்ளது, அதை தன்னால்தான் குணப்படுத்த முடியும் என்று அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் நவம்பர் மாதம் 6 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இத்தேர்தலில் பராக் ஒபாமாவுக்கும், மிட் ரோம்னிக்கும் இடையே கடும் போட்டி நிலவுகிறது.

இருவருக்கும் இடையே நடைபெற்ற முதல் நேரடி விவாதத்தில் மிட் ரோம்னியின் கை ஓங்கியிருந்தது. இரண்டாவது விவாதத்தில் ஒபாமா முன்னிலை பெற்றார்.

இருவரின் ஆதரவாளர்களும் தீவிரப் பிரசாரத்தை மேற்கொண்டு வரும் நிலையில், மிட் ரோம்னி குறித்து ஒபாமா வர்ஜீனியா மாகாணத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் பேசுகையில்,

சம வேலைக்கு சம ஊதியம் என்ற கோரிக்கையை ஆதரிப்பதாக மிட் ரோம்னி கூறினார். ஆனால் அது தொடர்பாக மசோதாவை கொண்டு வருவாரா எனக் கேட்டால், பதிலளிக்க மறுக்கிறார்.

அதேபோன்று இப்போது நிலக்கரித் துறைக்கு ஆதரவாக பேசும் ரோம்னி, அவர் ஆளுநராக இருந்த போது அதற்கு எதிராகப் பேசியுள்ளார்.

பணக்காரர்களுக்கு வரிச்சலுகை வழங்கப்படும் என்று முதலில் கூறிய ரோம்னி, இப்போது அது போன்ற திட்டம் எதுவும் இல்லை என்கிறார்.

அவரது இணையதளத்தில் வெளியிட்டுள்ள கொள்கை விளக்கங்களையே அவரால் நினைவில் வைத்துக் கொள்ள முடியவில்லை.

இவை எல்லாம் அவருக்கு ரோம்னீஷியா வந்திருப்பதற்கான அறிகுறிகள் என நினைக்கிறேன். இதைக் குணப்படுத்த ஒபாமா மருந்துதான் சிறந்தது. இது குணப்படுத்தக் கூடிய நோய்தான் என்றார்.

# சர்வதேச நீதிமன்றில் வழக்கு; இலங்கைக்கு அது சாத்தியமில்லை

(கொழும்பு)

ரஷ்யாவும், சீனாவும் இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் குறித்து மெத்தனமான போக்கைப் பின்பற்றியதாக மனித உரிமை கண்காணிப்பகம் குற்றம் சுமத்தியுள்ளது. யுத்தம் இடம்பெற்ற காலப் பகுதியில் இலங்கையில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றதாகக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

எனினும், இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பக்கச்சார்பற்ற சுயாதீன விசாரணை நடத்தும் முனைப்புக்களை சீனாவும், ரஷ்யாவும் தடுத்து நிறுத்தியதாக மனித உரிமை கண்காணிப்பகத்தின் சர்வதேச நீதிப் பிரிவுப் பணிப்பாளர் ரிச்சர்ட் டிக்கர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் இலங்கைக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும் நடவடிக்கைகளில் ரஷ்யாவும், சீனாவும் ஒத்துழைப்பு வழங்கவில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இவ்வாறான ஓர் பின்னணியில் இலங்கை விவகாரம் தொடர்பில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நடவடிக்கை எடுக்கக் கூடிய சாத்தியம் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, உள்நாட்டு பிணக்குகளில் சர்வதேச சக்திகள் தலையீடு செய்வது ஏற்புடையதல்ல என இலங்கை அரசாங்கம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது. உள்நாட்டு, சர்வதேச பிணக்குகளுக்கு அமைதியான வழிகளில் பேச்சுவார்த்தை அடிப்படையில் தீர்வுகள் எட்டப்பட வேண்டுமென அண்மையில் ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கான இலங்கை வதிவிடப் பிரதிநிதி டாக்டர் பாலித கொஹன்ன தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# டெங்கு நோயால் இயக்குநர் மரணம்



(புதுடில்லி)

பிரபல பொலிவூட் திரைப்பட இயக்குநர் யாஷ் சோப்ரா (வயது-80), டெங்கு நோயால் பாதிக்கப்பட்ட நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

டெங்கு நோய்த் தொற்றுக்கு இலக்காகியிருந்த சோப்ரா, மும்பை லீலாவதி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

இவரது இயக்கத்தில் எதிர்வரும் நவம்பர் மாதம் 13 ஆம் திகதி ஜப் தக் ஹே ஜான் என்ற திரைப்படம் வெளியாகவுள்ளது. இதில், இந்தி நடிகர், நடிகைகளான ஷாருக்கான், கத்ரீனா கைப் மற்றும் அனுஷ்கா சர்மா ஆகியோர் நடித்துள்ளனர்.

இவரது இயக்கத்தில் வெளியான தீவார், த்ரிசூழ், சாந்த்னி, வீர் மற்றும் ஸாரா போன்ற திரைப்படங்கள் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வன்னியிலிருந்து...

பெருமளவிலான படையினர் வீடு திரும்ப அனுமதிக்கப்பட்டதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில் குறித்த பேருந்து பிற்பகல் ஒரு மணியளவில் யாழ்.நகரிலிருந்து புறப்பட்டுள்ளது. கிளிநொச்சியில் இடைநடுவில் ஏறிய தலைக்கவசம் அணிந்த நபர் ஒருவர் குறித்த பையினை பயணிகள் ஆசனமொன்றின் கீழ் வைத்துள்ளார். குறித்த பஸ் ஓமந்தை சோதனைச் சாவடியில் நிறுத்தப்பட்ட வேளையில் படையினரது சோதனையின் போது குறித்த வெடிபொருட்கள் கைப்பற்றப்பட்டிருந்தது. பஸ்ஸினுள் இருந்த அனைவரும் அவசரமாக ஓமந்தை பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளுக்குட்படுத்தப்பட்டனர். குறித்த பஸ்ஸில் பயணித்த படையினர் வெளியேற அனுமதிக்கப்பட்ட போதும் பொதுமக்கள் சுமார் எட்டு மணி நேரம் வரையில் பஸ்ஸினுள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

எனினும், கைது செய்யப்பட்ட குறித்த நான்கு வன்னியை சேர்ந்த இளைஞர்களும் மன்னாரில் நடைபெறவிருந்த விளையாட்டுப்போட்டியொன்றிற்காக பயணித்ததாகத் தெரிகிறது.

## 13 ஆம் திருத்தத்தை...

13 ஆம் திருத்தச் சட்டத்தை இரத்து செய்யும் அளவிற்கு அரசாங்கம் தேவையற்ற தீர்மானங்களை எடுக்காது என்றே தாம் கருதுவதாக அவர் தெரிவித்துள்ளார். 13 ஆம் திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்பட்ட போது எதிர்க்கட்சியிலிருந்து கொண்டு தாம் அதற்கு ஆதரவாக வாக்களித்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

13 ஆம் திருத்தச் சட்டத்திற்கு காத்திரமான ஓர் மாற்றீட்டு யோசனைத் திட்டம் முன்வைக்கப்படும் வரையில் அதனை இரத்து செய்வது புத்தி சாதூரியமான தீர்வாக அமையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். மாகாணசபை முறைமை இரத்து செய்யப்பட வேண்டும், 13 ஆம் திருத்தச் சட்டம் இல்லாதொழிக்கப்பட வேண்டும் போன்ற கருத்துக்களை வெளியிடுவதன் மூலம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் அகில கால மீளாய்வு அமர்வுகளில் இலங்கைக்கு பாதக நிலைமை ஏற்படக் கூடுமென அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## இந்திய...

குடன் விசேட சந்திப்பு ஒன்றை நாளை கூட்டமைப்பு ஏற்பாடு செய்துள்ளது. அதேவேளை, கட்சியை பதிவு செய்வது தொடர்பிலும் கூட்ட மைப்பில் அங்கம் வகிக்கும் ஐந்து கட்சிகளுக்கும் இடையில் முரண்பாட்டு நிலைமை ஏற்பட்டுள்ளதாக கொழும்பு ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது. இந்திய விஜயத்திற்கான பிரதிநிதிகள் தெரிவு தொடர்பிலும் கட்சிக்குள் முரண்பாட்டு நிலைமை ஏற்பட்டுள் ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்த சங்கரி மற்றும் புளொட் உறுப்பினர் சித்தார்த்தன் போன்றோர் இந்திய விஜயத்தில் இணைத்துக் கொள்ளப்படவில்லை. கட்சி பதிவு உள்ளிட்ட ஏனைய சில பிரச்சினைகள் தொடர்பில் நாளை நடைபெறவுள்ள கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## தொழில்நுட்ப அறிவு பின்னடைவை நோக்கி

இலங்கையர்களிடம் தொழில் நுட்பம்சார் அறிவு குறைவாகக் காணப்படுவதாக ஐக்கிய நாடுகள் அமைப்பின் அறிக்கையொன்று சுட்டிக் காட்டியுள்ளது. உலகப் பொருளாதார சவால்களை எதிர்நோக்கும் அளவில் இலங்கையர்களின் தொழில்நுட்ப அறிவு விருத்தியடையவில்லை என தெரிவித்துள்ளது.

உலக வங்கியின் பொருளாதார அறிவு சுட்டெண் தரவரிசையில் இலங்கை 101 ஆம் இடத்தை வகிக்கின்றது. 2000 ஆம் ஆண்டில் 87 ஆம் இடத்தை வகித்து வந்த இலங்கை, தற்போது 101 ஆம் இடத்திற்குப் பின்தள்ளப்பட்டுள்ளது.

இலங்கைப் பல்கலைக்கழக முறைமை தொழில்சார் கல்வியை ஊக்கும் வகையில் அமையவில்லை என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## கருத்துக்....

வேண்டும் எனறும் அவர் தெரிவித்தார்.

திவிநெகும திட்டம் முதன் முறை நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட போது காணப்பட்ட எதிர்ப்புக்களுக்கு உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பைப் பார்க்கும் போது இதன் ஆபத்தான நிலை தெரிகிறது. எனவே, உடனடியாக இதனை பொது மக்கள் பார்வைக்குக் கொண்டு வந்து மக்கள் தீர்ப்பின் மூலம் முடிவு காண வேண்டும் என ஜனாதிபதியிடம் விமல் வீரவன்ச வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## கே.பி.யை...

ஒருவராக குமரன் பத்மநாதன் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளதுடன், ஏற்கனவே சர்வதேச பொலிஸார் பிடிவிறாந்து உத்தரவினை பிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இதே வேளை, இந்த விவகாரம் தொடர்பில் தற்போதைக்கு கருத்துக்களை வெளியிட முடியாது என கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

## குடத்தனையில்....

பிரயோகம் செய்தனர்.

திருடர்கள் தப்பிச் சென்று விட்டனர். அவர்கள் விட்டுச் சென்ற ஹன்ரர் வாகனம் இப்போது பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் உள்ளது.

விசாரணைகள் தொடர்கின்றன.

# வலை விநியோகத்தில் முறைகேடு; சமாசத் தலைவருக்கு நெருக்கடி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சமாசத் தலைவர் யாழில் உள்ள நிறுவனமொன்றிடமிருந்து கடன் டிப்படையில் தனக்கு நெருக்கமான சிலருக்கு மீன்பிடி வலைகளைப் பெற்றுக்கொடுத்த விடயத்தில் சிக்கலில் மாட்டியுள்ளார்.

யாழிலுள்ள மீன்பிடி வலைகளை உற்பத்தி செய்யும் நிறுவனம், ஒன்றிமீருந்து சுமார் 25 இலட்சம் ரூபாய் பெறுமதியான வலைகளை குறித்த சமாசத்தின் தலைவர் கடனாகப் பெற்று அதனை தனக்கு நெருக்கமான தென்னிலங்கை மீனவர்கள் சிலருக்கு அதிக விலைக்கு விற்பனை செய்துள்ளார். எனினும் வலை உற்பத்தி நிறுவனத்திற்கு உரிய பணத்தை இன்னமும் கொடுக்கவில்லை. இந்நிலையில் குறித்த நிறுவனம் தற்போது சமாசத் தலைவர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கத் தயாராகி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# மிருசுவிலில் விபத்து; குடும்பஸ்தர் படுகாயம்

வேகக்கட்டுப்பாட்டை மீறி பயணித்த இராணுவத்தினரின் கனரக வாகனம் ஆட்டோ ஒன்றின் மீது மோதி விபத்திற்குள்ளான சம்பவத்தில் யாழ். மிருசுவிலில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் மிருசுவில் ஏ-9 வீதியில் நேற்று முன்தினம் நண்பகல் இடம்பெற்றிருக்கின்றது. சம்பவத்தில் பே.பிளமிங் என்ற 38 வயதான குடும்பஸ்தர் ஒருவரே படுகாயமடைந்துள்ளார்.

இவர் சம்பவத்தின் போது முச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்ததாகவும், இதன் போது மிதமிஞ்சிய வேகத்தில் வந்த இராணுவத்தினரின் கனரக வாகனம் முன்னால் சென்று கொண்டிருந்த முச்சக்கர வண்டியுடன் மோதியுள்ளது. இதில் முச்சக்கர வண்டி தூக்கி வீசப்பட்டுள்ளது.

## யாழ்.திவிநெகும...

வித்தார். மேற்படி கொடி தினத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட நிதி தவறாகப் பயன்படுத்தப்பட்டிருப்பதாக ஊடகங்களில் வெளியான தகவல்கள் குறித்து அவரிடம் வினவியபோதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவரிடம் மேலும் சில கேள்வி களைக் கேட்டபோது தொடர்ந்து அவர் பதிலளித்தார்.

கேள்வி: சமுர்த்தி பயனாளிகளின் நிதியின் மூலம் நடந்தேறிய திவிநெகும ஆதரவுப் பேரணி என ஊடகங் களில் வெளியான செய்தியின் படி இந்த ஊர்வலம் சமுர்த்திப் பயனாளிகளின் நிதியின் மூலம் நடைபெற்றதா?

பதில் : முழுக்க முழுக்க சமுர்த்திப் பயனாளிகளின் நிதி மூலம் ஊர்வலம் நடைபெறவில்லை. போக்குவரத்து மற்றும் பதாதைகள் தயாரித்தல் ஆகியவற்றுக்கு மட்டும் இந்த நிதி பயன்படுத்தப்பட்டது. அவர்களது நிதி அவர்களுக்கு பயனளிக்கக் கூடிய விதத்தில் தான் செலவு செய்யப்பட்டிருக்கிறது. தனியே சமுர்த்திப் பயனாளிகளுக்கு நிவாரணம் வழங்குவதற்கு மட்டும் அந்த நிதியைப் பயன்படுத்த முடியாது. சமுர்த்தித் திட்டத்தின் வளர்ச்சிக்கும், அதன் பயன்பாடு, விழிப்புணர்வு போன்றவற்றுக்கும் இந்நிதி பயன்படுத்த முடியும். அதற்கமைவாகவே இந்நிதியில் ஒரு பகுதியை மேற்படி ஊர்வலத்தின் போதான போக்குவரத்து மற்றும் பதாதை தயாரித்தலுக்கும் பயன்படுத்தப்பட்டதே தவிர சமுர்த்திப் பயனாளிகளின் நிதியின் மூலம் தான் 'திவிநெகும' ஆதரவுப் பேரணி நடந்தேறியது என்பது தவறு.

கேள்வி : ஊர்வலத்தில் அரசியல் சார்ந்த சுலோகங்கள் ஏந்தப்பட்டதாகக் கூறுகிறார்களே அது பற்றி...

பதில் : ஊர்வலங்கள், பேரணிகளில் சுலோக அட்டைகள் ஏந்திச் செல்வது எல்லோருடைய உரிமையும் ஆகும். மக்கள் தமது உரிமை கள்ளப் பயன்படுத்தித்தான் சுலோக அட்டைகளை ஏந்திச் சென்றார்களே தவிர எந்த ஒரு அரசியல் தலையீடும் இல்லாத ஒரு உணர்வை வெளிக்காட்டும் பேரணியாக இது அமைந்தது. இதில் எந்தவிதமான அரசியல் தலையீடும் இடம் பெறவில்லை. மக்கள் தமது உரிமைகளை வெளிக்கொண்டு வரும்போது அது அவர்களின் அரசியல் கருத்துக்களாக இருக்கலாம், அது அவர்களது அடிப்படை உரிமை அதைத் தடுக்க நினைப்பது தவறு.

கேள்வி : ஊர்வலத்தில் பயன்படுத்திய பதாதைகளை ஏந்துமாறு யாராவது உங்களைப் பணித்தார்களா?

பதில் : நாம் சமுர்த்தி உதவித்திட்டம் திவிநெகும திட்டமாக மாறுவதை வரவேற்கிறோம். பயனாளிகள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், யாழ்.மாவட்டம் என்று பொறிக்கப்பட்ட பதாதைகளை மட்டுமே தயாரித்து வழங்கியிருந்தோம். ஆனால் மக்கள் அரசியல் சார்ந்த பதாதைகளை ஏந்தியிருந்தமைக்கு நாம் பொறுப்பாளிகள் அல்ல. அவ்வாறு மக்கள் பதாதைகளை ஏந்துவது அவர்களது அடிப்படை உரிமையே. அதற்கும் எமக்கும் தொடர்பில்லை.

கேள்வி : சமுர்த்திப் பயனாளிகளிடமிருந்து கொடிவாரத்தினூடாகப் பெறப்பட்ட நிதி எவ்வளவு? அதில் எவ்வளவு பங்கு இந்த ஊர்வலத்திற்கெனச் செலவிடப்பட்டிருக்கும் என்று கூற முடியுமா?

பதில் : சமுர்த்திப் பயனாளிகளின் ஊடாக யாழ். மாவட்டத்தில் கொடி வாரத்தில் கேரிக்கப்பட்ட நிதி அண்ணளவாக ஒரு கோடியே 89 இலட்சம் ரூபாவாகும். இந்நிதியிலிருந்து மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் ஊர்வலத்துக்கான போக்குவரத்து மற்றும் பதாதைகள் அமைத்தல் ஆகியவற்றுக்கான 10 ஆயிரம் முதல் 15 ஆயிரம் ரூபா வரை மட்டுமே செலவிடப்பட்டுள்ளது. மிகுதி நிதி சமுர்த்தி வங்கியில் வைப்பிலிடப்பட்டுள்ளது என்றார். (இ)

# கலைப்பிரிவில் கற்றவர்களுக்கும் தாதியர் பட்டம் பெறும் வாய்ப்பு

## உயர் கல்வி அமைச்சர் தகவல்



இலங்கையிலுள்ள பல் கலைக்கழகங்களில் கலைப் பிரிவில் அனுமதி பெறும் மாணவர்களுக்கும் எதிர்காலத்தில் தாதியர் பட்டம் பெறுவதற்கான வாய்ப்புகள் வழங்கப்படவிருப்பதாக உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திசநாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் நடைபெற்ற வைபவமொன்றில் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார். நாட்டிற்கும் உலகிற்கும் தேவையான பட்டப் படிப்புகளை பல்கலைக்கழகங்களில் வழங்க வேண்டியது அவசியம் என வலியுறுத்தினார்.

இலங்கையில் தற்போது சுமார் இரண்டு இலட்சம் தாதியர் வெறறிடங்கள் நிலவுகின்றன கலைப் பிரிவில் அனுமதி பெறும் மாணவர்களுக்கு அறிவியல் பாடங்களான தாவரவியல் , இரசாயனவியல் போன்ற விடயங்கள் தொடர்பான அடிப்படை பாடங்களை சொல்லிக்கொடுத்து விட்டு பின்னர் அவர்கள் தாதியர் பட்டப்படிப்பை மேற் கொள்ள வாய்ப்பளிக்கப்படும்.

அரசாங்க மருத்துவர்கள் மத்தியில் இதற்கு எதிர்ப்புகள் காணப்பட்டாலும் பரவாயில்லை என்றார்.

அமைச்சரின் இந்தத் தீர்மானத்தை வரவேற்றுள்ள அரசாங்க தாதியர் உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவர் சமன் ரத்னப்பிரிய இதில் சில பிரச்சினைகள் இருப்பதாகவும் கூறுகின்றார்.

“தற்போதுள்ள நடைமுறையில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சையில் அறிவியல் பாடங்களில் சித்தி பெற்றவர்கள் இஸட் ஸ்கோர் புள்ளிகள் அடிப்படையில் தாதியர் பட்டப்படிப்பிற்கு தெரிவாகின்றனர். அமைச்சரின் இந்தத் தீர்மானம் காரணமாக ஆட்சேர்ப்பு தொடர்பான அடிப்படை கல்வி தகுதிகளில் சிக்கல்கள் ஏற்படுகின்றது. அதுமட்டுமின்றி ஏற்கனவே கலைப் பிரிவில் கல்வி கற்ற மாணவர்கள் தாதியர் பட்டப்படிப்பிற்காக விஞ்ஞான பாடத்துடன் தொடர்புடைய விதானங்களை கிரகிக்க முடியுமா என்ற சிக்கலும் இருக்கவே செய்கிறது.” என்றார்.

இலங்கையில் தற்போது க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் விஞ்ஞான பாடங்களில் சித்தியடைந்தவர்களே பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் பல்கலைக்கழகங்களில் தாதியர் பட்டப் படிப்பிற்கும், தாதியர் பயிற்சிக் கல்லூரிகளில் டிப்ளோமா பாட நெறிக்கும் தெரிவாகும் வாய்ப்பை பெறுகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# அகதிகள் தடுத்துவைக்கப்பட்ட நவுறு தீவில் மோதல்கள்

இலங்கையர்கள் உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் அகதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள நவுறு தீவில் இனங்களுக்கு இடையிலான மோதல்கள் அடிக்கடி இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை, ஆப்கானிஸ்தான், ஈரான் போன்ற நாடுகளைச் சேர்ந்த பலர் இங்குள்ள முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு இடையிலான இன முரண்பாட்டை தணிப்பதற்கான நடவடிக்கைகளை அவுஸ்ரேலிய குடிவரவு திணைக்கள அதிகாரிகளும், சட்டத்தரணிகளும் மேற்கொண்டு வருவதாக அவுஸ்ரேலிய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

ஏற்கனவே அவுஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவிலும் இவ்வாறான மோதல்கள் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வாக்காளர் பட்டியலில் மீளாய்வுப் பணிகள்

வாக்காளர் பெயர் பட்டியலின் மீளாய்வுப் பணிகள் இடம்பெற்று வருவதாக தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது.

2012 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர் பட்டியலின் மீளாய்வுப் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

வாக்களிப்பதற்கு தகுதியுடையவர்கள் பெயர்ப்பட்டியில் பதியப்பட்டிருக்காவிடின் அது தொடர்பில் உரிமை கோருவதற்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்பபட்டுள்ளது. அத்துடன் வாக்களிப்பதற்கு தகுதியுடையவர்களின் பெயர்கள் வாக்காளர் பெயர் பட்டியலில் பதிவு செய்யப்பட்டிருப்பின் அது தொடர்பில் ஆட்சேபனை தெரிவிப்பதற்கான சந்தர்ப்பமும் வழங்கப்பட்டுள்ளதாக பிரதித் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

# காணாமல் போனவர்கள் மீண்டும் வீடுதிரும்பினர்

(பருத்தித்துறை)

மந்திகை ஆதார வைத்திய சாலைக்கு கடந்த செவ்வாய் கிழமை சென்று,காணாமல் போனதாக கருதப்பட்ட தாயும் மகளும் மீண்டும் வீடு திரும்பியுள்ளனர்.

கரவெட்டி மாணிக்கவாசக வித்தியாலய வீதியில் வசித்த கோபிநாத் நித்தியா (வயது-26) கோபிநாத் றதீசனா (வயது-1) ஆகிய இருவருமே காணாமல் போனதாக நெல்லியடி பொலிஸில் முறையிடப்பட்டிருந்தது.

மாமி, மருமகளுக்கிடையில் ஏற்பட்ட முறுகலைஅடுத்து நித்தியா தனது மகளுடன் வீட்டை விட்டு வெளியேறி விசுவமடுவிலுள்ள தனது சிநேகிதியின் வீட்டில்தங்கியிருந்துள்ளார்.

விசுவமடுவில் இருந்து தற்போது மீண்டும் வீட்டுக்கு கூட்டிவரப்பட்ட நிலையில், நெல்லியடி பொலிஸாருக்கு இதுபற்றி தகவல் கொடுக்கப்பட்டுள்ளது.

குடும்பத்தகராறு காரணமாக எனது மனைவி பிரிந்து சென்றிருந்தார் என்றும் இவர்கள் கடத்தப்படவில்லை என்றும் கணவன் உறுதிபட தெரிவித்தார். (116)

# சவுதியில் துன்புறுத்தலுக்குள்ளான 400 இலங்கை பணிப்பெண்கள் தவிப்பு

சவுதி அரேபியாவுக்கு பணிப் பெண்களாகச் சென்று பல்வேறு துன்புறுத்தல்களின் பின்னர் எஜமானரிடம் இருந்து தப்பி வந்த நானூறுக்கும் அதிகமான இலங்கை பணிப்பெண்கள் உலேய்லா நகரில் உள்ள முகாமில் தங்கியுள்ளனர்.

தாம் நாடு திரும்ப உதவுமாறு குறித்த பெண்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது குறித்து சவுதி அரேபியாவில் உள்ள இலங்கைத் தூதரகம் தகவல் தருகையில் அவர்களை உடனடியாக இலங்கைக்கு திருப்பி அனுப்புவதற்கான சட்ட நடைமுறைகள் இல்லை.

பாதிக்கப்பட்டவர்கள் பெண்கள் பாதுகாப்பு அமைப்புக்களிடம் கையளிக்கப்பட்டு, அவர்களின் ஊடாகவே நாடு திரும்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்..

முகாமில் தங்கியுள்ள பெண் களை மீட்பதற்கான நடவடிக்கை களை துரிதமாக மேற்கொள்வதாக இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணிமனை தெரிவித்துள்ளது.

# இனம்தெரியாத சடலம் களுகங்கையில் மீட்பு

(கொழும்பு)

களுத்துறை தெற்குப் பிரதேசத்தில் களுகங்கையில் இனம் தெரியாத நபர் ஒருவரின் சடலம் மிதந்த நிலையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இச்சடலம் 50 வயதுடைய ஆண் ஒருவரின் சடலம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். சடலம் தற்போது நாகொடை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. களுத்துறை தெற்குப் பிராந்திய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# படகுச்சேவையின் நேர அட்டவணை

(யாழ்ப்பாணம்)

குறிகாட்டுவானில் இருந்து நெடுந்தீவுக்கான படகுச் சேவையின் நேர அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

தினமும்நெடுந்தீவிலிருந்து காலை 6.30 மணிக்கு குமுதினிப் படகும் காலை 7.30 மணிக்கு தனியார்படகும் மாலை 2.30 மணிக்கு குமுதினியும் சேவையில் ஈடுபடும் அதேவேளை குறிகாட்டுவானிலிருந்து தினமும் 3.00 மணிக்கு தனியார் படகும், மாலை 4.30 மணிக்கு குமுதினி படகும் சேவையில் ஈடுபடும்.

குமுதினி படகு வியாழக்கிழமைகளில் சேவையில் ஈடுபடாது இச்சேவையினை தனியார் படகுகள்மேற்கொள்ளும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஞாயிற்றுக்கிழமைகளில் நெடுந்தீவிலிருந்து காலை 6.30 மணிக்கு குமுதினி படகும், மாலை 2.30 மணிக்கு குமுதினி படகும்குறிகாட்டுவானுக்கான சேவையில் ஈடுபடும்

குறிகாட்டுவானிலிருந்து காலை 10 மணிக்கும் மாலை 4.30 மணிக்கும் குமுதினி படகு சேவையில் ஈடுபடும் டிஎன்றும் இந்நேர அட்டவணை இன்று முதல் நடைமுறைக்கு வருவதாகவும் தற்காலிகமானதுமாகும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# குடும்பப்பெண் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

வசாவிளான் கோணாவளையைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தாய் ஒருவர் தூக்கிட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டிருக்கிறார்.

நேற்று முன்தினம் மாலை 6 மணிக்கு வீட்டுவளையில் தூக்கில் தொங்கிய நிலையில் கண்ட தனது மனைவியை அயலவரின் உதவியுடன் அச்சுவேலி வைத்தியசாலைக்குக்கொண்டுசென்ற போது அவர் மரணமானதாக அவரின் கணவனால் தெரிவிக்கப்பட்டு மரண விசாரணைக்காக சடலம் யாழ்.போதனாவைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

ஜெகராஜா யோகேஸ்வரி (வயது-34) என்பவரே இவ்வாறு தூக்கிட்டு மரணமானவராவார் குடும்பத்தகராறு காரணமாக இவர் தூக்கிட்டுக்கொண்டதாகப் பொலிஸ் விசாரணையின் போது தெரியவந்துள்ளது.

மல்லாகம் நீதிமன்ற நீதவான் முகமட் கஸீர் மரண விசாரணை மேற்கொண்டதுடன் சடலத்தை உறவினரிடம் ஒப்படைக்குமாறும் உத்தரவிட்டார். (இ)

# இந்தியாவில் உணவு அருந்திய 13 இலங்கையர்கள் சுகயீனம்

இந்தியா, பல்ரம்பூரில் அசுத்தமான உணவை உட்கொண்டதாகக் கூறப்படும் இலங்கையைச் சேர்ந்த 13 சுற்றுலாப் பயணிகள் சுகயீனமடைந்துள்ளனர். இவர்களில் 3 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பல்ரம்பூரிலுள்ள ஹொட்டலொன்றில் தங்கியிருந்த இச் சுற்றுலாப் பயணிகள், காலை நேர உணவை உட்கொண்ட பின்னர் சுகயீனமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உணவு விஷமடைந்ததன் காரணமாகவே இந்நிலைமை ஏற்பட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். இருப்பினும் வெளியிலிருந்து பெறப்பட்ட உணவின் காரணமாகவே இந்நிலைமை ஏற்பட்டதாக விடுதி உரிமையாளர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

# வெட்டுக்காயங்களுடன் சிகிச்சை பெற்றவர் மரணம்

(வவுனியா)

வெட்டுக்காயங்களுடன் சிகிச்சை பெற்றுவந்த வவுனியா, தோணிக்கல், பொதுக் கிணறு வீதிப் பகுதியில் வசித்த 67 வயதுப் பெண ஒருவர் மரணமடைந்துள்ளார். தலை மற்றும் மார்புப் பகுதிகளில் வெட்டுக்காயங்களுடன் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார். இப்பெண் கடந்த வெள்ளிக்கிழமை வெட்டுக்காயங்களுடன் மீட்கப்பட்டார்.

வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக பின்னர் அநுராதபுர வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

வெட்டுகாயங்களுக்கு உள்ளான இரவு, இப்பெண் அவரது உறவினர் ஒருவர் வீட்டில் இருந்ததாகப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளதாகவும் சந்தேக நபர் பொலிஸாரிடமிருந்து தப்பிச் சென்றுள்ளதாகவும் வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளார்.

# இலங்கை அகதிகளுக்கு குடியுரிமை சான்றிதழ்

இந்தியா, இராமேஸ்வரம் நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள இலங்கை அகதிகளில் 50 பேருக்கு பிறப்புச் சான்றிதழ்களும் 130 பேருக்கு குடியுரிமைச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், 60 பேருக்கு இலங்கை கடவுச் சீட்டுக்களையும் இலங்கை அரசாங்கம் நேற்று வழங்கியுள்ளது.

இதேவேளை, இலங்கையில் தமிழ் உத்தியோகபூர்வமான மொழியாகக் காணப்படாதபோதே இந்த அகதிகள் தமிழ் நாட்டின் கரையோரப் பகுதிகளில் அகதிகளாக தஞ்சம் கோரியுள்ளதாக பிரதி உயர்ஸ்தானிகர் ஆர்.கே.எம்.ஏ.ராஜ்கருணா தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 ஒக்ரோபர் 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.